பக்கங்கள் 20

20/=

Registered as a Newspaper in Srilanka

17

# எதிரொலி

Ethiroli

Raja Bojun

Sri Lankan Buffet

Liberty Arcade,

No 282, R.A.De Mel Mawatha Colombo 03.

Tel. 4 71 61 71 / 2577097-8 web : rajabojun.lk

10-16 ஒக்ரோபர் 2018

வாரஇதழ்








உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்

# ‘சி.வி.வி’யின் கசாயம் கசப்பது ஏன்?

மத்திய அரசில் கிட்டத்தட்ட முழுமையான பங்காளர்களாக த.தே கூட்டமைப்பின் பிரதிநிதிகளும் இணைந்து செயற்படத்தொடங்கிய பிறகு, மாகாண அரசியலில் மக்களின் அபிலாசைகளோடு இணங்கி செயற்படுவதற்கு முனைந்த வடக்கின் முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனை நோக்கி தமிழ் மக்களின் இயல்பான அபிமானம் ஈர்க்கப்பட்டது. எந்தவொரு கட்சியிலும் அடிப்படை உறுப்பினராக இல்லாதிருந்த போதிலும், தமிழர் உரிமைகளுக்கான அரசியல் தொடர்ச்சியை அண்மித்த பொதுவாழ்வின் நிலைப்பாடுடைய – தலைமைப்பொறுப்பொன்றிலிருக்கும் முன்னோடியாக சி.வி.வியை வடக்கு மக்கள் கணித்தனர்.



●செந்தூரி

வடக்கு மாகாணசபையின் இறுதி வாரங்கள் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. தேர்தல் காலங்களில் மட்டும் விழிப்பு பெறுகின்ற மக்களும், தேர்தல்களுக்காக மட்டும் விழிப்புக்கு கொண்டுவரப்படுகிற மக்களும் தத்தமது அன்றாட வயிற்றுப் பாட்டுக்கான பிழைப்பாதாரத்தில் கவனத்தோடிருக்க - நிகழ்சூழல் அரசியல் அவதானிப்புடைய மிகச் சொற்ப விகிதமுள்ள மக்களேனும் ஊகிக்க முடியாத ஆச்சரியங்களையும் - தர்மசங்கடங்களையும் தனக்குள் புதைத்துக்கொண்டபடி நகர்ந்துகொண்டிருக்கின்றது, வடக்கு மக்களுக்கான அரசியல்.

2013 ற்குப் பின்னான ஐந்து வருடங்களில் வடக்கின் அரசியல் சூழமைவு, சாதாரணமாக தீர்மானிக்கும் சக்தியாகவுள்ள வடக்கு மாகாணத்தின் பெரும்பான்மை மக்களான தமிழ் பேசும் இனங்களிடமிருந்து கைப்பற்றப்பட்டு, அரச முகவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ள இடரை விரித்துரைக்கும் நியாயப்பாடுகளே இப்பத்தி.

## 01 கூட்டமைப்புக்கான மாற்று: மக்கள் மனங்களில் கிளர்ந்தது ஏன்?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மக்கள் ஆணை, அதற்கான வாக்கு வங்கியின் பலத்தினால் தீர்மானிக்கப்பட்டது, என்பது எடுகோளாகவே இருக்கட்டும்.

ஆனால், கூட்டமைப்புக்கான வாக்கு வங்கி தமிழீழ தேசிய ஆயுதப் போராட்டத்தின் வெற்றிகளாலும் - போராட்டத்துக்கான நியாயமான அறத்தினாலும் கட்டமைக்கப்பட்ட பிரபஞ்ச உண்மை.

இந்த அழகிய தீவில், இருமொழிகளைப் பேசுகிற வெவ்வேறான இரு தேசிய இனங்கள் அமையவேண்டியதற்கான வலுவான தேவைப்பாடுகள், ஆயுதப் போராட்ட அமைப்புக்களின் தோற்றத்துக்குரிய 80 களின் முற்பகுதியில் தோன்றியவையல்ல? சுதந்திர இலங்கைக்கு உடனடிப்பின்னான அரசியல் உரிமைகளின் பங்கீட்டின் போதே, இலங்கைத்தீவு தமிழினத்துக்கான தனித்த நிர்ணயங்களை ஏதோவொரு எதிர்காலத்தில் கொடுத்தேயாக வேண்டுமென்ற கடப்பாடு முகிழ்ந்திருந்தது.

சிங்கள-தமிழ் இனங்களுக்கிடையிலான இணக்கப்பாட்டினை எட்ட முடியாத துர்ப்பாக்கியத்தினை கொண்டுவருவதற்கு காரணமான சிங்கள பௌத்த பேரினவாதத்தின் பேராசை, தமிழர்களின் போராட்ட வடிவங்களில் காலத்துக்கேற்ற மாற்றங்களை கேட்டுப்பெற்றுக்கொண்டது.

தந்தை செல்வநாயகம் காலத்தில் சத்தியாக்கிரகிகள் மீது கல்லெறிந்து மண்டையுடைத்து இரத்தம் கண்டவர்களின் ருசி, முள்ளிவாய்க்காலில் நிராயுதபாணிகள் மீது கொத்துக்குண்டுகளும் - இரசாயன ஆயுதங்களும் பயன்படுத்தி இனவழிப்பு நிகழ்த்துமளவுக்கு வளர்ந்து வெறியாகி வியாபித்தது.

தன்னுரிமைகளைக் கேட்டு நிற்கிற இனமொன்றின் உரிமைக்குரலை அடைத்துவிடுவதற்கான வழிகளை சிங்களஅரசு தீர்மானித்த போது, உரிமைக்கான கேள்விகள் தொடர்ச்சியுறுவதற்கான வழிகளைத் தமிழர் தரப்பும் தீர்மானிக்க நேர்ந்தது, என்பதே 1948 பெப்ரவரி முதல் 2009 மே வரையான காலக்கோட்டின் வரிசை.

ஆயுத மௌனவிப்புக்கு பிறகான தமிழர் தரப்பின் ஏகப்பிரதிநிதிகளாக தம்மை சுயதம்பட்டம் செய்து கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழர்களின் உரிமைக்கான குரலாக இருப்பதற்கு பதிலாக பதவிகளை தக்கவைப்பதற்கான அரசசார்பு அரசியலை முன்னெடுக்கத் தலைப்பட்டதோடு, சர்வதேசங்களிடமிருந்து குறிப்பாக இந்துசமுத்திர பிராந்திய வல்லாதிக்க நாட்டமுடைய நாடுகளிடம் அரசுடன் இணைந்த சரணாகதி நிலைப்பாட்டை வெளிப்படுத்தியதுடன் - ஒரே தேசம் - ஒரே இனம் - பிரதிபலிப்புடைய ஒற்றையாட்சிக்கான மறைமுகமான சம்மதத்தை வெளிப்படுத்தி நின்றது.

தமிழர்களின் சுயநிர்ணய கோரிக்கையின் பேருருபமாக - அதீத மக்கள் புரட்சியுடன், பீறிட்டெழுந்த தமிழீழ ஆயுதப்போராட்டத்தினதும் - எண்ணற்ற தமிழ் இளைஞர்களினது உயிர்தியாகத்தினதும் உயரிய இலட்சியத்தின் மீது, தமிழருக்கான அரசியல் சக்தியாக கட்டியெழுப்பப்பட்ட த.தே. கூட்டமைப்பு, உரிமைப்போராட்டத்துக்கு முற்றிலும் மாறுபாடுடைய இணக்க அரசியல் செய்வதை, தமிழர் தரப்பு சகித்துக்கொள்ள தயாரில்லை.

மிக முக்கியமாக, தமிழீழ விடுதலைப்புலிகளை மறுதலிப்பதற்கும் - போர்க்குற்ற விசாரணைகளுக்காக காலஅவகாசத்தை இலங்கையரசுக்கு வழங்குவதற்கான வக்காளத்துக்கும் - இனவழிப்புத் தீர்மானத்துக்கு தண்டனை கோரும் பன்னாட்டு முறையீடுகளில் காட்டும் அசிரத்தைக்கும், த.தே.கூட்டமைப்பு சற்றும் சளைக்காத நிலைப்பாட்டில் இருப்பதை, வெவ்வேறு அரசியல் பின்னணிகளோடு தொடர்புபடுத்திப்பார்க்க வேண்டிய கட்டாயத்துக்குள் தமிழ் வாக்காளர்கள் தள்ளப்பட்டனர்.

த.தே.கூட்டமைப்பில் இணைப்பிலுள்ள அரசியல் கட்சிகளை ஏதேச்சதிகாரம் செய்ய முனைகின்ற தமிழரசுக்கட்சி, வயோதிபரான இரா.சம்பந்தனின் பிறகான இரண்டாம்நிலை தலைமைத்துவத்துக்கான போட்டியில் பலவீனப்பட்டு தள்ளாடி நிற்கின்றது.

சகோதர கட்சிகளிலிருந்து ஆள்பேரம் - வாக்கரசியல் - அரச ஆதரவு நிலைப்பாடு - அபிவிருத்தியில் பங்குடைமை - பாதீட்டு ஒதுக்கீடுகளில் ஆர்வம் - நாடாளுமன்ற / மாகாணசபை உறுப்பினர்களின் ஊழல் - அரசவளங்களின் துணையுடன் சுயதொழில் ஆகிய பீடைகள், த.தே.கூட்டமைப்பின் மக்கள் பிரதிநிதிகளை சொந்த மக்களிடமிருந்து தொலைவில் கொண்டுசேர்த்தன.

மத்திய அரசில் கிட்டத்தட்ட முழுமையான பங்காளர்களாக த.தே கூட்டமைப்பின் பிரதிநிதிகளும் இணைந்து செயற்படத்தொடங்கிய பிறகு, மாகாண அரசியலில் மக்களின் அபிலாசைகளோடு இணங்கிச் செயற்படுவதற்கு முனைந்த வடக்கின் முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனை நோக்கி தமிழ் மக்களின் இயல்பான அபிமானம் ஈர்க்கப்பட்டது. எந்தவொரு கட்சியிலும் அடிப்படை உறுப்பினராக இல்லாதிருந்த போதிலும், தமிழர் உரிமைகளுக்கான அரசியல் தொடர்ச்சியை அண்மித்த பொதுவாழ்வின் நிலைப்பாடுடைய - தலைமைப் பொறுப்பொன்றிலிருக்கும் முன்னோடியாக சி.வி.வியை வடக்கு மக்கள் கணித்தனர்.

மக்களின் எண்ணங்களுக்கு மாறாக, வடக்கு முதலமைச்சர் மீது நம்பிக்கையில்லாத தீர்மானம் கொண்டுவர ஒருபகுதி மாகாணசபை உறுப்பினர்கள் முயன்றபோதும் - மக்கள் பேரியக்கமாக அறிவிக்கப்பட்ட ‘தமிழ் மக்கள் பேரவை’யின் அழைப்பினை ஏற்றும் வடக்கின் தமிழ் மக்கள், சி.வி.வியின் பின்னால் அணிதிரண்டமையை, த.தே.கூட்டமைப்பின் நிறைவேற்றுக்குழு கொஞ்சமும் ரசிக்கவில்லை.

கூட்டமைப்புக்கான மாற்று தலைமையை முன்மொழிகிறார் என்றும், முதலமைச்சர் வாய்ப்பளித்த கூட்டமைப்புக்கு இரண்டகம் இழைக்கிறார் என்றும் இன்னமும் பல வசைவுகளால், சி.வி.வியை விமர்சித்த கூட்டமைப்பின் முதலமைச்சருக்கு எதிரான அணி, வாய்ப்புக்கிடைத்த ஊடகங்கள் வழியாக முதலமைச்சருக்கு எதிரான பிரசாரங்களை மக்களிடம் சேர்ப்பிக்க முனைந்து கொண்டேயிருக்கிறது.

அரச ஊடகங்கள், கூட்டமைப்பின் ஊடகங்கள், ஒட்டுக்குழுக்களின் ஊடகங்கள், முகவரியற்ற இணைய ஊடகங்கள் - சி.வி.விக்கு எதிரான புரட்டுப்பரப்புரைகளில் கைகோர்த்து இணைந்து வீறுநடை போட்டுக்கொண்டிருக்கின்றன.

தங்களால் அறிமுகம் செய்யப்பட்டு - முதலமைச்சராக ஏகோபித்த மக்களபிமானம் பெற்ற சி.வி.வியின், தமிழ்த்தேசிய அரசியல் நிலைப்பாடுகள் தவறானவை என்ற கருத்தை மக்களிடம் திணிக்க முயலும் த.தே.கூட்டமைப்பு - உண்மையின் விளம்பலாக தங்களது தற்சமய நிலையை சுயபரிசோதனை செய்து தூயநிலை தமிழ்த் தேசிய அரசியலுக்குதிரும்ப முயலாமை, ஈழத்தமிழர்களின் ஆகப்பிந்திய வெட்கக்கேடுகளில் முதன்மையானது.

(12ஆம் பக்கம் பார்க்க)

எதிரொலி
Ethiroli

அம்பலம் பதிப்பகம்,
இல. 241, கைதடி – மானிப்பாய் வீதி,
உடுவில், யாழ்ப்பாணம்.
ethirolimedia@gmail.com, 0212243818

# வெட்டு[ம்/ப்] புள்ளி

தரம் 5 மாணவர்களுக்கு நடத்தப்பட்ட புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகள் கடந்தவாரம் வெளியாகிவிட்டன. வழக்கம் போல இந்தப் பரீட்சை நடைபெறும் போதும், பெறுபேறுகள் வெளியாகும் போதும் எழுகின்ற சலசலப்புக்கள் இம்முறையும் உண்டாகத் தவறவில்லை. ஆனாலும் மாணவர்களைப் பந்தயக் குதிரைகளாக்கி, அவர்களை வெறுமனே மனன இயந்திரங்களாக்கும் இந்தப் பரீட்சையை ஒழிக்க எவரும் தயாராகவில்லை. இப்போது விமர்சித்து விட்டு, அடுத்த புலமைப்பரிசில் பரீட்சைக்காக மாணவர்களைத் தயார் செய்யக் கிளம்பிவிடும் மனோபாவமே நம்மிடம் அதிகளவில் உண்டு.

இம்முறை புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளால் உண்டான அதிர்வு கொஞ்சம் விசித்திரமானது. பொதுவாக ஒரு பாடத்தில் 75 புள்ளிகளுக்கு மேல் பெற்றால், அதற்கு அதிசிறப்புத் தேர்ச்சி கணிக்கப்பட்டு, 'ஏ' சித்தி வழங்கப்படும். ஆனால் இந்த முறை புலமைப்பரிசில் பரீட்சையில் 80 புள்ளிகளை தலா இரண்டு வினாத்தாள்களிலும் பெற்று, கூட்டுத் தொகையாக 160 புள்ளிகளுக்கு மேல் எடுத்திருந்த மாணவர்கள் கூட வெட்டுப்புள்ளியைத் தாண்ட இயலாதவர்களாகிப் போகினர். அதுவும் புலமைப்பரிசில் பெறும் மாணவர்களின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்க முடிவெடுக்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு அறிவித்த பின்னர், இந்தளவு தூரம் வெட்டுப்புள்ளி உயர்த்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு வருடமும் 15 ஆயிரம் மாணவர்களே புலமைப்பரிசில் பெற தெரிவுசெய்யப்படுவர். அதற்கேற்பவே வெட்டுப்புள்ளியும் தீர்மானிக்கப்படும். இந்த வருடத்தில் இருந்து 30 ஆயிரம் மாணவர்கள் புலமைப்பரிசில் பெறத் தகுதி பெறுவர் என அறிவிக்கப்பட்டதால், கடந்த வருடத்தை விடவும் வெட்டுப்புள்ளி மிகக் கணிசமான அளவு குறைக்கப்படும் எனவே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அதற்கு மாறாக கடந்த வருடத்தில் 155 ஆக இருந்த வெட்டுப்புள்ளி இம்முறை 164 ஆக (இது யாழ்ப்பாணத்தை மட்டும் அளவீடாகக் கொண்ட தரவு) 9 புள்ளிகளால் மிக உச்சத்துக்குப் போயுள்ளது. அப்படியானால் அரசு அறிவித்ததைப் போல இம்முறை 30 ஆயிரம் பேருக்குப் பதிலாக 15 ஆயிரம் மாணவர்களுக்கே புலமைப்பரிசிலை வழங்கவுள்ளது அல்லது 30 ஆயிரம் மாணவர்கள் 164 புள்ளிகளுக்கு மேல் எடுத்துள்ளனர் என்னும் முடிவுக்கே வரவேண்டியுள்ளது.

அரச நிர்வாகப் பணிகளுக்கு உள்வாங்கப்பட்ட பட்டதாரிகளுக்கு பணியில் நிரந்தரத்துவம் வழங்கும் நோக்கில் தடை தாண்டல் பரீட்சைகள் நடைபெறுவதுண்டு. அந்தப் பரீட்சையில் 40 புள்ளிகளுக்கு மேல் பெற்றால் குறித்த பட்டதாரி பணியில் நிரந்தரமாக்கப்படுவார். வேடிக்கை என்னவெனில் அப்படியான தடைதாண்டல் பரீட்சைக்கான கேள்விகளை விடவும் புலமைப்பரிசிலுக்கான கேள்விகள் எந்த விதத்திலும் குறைந்தவை அல்ல. ஆனால் படித்துப் பட்டம் பெற்ற, சுமார் 25 வயதைத் தாண்டியவர்களுக்கு ஒவ்வொரு வினாத்தாளிலும் 40 புள்ளிகளைப் பெற்றாலே பணி நிரந்தரம் கிடைத்துவிடக்கூடிய சூழலில், வெறும் 10 வயது மாணவர்கள் 80 புள்ளிகளைப் பெற்றாலும், புலமைப்பரிசிலைப் பெறமுடியாத சோகத்தை எங்கே சொல்லி அழுவது? இனியாவது இப்படி அபத்தமான முடிவுகளைத் தருகின்ற இந்தப் பரீட்சையை இலங்கையின் கல்வி முறைமையில் இருந்து அகற்ற எல்லோரும் இணையவேண்டும். ஆனால் அது பெரும்பாலும் சாத்தியமற்ற விடயம் என்பதே கசப்பான உண்மை.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

■ மருகன்



# இந்த அவமானம் தேவையா?

சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் சர்வதேசத் திரைப்பட விழாவின் ஆரம்ப நிகழ்வு, யாழ் கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது. மண்டபத்திலே இருந்தவர்கள் எல்லோரும் கல்விமான்கள். அதில் பெரும்பாலும் எதை எப்படிப் பேசுவதென்பதை நன்கு கற்றவர்கள். பலர் யாழ்.பல்கலைச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். தூதரக அதிகாரிகள், பொது நிறுவன மேலாளர்கள். தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள். இப்படிப் பலர் கூடியிருந்த சபைக்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் அழைக்கப்பட்டார். அவர் சிறப்புரை ஆற்றத் தொடங்கினார். ஆங்கிலத்திலும் பின்னர் தமிழிலும் உரையாற்றிதன்மொழிப்புலமையை வெளிப்படுத்தத் தொடங்கினார். ஆனால் பானையில் இருப்பது தானே அகப்பையில் வரும். எதைப் பற்றியும் ஆய்ந்து அறியாமல் நுனிப்புல் மேயும் பழக்கம், அவரை அரங்கில் அவமானப்படும் நிலைக்கு கொண்டு சென்றது. குறித்த விழாக்குழுவின் தலைவர் கலாநிதிப் பட்டம் பெற்றவர். கலாநிதி அல்லது முனைவர் பட்டத்தை ஆங்கிலத்தில் 'டாக்டர்' என்று சொல்வார்கள். அதேபோல மருத்துவரையும் டாக்டர் என்றே ஆங்கிலத்தில் சொல்வார்கள். இருமொழிப் புலமை காட்ட நினைத்த அந்தப் பிரமுகர் இந்த இரண்டு 'டாக்டர்களுக்கும்' வித்தியாசம் தெரியாமல், விழாக்குழுத்தலைவரை "விழாக்குழுவின் தலைவர் மருத்துவர் ..... அவர்களே" என்று போட்டாரே ஒரு போடு. அவ்வளவுதான் சபை முழுதும் சிரிப்பலை. அத்தோடு விட்டாரா, முழு நீளத்திரைப்படம் ஒன்றை, வார்த்தைக்கு வார்த்தை "குறும்படம், குறும்படம்" என்று உச்சரித்தார். குறும்படத்துக்கும், முழு நீளத் திரைப்படத்துக்கும் வித்தியாசம் தெரியாமல், சர்வதேசத் திரைப்பட விழாவின் பிரதம விருந்தினராக வந்திருந்தார்.

அந்தப் பிரமுகர் வேறு யாருமல்ல, யாழ்.மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆர்னோல்ட் தான் இப்படி தடுமாறியவர்.

எல்லோரும் சரியாக நடப்பதுவும் இல்லை. சரியாகச் செய்வதும் இல்லை. எல்லோருக்கும் எல்லாம் தெரிய வேண்டும் என்ற அவசியமும் இல்லை. ஆனால் இப்படி ஒரு சமூகத்தைப் பிரநிதிப்படுத்துபவர் தனக்குத் தெரியாத விடயம் இடம்பெறும் ஒரு சபைக்குப் போக முன்னர் தெரிந்தவர்களிடம் கேட்டு ஒரு குறிப்பெடுத்துக் கொண்டு செல்வது நல்லது. அது மட்டுமல்ல அவமானங்களில் இருந்தும் தப்பலாம். அன்று அவர் பேசியது ஆவணமாக உண்டு. காலத்தால்அழியாது இடம்பெற்றுவிட்டது. அவர் தன்னைக் காட்டியது மட்டுமில்லாது தன்னைச் சார்ந்தவர்களுக்கும் ஒரு இழுக்கை ஏற்படுத்திவிட்டுச் சென்றிருக்கிறார் என்பது பலரது அபிப்பிராயம். மக்கள் தெரிவு சரியானதாக இருக்காத விடத்து இதைப்போன்று பல கேவலமான விடயங்கள் நடக்க வாய்ப்புண்டு. தனிநபர் எடுக்கின்ற முடிவுகளில் இப்படியான விபரீதங்கள் வர நிறைய வாய்ப்புண்டு. அவரை இப்பதவிக்குப் பரிந்துரைத்தவர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த முக்கியஸ்தர் ஒருவர் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

ஒரு சபைக்குச் செல்பவன் எப்படிச் செல்ல வேண்டும் என்பதற்குப் பல விளங்கங்கள் புராண இலக்கியத்திலே சொல்லப்பட்டாலும் திருக்குறள் அதை அழகாக எடுத்தியம்புகிறது. தான் செல்லுகின்ற சபை பற்றித் தெரியாதவிடத்து மௌனம் அவனது மொழியாக இருந்தல் சிறப்பென்கிறது திருக்குறள். இல்லாவிடில் அச்சபை பற்றிய விடயங்களை அறிந்தவரை அறிந்து அவரை அணுகி அவரிடம் குறிப்பெடுத்துப்போய் பேசுவது ஒருவனின் திறமை. அதை வடமாகாண சபை முதல்வர் சி.வி. விக்கினேஸ்வரன் அழகுறச் செய்கிறார். அவர் புத்திமான். தான் என்ன பேசப் போகிறேன் என்றதை அவர் அறிந்து பேசுகிறார். சரியான தரவைத் தருகிறார். தனது அறியாமையினால் சபையைக் குழப்புவதை அவர் தவிக்கிறார். அவர் புத்திமான். எனவே அவர் பலவான்.

ஆனால் அவரை அச்செயலுக்காக விமர்சித்தவர் அவரது மாணவன் சுமந்திரன் என்று முதலமைச்சரே பொது மேடை ஒன்றில் சொல்லி இருக்கிறார். அதைக் கேட்க சுமந்திரனும் அங்கிருந்தார். தனது குருவை விமர்சிக்கத் தெரிந்தவருக்குத் தனது மாணவர்களை எப்படி ஒழுங்குபடுத்த வேண்டும் என்று தெரியவில்லை போலும்.

முதலரமைச்சர் மட்டுமல்ல தூதரக அதிகாரிகள் பேசும்போது இந்த முறைமையைக் கடைப்பிடிப்பதைக் காணலாம். அவர்கள் திட்டமிடாது மேலெழுந்தவாரியாகத் தமிழ் நாட்டு அரசியல்வாதிகள் பேசுவது போலப் பேசுவதில்லை. தான் பேசப் போவதை ஆவணமாக்கி வைத்துக் கொண்டே பேசுகிறார்கள். அவர்கள் கவனம் முழுக்க முழுக்கத் தானும், தான் சார்ந்த நிறுவனமும் வெட்கித் தலை குனியக் கூடாது என்பதில் மட்டுமல்ல மக்களையும் குழப்பத்தில் வீழ்த்தி விடக் கூடாது என்பது அவர்கள் தெளிவு. தான் தோன்றித்தனமாகப் பொது மேடைகளிலே பேசுவதன் அபத்தத்தை அனுபவித்தவர் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன்.

> **எல்லோரும் சரியாக நடப்பதுவும் இல்லை. சரியாகச் செய்வதும் இல்லை. எல்லோருக்கும் எல்லாம் தெரிய வேண்டும் என்ற அவசியமும் இல்லை. ஆனால் இப்படி ஒரு சமூகத்தைப் பிரநிதிப்படுத்துபவர் தனக்குத் தெரியாத விடயம் இடம்பெறும் ஒரு சபைக்குப் போக முன்னர் தெரிந்தவர்களிடம் கேட்டு ஒரு குறிப்பெடுத்துக் கொண்டு செல்வது நல்லது. அது மட்டுமல்ல அவமானங்களில் இருந்தும் தப்பலாம். மக்கள் தெரிவு சரியானதாக இருக்காதவிடத்து இதைப்போன்று பல கேவலமான விடயங்கள் நடக்க வாய்ப்புண்டு.**

மழை பெய்து இன்னும் தூவானம் அடங்கவில்லை.

இனியாவது விழாக்களுக்கு விருந்தினர்களாகப் போவோர் முன்னாயத்தம் செய்து போவதுடன், தாங்கள் அவமானப்படுவதில் இருந்து தப்பிக்கவும், பார்வையாளர்களுக்கான மரியாதையைச் செய்யவும் முடியும்.

எதிரொலி
Ethiroli
09 ஒக்ரோபர் - 2018



# தடுமாறும் கொழும்பு

■ ஊர்க்குருவி

கொழும்பு அரசியலில் இப்பொழுது பேசப்படும் ஒரு விடயம், எதிர் வரும் வரவு செலவுத் திட்டம் தோற்கடிக்கப்படுமா இல்லையா என்பதுதான்.

பிரதமர் ரணில் மற்றும் அவரது கீழான ஆட்சியை கருவறுக்கத் துடித்துக் கொண்டிருக்கும் ஜனாதிபதி மைத்திரி அதற்காக உள்ளூரக் காய்களை நகர்த்த ஆரம்பித்துள்ளார்.

மைத்திரியின் விசேட பணிப்பின் பேரில் அவரது கட்சியின் சகாக்கள் ஏற்கனவே பல தடவைகள் மகிந்தவை சந்தித்துப் பேசியுள்ளனர். பட்ஜெட்டைத் தோற்கடித்து இடைக்கால அரசை ஏற்படுத்தும் மைத்திரியின் திட்டம் நல்லது தான் என்றாலும் மகிந்த தரப்பு அவரை நம்பத் தயாரில்லை. 'சரி நாங்கள் வந்தாலும் அடுத்த முறை மைத்திரி ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட சம்மதிக்க மாட்டோம்' என்று அழுத்தம் திருத்தமாக ஒரு தகவல் மகிந்த ராஜபக்சவினால் அவர்களுக்குச் சொல்லப்பட்டுள்ளது.

ஆனால் சமல் ராஜபக்ச அல்லது கோத்தபாய ராஜபக்ச ஆகியோர்களில் ஒருவரை ஜனாதிபதியாக வர ஏற்பாடுகளை செய்து பிரதமர் பதவியில் அமரும் ஒரு உத்தேச யோசனையும் மைத்திரிக்கு உள்ளது. ஆனால் இவை அனைத்தும் வெறும் பேச்சளவில் மட்டுமே உள்ளன.

மைத்திரியைப் பொறுத்தவரை அவரது குறிக்கோள் எப்படியாவது அடுத்த ஜனாதிபதியாகக் கதிரையில் அமர வேண்டும் என்பது தான். அதற்கு கட்சி அதிகாரம் மட்டும் கையில் இருந்தால் போதாது மக்கள் பலமும் இருக்க வேண்டும் என்று அவர் விரும்புகின்றார். மக்கள் பலம் தன்னிடம் இல்லை என்பதால் தான் அவர் மகிந்த தரப்பினை அரவணைக்கப் பார்க்கின்றார். மகிந்த தரப்பு இவருடன் சமரசத்துக்கு வராத பட்சத்தில் அவர்கள் மீதான வழக்குகளை மைத்திரி இறுக்கக் கூடும். ஆனால் அப்படி இறுக்கி ராஜபக்சக்களை ஸ்தம்பிக்கச் செய்தாலும் ஐக்கிய தேசியக் கட்சி தனக்கு ஆதரவு வழங்குமா என்று மைத்திரிக்கு உள்ளூர ஒரு கேள்வி எழாமல் இல்லை. இதனால் தான் கட்சிக்காரன் காலில் விழுவதை விட சண்டைக்காரன் காலில் விழுவது நல்லது என மைத்திரி நினைக்கின்றார்.

### உலகம் எந்தப் பக்கம்?

உள்நாட்டில் ஓர் அரசியல் மாற்றத்தினை ஏற்படுத்துவதற்கு மைத்திரி தயாரானாலும் அதற்கு சர்வதேசத்தின் ஆதரவு கிட்டுமா என்பது கேள்விக்குரியது.

உண்மையில் மைத்திரி - ரணிலின் கூட்டாட்சியில் சீனா இலங்கைக்குள் வெகுவாக அத்துமீறி விட்டது எனக் கருதும் சர்வதேசம் இங்கு ஆட்சி மாற்றத்தினை விரும்புவது என்னவோ உண்மை தான். ஆனால் அவர்கள் இந்த இருவருக்கும் பதிலாக மாற்றுச் சக்தியாக மகிந்த ராஜபக்சவை விரும்பவில்லை. "புதிய சக்தி ஒன்று ஆட்சியில் அமர வேண்டும். அந்த சக்தி சீனாவுக்கு முழு எதிரான சக்தியாக இருக்க வேண்டும்" என்று மேற்குலகம் விரும்புகின்றது. அந்த சக்தி இரண்டு பிரதான கட்சிகளிலிருந்து வரக்கூடாதென்று மேற்குலகம் விரும்புவதாக மேலும் தெரிகின்றது.

மறுபுறம் மகிந்த ராஜபக்சவை இந்தியப் பிரதமர் அழைத்துப் பேச்சுக்களை நடத்தியதில் ஜனாதிபதி மைத்திரி கடும் அதிருப்தியில் இருக்கின்றார் என சொல்லப்படுகின்றது. இலங்கையில் ஆட்சி மாற்றம் நடைபெற வேண்டும் என்ற மேற்குலகின் விருப்புக்கு பிராந்தியத்தில் இந்தியா மறைமுகமாக ஆதரவு வழங்குவதை மைத்திரி கடுமையாக ஆட்சேபித்து தனக்கு நெருக்கமானவர்களிடம் கருத்துக்களைப் பரிமாறியிருக்கின்றார்.

> "சமல் ராஜபக்ச அல்லது கோத்தபாய ராஜபக்ச ஆகியோர்களில் ஒருவரை ஜனாதிபதியாக வர ஏற்பாடுகளை செய்து பிரதமர் பதவியில் அமரும் ஒரு உத்தேச யோசனையும் மைத்திரிக்கு உள்ளது. ஆனால் இவை அனைத்தும் வெறும் பேச்சளவில் மட்டுமே உள்ளன. மைத்திரியைப் பொறுத்தவரை அவரது குறிக்கோள் எப்படியாவது அடுத்த ஜனாதிபதியாகக் கதிரையில் அமர வேண்டும் என்பது தான். அதற்கு கட்சி அதிகாரம் மட்டும் கையில் இருந்தால் போதாது மக்கள் பலமும் இருக்க வேண்டும் என்று அவர் விரும்புகின்றார்."

ஏற்கனவே தன்னைக் கவிழ்க்க தமக்கு அபகீர்த்தியை ஏற்படுத்த இந்தியா சதி செய்வதாக மைத்திரி கருதுகின்றார். முன்னதாக தனது அலுவலகப் பிரதானி இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சம்பவத்தில் அதற்கான முறைப்பாட்டைச் செய்த ஒருவர் இந்தியப் பிரஜை என்பதால் அந்த சம்பவத்தின் பின்னணியில் இந்தியா இருப்பதாக மைத்திரி திடமாக நம்புகின்றார். மறுபுறம் அண்மையில் வெளியாக தனக்கெதிரான கொலைச்சதித் திட்டத்திலும் இந்தியப் பிரஜை ஒருவர் சம்பந்தப்பட்டிருந்தார். இப்படியான நிகழ்வுகளில் இந்தியாவின் பெயரும் அடிபடுவதால் புதுடில்லிக்கு எதிராகக் கடும் அதிருப்தியில் இருக்கும் மைத்திரி, ஜே.ஆர் பாணியில் இந்தியாவுக்குப் பதிலடி கொடுப்பதற்கு ஏற்பாடுகளை செய்து வருவதாகவும் அறியப்படுகின்றது.

### ஆப்பிழுத்த குரங்கு!


இந்த சர்ச்சைகளுக்கு மத்தியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆப்பிழுத்த குரங்கின் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. ஆட்சியைப் பிடிக்க அல்லது ஆட்சியை தக்க வைக்க மைத்திரியும் ரணிலும் போராடிக் கொண்டிருக்கும் நிலையில் புதிய அரசியலமைப்புக்கு ஆதரவைத் தேடும் பரிதாப நிலைமைக்கு கூட்டமைப்புத் தள்ளப்பட்டுள்ளது.

இந்த ஆட்சிக் காலத்தில் ஏதாவது செய்ய வேண்டுமென்ற தேவை மைத்திரி, ரணிலை விட கூடுதலான தேவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஏற்பட்டுள்ளது. ஆனால் இப்போதுள்ள சூழ்நிலையில் புதிய அரசியலமைப்புக்கு ரணிலின் ஆதரவு கிடைத்தாலும் மைத்திரியின் ஆதரவு கிடைக்குமா என்பது சந்தேகத்துக்குரிய விடயமாகும். ஏனெனில் புதிய அரசியலமைப்புக்கு ஆதரவு வழங்குவதா இல்லையா என்ற கூட்டு எதிர்க்கட்சியின் முடிவைப் பொறுத்தே மைத்திரியின் முடிவும் அமையப் போகின்றது. ஏனெனில் தனது அரசியலைத் தக்க வைத்துக் கொள்ள மைத்திரி அப்படித்தான் நடந்து கொள்ள வேண்டும்.

இதனால் தான் அரசுக்கு கண்மூடித்தனமான ஆதரவை வழங்கப் போய் ஆப்பிழுத்த குரங்கின் நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருக்கின்றது. இதற்கு அப்பால் முதலமைச்சர் விக்கினேஸ்வரன் தனிவழி சென்றால் கூட்டமைப்பின் நிலை இன்னும் மோசமடையாலாம்.

கொழும்பு அரசியலின் இந்த ஸ்தம்பித நிலைமை எதிர்காலத்தில் சீராகப் போவதில்லை என்பதையே கோடி காட்டுகின்றன. ■





# தலைக்கு ஏறும் விலை

▪மலர்மகன்

ஒவ்வொரு வருடமும் அரசாங்கமோ தனியார் துறையோ சம்பளத்தை அதிகரிக்கிறதோ இல்லையோ ஆனால், சிகையலங்கரிப்பு நிலையங்களின் சேவைக் கட்டணங்கள் ஒவ்வொரு வருடமும் அதிகரித்துச் செல்வது வாடிக்கையாகி விட்டது.

இற்றைக்கு சில வருடங்களுக்கு முன்னர் முடி வெட்டுதல், ஷேவ் எடுத்தல், மொட்டை போடுதல் என்று என்று வாய்க்கு வந்தபடி அழைக்கப்பட்ட முடியிறக்கும் தொழிலுக்கும், அதனைச் சார்ந்த வர்களுக்கும் ஒரு அந்தஸ்தை வழங்கிய சொல் சிசையலங்காரம்/அழககங்கள் ஆகும். அந்த அந் தஸ்தைப் பெற்றுக்கொடுத்தவர்கள் புலிகள் என்ற ஞாபகம் இன்னும் அனைவர் மனங்களிலும் உள்ளது. அது மட்டுமன்றி வீடு சென்று சேவகம் செய்வது கூட முற்றாகத் தடை செய்யப்பட்டது. இவை எல்லாம் அந்தத் தொழிலுக்குரிய மரியா தையை வழங்க வைத்தன.ஆனால், சிகையலங்கார நிலையங்களை நடத்துவோர் பலரும் மக்களைப் பற்றிச் சிந்திக்கத் தவறுகின்றனர் என்பதையே தற் போதைய அவர்களது செயல்கள் வெளிப்படுத்தி வருகின்றன.

## ஞாயிறுதான் விடுமுறை

பொது மக்கள் அனைவருக்கும் ஞாயிறு தினம் தான் பொதுவான விடுமுறை நாளாகும். முக்கியமாக அரச ஊழியர்களுக்கு அந்த ஒரு நாள்தான் தேவாமிர்த்தம். முன்பு எல்லாம் அந்தத் தினங்களில் சிகையலங்கரிப்பு நிலையங்கள் வாடிக்கையா ளர்களால் திணறும். ஆனால், இவற்றைப் பற்றி எல்லாம் சிந்திக்காது ஞாயிறு தினங்களில் சிகைய லங்கரிப்பு நிலையங்களை மூடுவதென்று முடி வெடுத்தது சங்கத்தின் கூட்டமைப்பு. இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் எவ்வளவு கோரிக்கைளை முன் வைத்தும், பத்திரிகைகளில் எழுதியும் 'ஞாயிறு லீவு' என்ற முடிவை அவர்கள் மாற்றவேயில்லை. இதனால் அரச ஊழியர்கள் தலைமுடியை வெட்டு வதென்றாலோ, ஷேவ் எடுப்பதென்றாலோ பணி முடிந்து, சலூன்களில் நீண்ட நேரம் காத்திருந்தே செய்ய வேண்டியுள்ளது.

இன்றைய கால அளவில், ஒரு அரச ஊழியரின் வருமானத்திலும் பார்க்க, சிகையலங்கரிப்பு நிலைய உரிமையாளர்கள் பெறும் வருமானம் அதிகம் என் பது பொதுவான அபிப்பிராயம். இது மகிழ்ச்சியான விடயம். அவர்களது வாழ்க்கைத் தரம் உயர வேண் டும். இதில் மாறுபட்ட கருத்துக்கு இடமில்லை. ஆனால், அது நியாயமான முறையில் இருக்க வேண்டும் என்பதே இந்தப் பத்தியின் நோக்கமாகும். புதிய சேவைக் கட்டணங்களின் அடிப்படையில் தலை முடி அகற்றி, ஷேவ் செய்ய 300 ரூபா இனி வரும் நாட்களில் வசூலிக்கப்படப்போகிறது. ஒரு ஷேவ் செய்ய மட்டும் 130 ரூபா. ஒரு சாதாரண ஒரு வேளை உணவுப் பார்சல் 80 ரூபா (மரக்கறி) ஆக இருக்கும் பொழுது, ஒரு நாள் கூலி 1000 ரூபா அல்லது 1200 ஆக இருக்கின்ற சூழலில் இந்த அதிகரிப்பு அதிகமே. நல்லாட்சி (?) அரசில் விலை வாசி மிக அதிகம் தான். ஆனால், அதற்கான சம்பள அதிகரிப்புக்களை அரசாங்கம் இன்னும் செயற் படுத்தாத நிலையில் இந்த அதிகரிப்புக்கள் தேவையா என்பதே மக்களின் ஆதங்கம்.

## நமக்கு நாமே

இன்று சிகையலங்கரிப்பு நிலையங்களில் கடமை யாற்றும் இளைஞர்கள் பலர் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் மேற்குலக நாடுகளுக்கும் செல்வ த்தையே விரும்புகின்றனர். காரணம் அங்கு றியால், தினார்களிலும், டொலர்களிலும் பெறும் வரு மானம் மிக அதிகம் .இது அவர்களின் விருப்பம். ஆனால், வெளிநாடுகளில் வசிக்கும் நம்மவர்களோ இதையும் குறையாகவே பார்க்கின்றார்கள். அங்கும் அதிக சேவை கட்டணங்களே என்று அங்கலாய்க் கிறார்கள். இதன் விளைவு மிசின்களை பாவித்து" "நமக்கு நாமே" என்று முடியலங்காரம் செய்வதா கவும் கூறுகின்றார்கள். மகாத்மா காந்திகூட இப்படி சுயசார்பு சவரம் செய்து வந்துள்ளார். சேவைக் கட்டணங்கள் அதிகரிக்கும் போது மக்கள் எடுக்கும் தீர்மானங்கள் இப்படியாக அமைந்து விடுகின்றன. இன்று திரையரங்குகள் வெறிச்சோடியும், மூடப் பட்டு வரவும் காரணம் என்ன அதிகரித்த கட்ட ணங்கள் தான். அங்கு நுழைவுச்சீட்டு ஒரு மனிதனின் அரைநாள் வருமானம். வாங்கும் தின்பண்டங்களோ மிகுதி. அரைநாள் வருமானத்தோடு போய்விடும். இப்படியான நிலையில்தான் 50 ரூபா இறுவட்டு ஒன்றுடன் வீட்டுக்குள் திரை அரங்கை அமைத்துக் கொள்கின்றனர். இந்த நிலைதான் எதிர்காலத்தில் சிகையலங்கரிப்பு நிலையங்களுக்கும் வரக்கூடும்.

“ புதிய சேவைக் கட்டணங்களின் அடிப்படையில் தலை முடி அகற்றி, ஷேவ் செய்ய 300 ரூபா இனிவரும் நாட்களில் வசூலிக்கப்படப்போகிறது. ஒரு ஷேவ் செய்ய மட்டும் 130 ரூபா. ஒரு சாதாரண ஒரு வேளை உணவுப் பார்சல் 80 ரூபா (மரக்கறி) ஆக இருக்கும் பொழுது, ஒரு நாள் கூலி 1000 ரூபா அல்லது 1200 ஆக இருக்கின்ற சூழலில் இந்த அதிகரிப்பு அதிகமே. நல்லாட்சி (?) அரசில் விலை வாசி மிக அதிகம் தான். ஆனால், அதற்கான சம்பள அதிகரிப்புக்களை அரசாங்கம் இன்னும் செயற்படுத்தாத நிலையில் இந்த அதிகரிப்புக்கள் தேவையா என்பதே மக்களின் ஆதங்கம். ”

## சந்திப்பும் விலையேற்றமும்

யாழ். மாநகர மேயரை சிகையலங்கரிப்பாளர்கள் சங்கத்தின் நிர்வாகிகள் சந்தித்ததாக, அண்மையில் பத்திரிகையில் ஒரு செய்தி வெளி வந்தது. அதன் பிறகே இந்த விலை மாற்றப்பட்டியல் வெளிக்கு வந் திருக்கிறது. ஆனால், இதற்கு மாநகர முதல்வர் கார ணம் என்று கூறுவதில்லை. மாறாக இப்படியான சந்திப்புக்களில் விலை அதிகரிப்புக்களை மேற் கொள்ளும் அவர்கள் மீது சில அழுத்தங்களை பிர யோகிக்க முயன்றிருக்க வேண்டும். போக்குவரத்தில் விலையதிகரிப்புக்களை மேற்கொள்ள அரசு அனு மதியை இலகுவில் வழங்காது. அதுபோல இவர் களின் ஆண்டாண்டு அதிகரிப்புக்களை கட்டுப் படுத்தும் வழிமுறைகளை ஆராய வேண்டும். இதற் குரிய கடிவாளங்களை கையில் எடுக்க வேண்டும். எல்லா மக்களையும் சமமாக மதித்தல் வேண் டும். குடிசையும், கோபுரமும் உள்ளது உண் மைதான். ஆனால், குடிசை கூட இல்லாமல் வாழும் மக்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இதற்குரிய நடவடிக்கைகளை அரச அதிகாரிகள் உடன் செயற்படுத்த வேண்டும் என்பதே சாதாரண மக்களின் வேணவா ஆகும். ■



சரவம் செய்துகொள்ளும் காந்தி

## அறிவோம்

# காட்டு ராஜாவா சிங்கம்?



சிங்கத்தை ஏன் காட்டுக்கு ராஜா என்கிறோம் என்ற கேள்வி, காலம் காலமாக விவாதிக்கப்படுகிறது. சிங்கமா? புலியா? வலிமையான விலங்கு என்ற மற்றுமொரு கேள்வியும் உள்ளது. சிங்கமும் புலியும் பூனைக் குடும்பத்தைச் சேர்ந்த பெரிய விலங்குகள். இரண்டு விலங்குகளின் வலிமையைச் சோதிக்க வேண்டும் என்றால், இரண்டும் ஒரே வயதாக இருக்க வேண்டும். ஒரே எடையாக இருக்க வேண்டும். இரண்டும் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். அப்படி இருக்கும் சிங்கமும் புலியும் சண்டை போட்டு ஜெயித்தால்தான், எது வலிமையானது என்பதைச் சொல்ல முடியும்.

மிகப் பழங்கால ரோம் நகரில் சிங்கம், புலி சண்டைகள் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன. அவற்றில் எல்லாம் புலிகளே வெற்றி பெற்றிருப்பதாகக் குறிப்புகள் உள்ளன.

சிங்கங்கள் பொதுவாகக் கூட்டமாகச் சேர்ந்தே வேட்டையாடுகின்றன. புலிகள் தனியாகவே வேட்டையாடுகின்றன. இன்று சிங்கங்கள் ஆபிரிக்காவிலும் ஆசியாவில் இந்தியா உட்பட ஒரு சில இடங்களிலுமே வசிக்கின்றன.

புலிகள் ஆசியாவில்தான் காணப்படுகின்றன. அதனால் சிங்கங்களும் புலிகளும் ஒரே காட்டில் வசிப்பது வெகு குறைவாகவே இருக்கிறது. அப்படி வசிக்கக்கூடிய இடங்களிலும் சிங்கங்கள் சமவெளிப் பகுதியில்தான் வாழ்கின்றன. புலிகள் காட்டுக்குள் வாழ்கின்றன. சிங்கம் புலியின் எல்லைக்குள்ளோ புலி சிங்கத்தின் எல்லைக்குள்ளோ நுழைவதில்லை. இவற்றை எல்லாம் வைத்துப் பார்க்கும்போது, சிங்கத்தின் உருவம் கம்பீரமாக இருப்பதாலும் அழகான பிடரி முடி இருப்பதாலும் காட்டின் ராஜா என்று பெயர் வைத்திருப்பார்கள் என்று தோன்றுகிறது.

அதனால்தான் காட்டு ராஜா சிங்கம் என்று நம்மால் கதைகளைப் படிக்கவும் எழுதவும் முடிகிறது. நான் ஒரு காட்டு ராஜா என்பது அந்தச் சிங்கத்துக்கும் தெரியாது, சிங்கம்தான் காட்டு ராஜா என்று புலிக்கும் தெரியாது.

## சவாலே சமாளி

கீழே உள்ள குறிப்புகள் ஒரு நாட்டைக் குறிக்கின்றன.

அது எந்த நாடு என்பதைக் கண்டு பிடியுங்கள்.

1. வட அமெரிக்காவின் கிழக்குக் கடற்கரையில் வட அட்லாண்டிக் கடலில் அமைந்துள்ளது.
2. 1505 ஆம் ஆண்டு ஸ்பெயினைச் சேர்ந்த ஜூவான் டி பெர்முடேஸ் என்பவரால் இந்தத் தீவு கண்டுபிடிக்கப்பட்டது.
3. இதன் தலைநகரம் ஹாமில்டன்.
4. தன்னாட்சியும், தனி அரசியலமைப்புச் சட்டமும் உண்டு. என்றாலும் ஒப்பந்தப்படி இதன் பாதுகாப்புக்கும், வெளியுறவுக்கும் இங்கிலாந்துதான் பொறுப்பு.
5. இந்த நாட்டின் சின்னம் சிவப்புச் சிங்கம்.
6. வாழை, காய்கறிகள், பூக்கள், பால் பொருட்கள், தேன் போன்றவை முக்கியமான விளைபொருட்கள்.
7. 7 பெரிய தீவுகளும் ஏராளமான சிறிய தீவுகளும் கொண்ட நாடு.

## குட்டிக் கதை

# தாய்க் கரடியும் குட்டிக் குரங்கும்



ஒரு காட்டில் வாழும் கரடி, தனது குட்டிகளுக்காகத் தேனடைகளை எடுத்துக்கொண்டு வந்தது. அது குகைக்குள் நுழைந்ததும் விளையாடிக் கொண்டிருந்த குட்டிகள், தாயைக் கண்டவுடன் ஓடிவந்தன. அம்மாவைக் கட்டிப் பிடித்து முத்தமிட்டன. அப்போது அழுகுரல் கேட்டது.சுற்றிலும் தேடிப் பார்த்தது தாய்க் கரடி. எதுவும் கண்ணில் படவில்லை.

தேனடைகளைப் பிரித்து, குட்டிகளுக்குக் கொடுத்தது. மீண்டும் அழுகுரல் கேட்டது.

"யாரது? ஏன் இந்த அழுகை?" என்று சத்தமாகக் கேட்டது தாய்க் கரடி. பாறைக்குப் பின்னாலிருந்து ஒரு குரங்குக் குட்டி எட்டிப் பார்த்தது.

"அம்மா, என்னை ஒன்றும் செய்துவிடாதீர்கள். என் பெற்றோரைத் தேடிக் காடு முழுவதும் அலைந்தேன். ஆனால் கண்டுபிடிக்க முடியவில்லை. என்னை ஒரு பெரிய விலங்கு துரத்தியதால் இந்தக் குகையில் வந்து ஒளிந்துகொண்டேன்" என்று அழுதது குரங்குக் குட்டி.

"அழாதே, முதலில் இந்தத் தேனடைகளைத் தின்று பசியாறு. உன் பெற்றோர் வரும்வரை நீ இங்கேயே என் குட்டிகளுடன் பாதுகாப்பாகத் தங்கிக்கொள்ளலாம்" என்று அன்போடு கூறியது தாய்க் கரடி.

"அம்மா, இது யார்?" என்று கேட்டபடி கரடிக் குட்டிகள் ஓடிவந்தன.

"இவன் உங்கள் தம்பி. இனிமேல் இங்கேதான் இருப்பான். ஒற்றுமையாக இருங்கள் சரியா?" என்றது தாய்க் கரடி.

மாதங்கள் சென்றன. ஆனால் குரங்குக் குட்டியைத் தேடி யாரும் வரவில்லை. பெரியவனாகும்வரை இங்கேயே இருக்கட்டும் என்று முடிவு செய்தது தாய்க் கரடி.

ஒருநாள் குட்டிகளை அழைத்து, "இன்று என்னோடு உணவு தேடுவதற்கு நீங்களும் வர வேண்டும்" என்றது தாய்க் கரடி."நீங்கள் கொடுக்கும் உணவே போதும். நான் வர மாட்டேன்" என்றது குரங்குக் குட்டி.

"வளரும் வரைதான் அம்மா உணவு கொடுக்க வேண்டும். வளர்ந்த பிறகு நீங்களே உணவு தேடுவதுதான் நல்லது. அதுதான் இயற்கை. உணவளிப்பது மட்டுமல்ல ஒரு தாயின் கடமை, உணவு தேடக் கற்றுக் கொடுப்பதும்தான்." என்றது தாய்க் கரடி .

குட்டிகள் ஆர்வத்தோடு அம்மாவுடன் சென்றன. கரடிக் குட்டிகளுக்குத் தனியாகவும் குரங்குக் குட்டிக்குத் தனியாகவும் உணவு தேடும் பயிற்சியை அளித்தது தாய்க் கரடி. மறுவாரம் ஆற்றில் மீன்களைப் பிடித்துக்கொண்டு, குகைக்குத் திரும்பியது தாய்க் கரடி. குட்டிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு திசையில் அமைதியாக அமர்ந்திருந்தன.

"கண்மணிகளே, ஏன் இப்படி உட்கார்ந்திருக்கிறீர்கள்? மீன்களைச் சாப்பிடலாம் வாருங்கள். குரங்குக் குட்டியே உனக்கு செவ்வாழைப் பழம் கொண்டு வந்திருக்கேன் பார்" என்று அன்போடு அழைத்தது தாய்க் கரடி.

"அம்மா, தேனடைகளைக் குரங்குத் தம்பி மட்டும் சாப்பிடப் பார்த்தான். அண்ணன் எங்களுக்கும் வேண்டும் என்று சொன்னவுடன் குரங்குக்குக் கோபம் வந்துவிட்டது. உடனே அண்ணனை அடித்துவிட்டான். நீங்களே பாருங்கள், அடித்ததில் அண்ணனின் கன்னம் வீங்கிவிட்டது" என்றது ஒரு கரடிக் குட்டி.

'ஐயோ! குட்டிகளுக்குப் பேதம் பார்க்கும் பருவம் வந்துவிட்டது. இனிமேல் குரங்கு எங்களோடு இருப்பது இருவருக்குமே நல்லதல்ல' என்று நினைத்த தாய்க் கரடி, "இதற்கெல்லாமா சண்டையிடுவது? சாப்பிட்டு உறங்குங்கள். காலையில் பேசிக்கொள்ளலாம்" என்று சமாதானமாகக் கூறியது. மறுநாள் காலை குட்டிகள் கண் விழிப்பதற்குள், குரங்கை அழைத்துக்கொண்டு புறப்பட்டது தாய்க் கரடி.

"குரங்குக் குட்டியே, இப்போது நீ தனியாக வசிக்கும் நிலைக்கு வந்துவிட்டாய். இனிமேலும் நாம் சேர்ந்து வாழ்வது நல்லதல்ல. நீ தனியாக வசிக்கும் அளவுக்கு உனக்குப் போதிய பயிற்சி அளித்துவிட்டேன். இந்த மலையடிவாரத்தில் உன் இனத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள், அவர்களுடன் சேர்ந்துகொள். நேரம் கிடைக்கும்போது உன்னைப் பார்க்கிறேன்" என்று சொல்லிவிட்டு, குகையை நோக்கித் திரும்பியது தாய்க் கரடி.

## ஞானஜோதிகள்

# பாரே வியக்கும் பாரதிதாசன்

தமிழ்த்தாய் பெற்றெடுத்த தவப்புதல்வர் தமிழுக்கென்று தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தவர், தமிழக மக்களுக்கு எழுச்சி உணர்வை தூண்டியவர், புரட்சிக்கவிஞர், பாவேந்தர் என்ற பெயர்களால் அழைக்கப்பட்டவர் 'தமிழுக்கு அமுதென்று என்று பேர்' இந்த வரிகளுக்கு சொந்தக்காரர், தமிழாசிரியர், கவிஞர், அரசியல்வாதி, திரைக்கதாசிரியர், எழுத்தாளர் என பல பரிமாணங்களில் தனது திறமையை நிருபித்தவர்தான் பாரே வியக்கும் பாரதிதாசன்

இவர் புதுச்சேரியில் 1891ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி கனகசபை மற்றும் லக்குமி அம்மையாருக்கு மகனாகப் பிறந்தார். இவரின் இயற்பெயர் கனககப்புரத்தினம்.

இவர் தனது 18ஆவது வயதிலிருந்து தமிழாசிரியராகப் பணியாற்றினார்.

பாரதியாரின் மீது கொண்ட பற்றினால் தனது பெயரைப் பாரதிதாசன் என மாற்றிக்கொண்டார். தேச சேவகன், புதுவை கலைமகள், தேசோபகாரி, தேசபக்தன், ஆனந்தபோதினி, சுதேசிமித்திரன், புதுவை முரசு, குயில் போன்ற இதழ்களின் ஆசிரியராகப் பணியாற்றினார்.

1954 ஆம் ஆண்டு புதுச்சேரியில் சட்ட மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இவரின் அரசியல் வாழ்க்கை அதிக நாள் நீடிக்கவில்லை, சட்ட மன்றத் தேர்தலில் 1960 இல் தோல்வியைத் தழுவினார்.

கடவுள் மறுப்பு, சாதி மறுப்பு, மத எதிர்ப்பு போன்ற தலைப்புகளிலேயே தனது படைப்புகளை எழுதினார். கவிதை, இசைப்பாடல், நாடகம், புதினம், சிறுகதை, கட்டுரை என பல வடிவங்களில் படைப்புகளை எழுதினார்.

தமிழுக்குப் பெரும் தொண்டாற்றிய பாவேந்தர் 1964 ஆண்டு தனது 73 ஆம் வயதில், காலமானார்.




10ஆவது பிறந்தநாள் வாழ்த்து



மல்லாகம் கோட்டைக்காட்டைச் சேர்ந்த பகிரதன் - விஜயரூபி தம்பதியரின் புதல்வன்

கேதாரன்

தனது 10ஆவது பிறந்த தினத்தை தனது இல்லத்தில் 09.10.2018 அன்று வெகு விமர்சையாகக் கொண்டாடினார்.

இவரை மனதார வாழ்த்துகிறது 'எதிரொலி' குடும்பம்



# சரணடைந்த நாமல்

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் கட்சிமாநாடு நவம்பர் 2 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது. இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தடல்புடலாக இடம்பெற்று வருகின்றன.

குறிப்பாக கட்சியின் தலைமைப்பொறுப்பை மஹிந்த ராஜபக்ஷ அன்றைய தினம் ஏற்கவுள்ளதால் - வெளிநாட்டு இராஜதந்திரிகளையும் கூட்டத்துக்கு அழைக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா பறந்திருந்த பஸில் ராஜபக்ஷகூட - விழாவை வெற்றிகரமாக நடத்திமுடிப்பதற்காக முன்கூட்டியே நாடு திரும்பி தீயாக வேலைசெய்துவருகிறார்.

இந்நிலையில் பஸில் ராஜபக்ஷவுக்கும், நாமல் ராஜபக்ஷவுக்குமிடையிலான பனிப்போரை முடிவுக்கு கொண்டுவருவதற்கு கூட்டுஎதிரணியின் இளம் எம்.பிக்கள் சிலர் முயற்சி எடுத்து வருகின்றனர்.

அரசுக்கு எதிராக கொழும்பை முற்றுகையிடும் போராட்டத்தை நடத்துவதற்கான பொறுப்பு நாமலிடமே ஒப்படைக்கப்பட்டது. பஸிலால் முன்வைக்கப்பட்ட யோசனைகளை நாமல் ஏற்கவில்லை. இதனால், கடும் சீற்றத்தோடு அமெரிக்கா பறந்தார் பஸில்.

நாமலின் வழிநடத்தலின்கீழ் நடைபெற்ற ஆர்ப்பாட்டமும் வெற்றியளிக்கவில்லை. இந்நிலையிலேயே நாமலுக்கும், பஸிலுக்குமிடையில் மூன்றாம் தரப்பொன்றின் மத்தியஸ்தத்துடன் அண்மையில் சந்திப்பு இடம்பெற்றது.

முரண்பாடுகளை கைவிட்டு - இணங்கிச் செயற்பட இருவரும் பச்சைக்கொடி காட்டியதாக தகவல்.






# மேர்வினின் புதிய அவதாரம்

மஹிந்த ஆட்சியின்போது அடாவடி அரசியலுக்கு பேர்போன அரசியல்வாதியான மேர்வின் சில்வா தற்போது மீண்டும் அதிரடி காட்ட ஆரம்பித்துள்ளார்.

பொதுத்தேர்தலில் போட்டியிட வேட்புமனு வழங்கப்படாததால் கடுப்பாகிய மேர்வின் சில்வா, செயற்பாட்டு அரசியலுக்கு 'குட்பாய்' சொல்லத் தயாரானார்.

எனினும், அதற்கு அவர் இதயம் இடமளிக்கவில்லை. மக்கள் சேவை எனும் கட்சியை ஆரம்பித்தார். மகனுக்கு பொதுச் செயலாளர் பதவியை கொடுத்து அழகுபடுத்திப் பார்த்தார்.

ஆனால் எதிர்பார்த்தளவு கட்சி வெற்றி நடைபோடவில்லை. இதனால், சிங்கள பேரினவாத அமைப்புகளுடன் கைகோர்த்து - இனவாத அரசியலில் இறங்கியுள்ளார் மேர்வின்.

பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி இடம்பெற்றுவரும் போராட்டங்களுக்கு இவரே தலைமை வழங்கிவருகிறார்.

# அரசியல் குத்துக்கரணம் விரைவில்...

மலையகத்தைத் தளமாகக் கொண்டியங்கும் முக்கிய தொழிற்சங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர்கள் இருவர் கட்சித் தாவலுக்கு தயாராகிவிட்டதாக உள்வீட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மத்திய மாகாணசபையின் பதவிக்காலம் முடிவடைந்த கையோடு இதற்கான பேரம் பேசும் படலம் ஆரம்பித்துவிட்டதாகவும், தேர்தலில் களமிறங்க வாய்ப்பளிக்கப்படும் என்ற உத்தரவாதத்தின் அடிப்படையிலேயே 'பல்டி' இடம்பெறவுள்ளதாகவும் அறியமுடிகின்றது.

மேற்படி தொழிற்சங்கத்தில் நெடுநாளாக அங்கத்தவர்களாக இருக்கின்றபோதிலும் தமக்கு உரிய இடம் வழங்கப்படவில்லை என்றும், கடந்தமுறை மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பளிக்கப்படவில்லை என்றும் தமக்கு நெருக்கமானவர்களிடம் இவர்கள் உள்ளக்குமுறல்களை கொட்டித்தீர்த்துள்ளனர்.

ஹட்டனில்விரைவில்ஊடகவியலாளர்மாநாடொன்றை நடத்தி தமது நிலைப்பாட்டை இவ்விருவரும் அறிவிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும், தேர்தல்அறிவிக்கப்பட்டபின்னர்தாவல்இடம்பெறுமானால் அது கட்சிக்குப் பாதிப்பாக அமைந்துவிடும் என்பதால் இருவரையும் சமரசப்படுத்தும் முயற்சியில் சம்பந்தப்பட்ட தொழிற்சங்கத்தின் உறுப்பினர் ஒருவர் ஈடுபட்டுள்ளார் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

எதுஎப்படியோ அரசியலில் எதுவும் நடக்கலாம். இறுதிநேரத்தில் முடிவுகள் மாறலாம். அதுவரை பொறுத்திருந்து பார்ப்போம்!



# இறுதி அஸ்திரமும் புஷ்வாணமாகுமா?

நல்லாட்சியின் ஆயுட்காலம் முடிவடைவதற்குள் எப்படியாவது ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திவிட வேண்டும் என்ற முயற்சியை மஹிந்த அணி இன்னும் முழுமையாகக் கைவிடவில்லை. அவ்வப்போது எதையாவதுசெய்து அரசுக்கு நெருக்கடி கொடுத்துவருவதுடன், தெற்கு அரசியல் களத்தையும் பெரும் பரபரப்பாகவே வைத்துள்ளது.

பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக்கொண்டுவந்து ஆட்சிக்கவிழ்ப்பை செய்வதற்கு மஹிந்த அணி வகுத்த வியூகம் இறுதிநேரத்தில் ஐக்கிய தேசியக்கட்சியால் முறியடிக்கப்பட்டது. அது மட்டுமல்ல அரச எதிர்ப்புப் பேரணியும் எதிர்பார்த்தளவு வெற்றியை கூட்டுஎதிரணிக்கு வழங்கவில்லை. இதனால், தேர்தலொன்றுவரும்வரை வழிமீது விழி வைத்துக்காத்திருக்கின்றது மஹிந்த அணி.

நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி அரசின் 2019 ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் நவம்பர் மாதம் முன்வைக்கப்பட்டு அதுமீது டிசம்பர் 8 ஆம் திகதி இறுதிவாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

எனவே, பட்ஜட்டுக்கு எதிராக வாக்களித்து அதை தோற்கடிப்பதன் ஊடாக ஆட்சிமாற்றமொன்றை ஏற்படுத்தலாம் என மஹிந்தவுக்கு ஆலோசனை வழங்கி அவரின் ஆதரவைக்கோரியுள்ளது சுதந்திரக்கட்சியின் 15 பேர்கொண்ட அணி.

வரவு- செலவுத்திட்டம் முன்வைக்கப்படவுள்ளதால், அதை ஒரு துருப்பாக பயன்படுத்தி - குறைந்தபட்சம் பிரதமர் பதவியையாவது கைப்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கலாம் என்ற யோசனையை மஹிந்தவிடம் எத்திவைத்துள்ளனர். இதுகுறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடமும் பேச்சு நடத்த தயாராக இருப்பதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

"நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்பட்டபோதும் இறுதிநேரத்தில் கூட்டுஎதிரணியின் காலை வாரும் வகையில் அரசு பக்கமுள்ள சுதந்திரக் கட்சி அணி செயற்பட்டது. எனவே, முதலில் மைத்திரி பக்கமுள்ள அணியின் ஆதரவை பெறுங்கள். அது உறுதியாக கிடைக்குமா என்பதை உறுதிபடுத்திக் கொள்ளுங்கள்.

அதன்பின்னர் பிரதமரை மாற்றியமைக்கும் உங்கள் இறுதி முயற்சிக்கு முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகியவற்றின ஆதரவை, அக்கட்சி உறுப்பினர்களுடன் பேச்சு நடத்தி நான் பெற்றுதருகிறேன். கூட்டுஎதிரணின் ஆதரவு என்றும் இருக்கும்" என மஹிந்த தெரிவித்துள்ளார்.

அதேவேளை, 15 பேர்கொண்ட அணி ஜனாதிபதியை சந்தித்துப் பேச்சு நடத்திய பின்னர் மீண்டும் மஹிந்தவைச் சந்திக்கவுள்ளது. அடுத்தவாரமளவில் சந்திப்பு நடைபெறலாம் என அறியமுடிகின்றது.

எதிரொலி
Ethiroli
10 - 16 ஒக்ரோபர் - 2018



● வேதநாயகம் தபேந்திரன்




### நிகழ்வு 1

1970ஆம் ஆண்டு யாழ்நகரின் பிரபலமான கல்லூரி. கல்லூரியின் புகழ்பூத்த அதிபர்களில் ஒருவரான அவர் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகளை நடத்துவதற்கு தயார் நிலையில் இருக்கின்றார்.

யாழ்ப்பாணத்தின் இரு புகழ்பூத்த கல்லூரிகளில் அதிபர் திலகமாக இருந்தார்.

ஒழுக்கம், பண்பாடு,திறமை உள்ள ஆசிரியர் வளத்தைக் கொண்டிருந்து எண்ணற்ற மாணவர்களை மேதைகளாக உருவாக்கியவர். நாடெங்கும் ஏன் உலகெங்கும் அவர்கள் புகழ் பரப்பினார்கள்.

இல்லமெய்வல்லுநர் நிகழ்வு பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாக வேண்டும். நேரம் நெருங்கி விட்டது.

கடிகாரத்தைப் பார்த்தார்.நேரம் ஒரு மணி 55 நிமிடம். பிரதம விருந்தினரான உயர் பதவி வகிக்கும் பழைய மாணவரைக் காணவில்லை.

அணி நடையைப் பார்வையிடும் பீடத்திற்கு ஏறினார். சரியாக 2 மணி என்றதும் கையை அசைத்து சைகை காட்டினார்.

அணி வகுத்து சிலையாக நின்ற மாணவர்கள் அணி நடையைத் தொடங்கினார்கள்.

பாண்ட் இசை முழங்க அணி நடை மைதானத்தை வலம் வரத் தொடங்கியது.

மணி 2.20 இருக்கும் பிரதம விருந்தினர் தனது ஆடம்பரக் காரில் வந்தார்.

அங்கே அணி நடை முடிந்து விட்டிருந்தது.

அவர் அதிபரைப் பார்த்து சேர் நான் வரவிட்டுத் தொடங்கி இருக்கலாம் தானே.

ஆளுமைத் திலகமான அந்த அதிபர் சொன்ன ஒற்றை வசனப் பதில் "நிகழ்ச்சிக்காகத் தான் பிரதம விருந்தினர். பிரதம விருந்தினருக்காக நிகழ்ச்சி அல்ல." வந்திருந்த வி.ஐ.பிக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது.

### நிகழ்வு 2

மாவட்டத்தின் மிக முக்கிய பண்பாட்டு நிகழ்வு. அந்த உயரதிகாரி தான் பிரதம விருந்தினர்.

பிற்பகல் 3 மணிக்கு நிகழ்வு ஆரம்பம். ஆனால் அவரது அமைச்சின் உயரதிகாரிகள் குழு ஒன்று திடீரென கொழும்பிலிருந்து அமைச்சின் வேலைத் திட்டம் தொடர்பாக உரையாட பிற்பகல்1.30 மணிக்கு வந்திருந்தனர்.

உரையாடல் 4 மணித்தியாலம் வரையான நேரத்தைக் கொண்டிருக்கும் எனக் கணித்த திணைக்கள உயரதிகாரி தனது இரண்டாம் நிலை அதிகாரியை பிற்பகல் 2.30 மணி போல நிகழ்வுக்கு தனது சார்பாகச் செல்லுமாறு பணித்தார்.

தொலைபேசியில் விழாக் குழுவுடன் தொடர்பு கொண்டு தனது வருகை தாமதமாகும் காரணத்தைக் கூறினார்.

விழாக் குழுவினரோ தாங்கள் பிந்தி வருவது பரவாயில்லை. காத்திருக்கிறோம்.வாருங்கள் என்றனர். ஆனால் பிரதம விருந்தினரான அந்த உயரதிகாரியோ என்ஒருவருக்காக ஏன் மற்றவர்களது பொன்னான நேரத்தை மண்ணாக்க வேண்டும்.

அதனால் எனது பதிலாளைக் கொண்டு உரிய நேரத்துக்கு நிகழ்வை ஆரம்பியுங்கள். நான் ஒன்றரை மணி நேரத் தாமதத்துடன் வந்து இணைந்து கொள்கிறேன்" என்றார்.

அவருக்குப் பதிலான பிரதிநிதியான அதிகாரியும் நிகழ்வு ஆரம்பத்துக்கு 10 நிமிடங்கள் முன்பதாகச் சென்றார்.

எனவே அவரைப் பிரதிநிதியாகக் கொண்டு சரியாக பிற்பகல் 3 மணிக்கு நிகழ்வு ஆரம்பமானது.

அந்த உயரதிகாரியும் பொது மக்களுக்குரிய அத்தியாவசிய வேலைத் திட்டத்தை முடித்துக் கொண்டு நிகழ்வின் இடையில் கலந்து கொண்டார். நிகழ்வின் முடிவு வரை பொறுமையாக இருந்தார்.

### நிகழ்வு 3

அந்த விழா குறித்த நேரத்துக்கு பிரதம விருந்தினரும் வருகை தர ஆரம்பமானது.

நிகழ்வு தொடங்கி முக்கால் மணி நேரம் கடந்திருக்கும் பிரதம விருந்தினர் விழா அமைப்பாளர்களைக் கேட்டார் "தான் வேறு ஒரு அவசர வேலைக்குப் போக வேண்டியுள்ளது.

தன்னை முற்கூட்டியே உரையாற்ற விடுமாறு கேட்டார். உடனேயே விழாத் தலைவர் அவரை உரையாற்ற இடம் கொடுத்தார்.

அவரும் தனது வித்துவங்களை கொட்டோ கொட்டென்று கொட்டிவிட்டுப் படாரெனப் புறப்பட்டார்.

அந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட ஒருவர் கேட்டார் "ஏன் சேர் இடையில் வெளிக்கிடுகிறீர்கள்" என்று.

"அது பாருங்கோ இந்த இடத்தில் இன்னுமொரு விழாவுக்கும் சீவ் கெஸ்ற்றாக வருவதற்கு உடன்பட்டனான்.

இப்பொழுது அதற்காகத் தான் போகிறேன்" என்றார் அடுத்தவர் நேரம், விழாவின் மகிமை பற்றித் தெரியாது ஓடும் பிரபலங்கள் சிலர் இப்படியும் இருக்கின்றனர் தான்.

### நிகழ்வு 4

அது கிராமத்தின் சாதாரண விழா. ஆனால் அந்த விழா நோட்டீசைப் பார்க்க மலைப்பாக இருந்தது.

விருந்தினர் பட்டியலில் புதுமை என்ற போர்வையில் கோமாளித்தனங்கள் பல இருந்தது.

அதிவிசேட பிரதம விருந்தினர்,விசேட பிரதம விருந்தினர், பிரதம விருந்தினர், முதன்மைச் சிறப்பு விருந்தினர்கள், சிறப்பு விருந்தினர்கள், அதி முதன்மை கௌரவ விருந்தினர்கள், முதன்மை கௌரவ விருந்தினர்கள், கௌரவ விருந்தினர்கள் எனப் பெரும் பட்டாளமே இருந்தது.

விழா தொடங்கியது. பட்டியலில் இருந்த இருபத்தைந்து பேரில் பத்துப் பேர் வரவில்லை.

விழாத் தலைவரான ஊரவர் தனக்குத் தெரிந்த திருக்குறள், ஆத்திசூடி, இன்னும் என்னென்னவோ பழமொழிகள் எல்லாம் சொல்லி முக்கால் மணி நேரம் ஆரவாரமாக முழங்கினார்.

வரவேற்புரை சொல்ல வந்தவர் தலைமையுரை, கருத்துரை, நன்றியுரை எல்லாம் சொல்லி அரை மணி நேரம் வறுத்தெடுத்தார்.

பின்பு கௌரவ விருந்தினர் எழுந்து பட்டியலில் இருந்த 25 பேர் சக தலைவர் யாவரையும் விழித்து முடிய 10 நிமிடம் பிடித்தது.

அவரும் மேலுமொரு 10 நிமிடங்கள் எடுத்தார்.

அறிவிப்பாளரென குர்தா போட்ட குஞ்சு ஒன்று வந்து உரைகளுக்கு வித்துவமும் தத்துவமும் சொல்லி ஆட்களைக் கடுப்பேற்றியது.

நேரம் கரைவதை உணர்ந்த விழாத் தலைவர் அறிவிப்பாளரை அழைத்து இனி பேச வருவோரை இரு நிமிடங்கள் கதைக்குமாறு சொல்லச் சொல்லி ரகசியமாகக் குசுகுசுத்தார்.

அறிவிப்பாளரும் தனது வித்துவங்களைக் குறைத்து இரு நிமிடம் கதைத்தால் போதுமென ஓடர் போடத் தொடங்கினார்.

விருந்தினராக வந்திருந்த சிலருக்கு கடும் வெறுப்பு.

ஓரிருவர் தந்திரமாக எழுந்து நேரம் போய் விட்டது. தனக்கு அவசரமாக அரச பணி ஒன்று வந்திருக்கிறது எனக் கூறி விட்டு வெளியேறினார்.

இப்படியாக நான்கு மணி நேரம் கரைந்தது. நன்றியுரை சொல்ல வந்தவர் வந்த போது கூட்டத்தில் 15 பேரும் வராது. ஆனாலும் தான் பக்கம் பக்கமாக எழுதி வந்த தாள்களை எல்லாம் வாசித்து நன்றியுரைக்கு இருபது நிமிடம் வரை எடுத்து தனது பேச்சுத் திறமையையும் நிரூபித்து விட்ட திருப்தியுடன் விழாவை நிறைவு செய்தார்.

இப்படியான சீரழிவுகளுக்குள் அகப்பட்டு உங்கள் பொன்னான நேரத்தை இழந்திருப்பீர்கள்.

சிலர் எப்போதும் கிரிக்கெற் என்றால் டெஸ்ட் மச் தான் விளையாடுவார்கள். சிலர் வன் டே இன்ரநசனல். மிகவும் அரிதாக சிலர் ருவென்ரி ருவென்ரி தான் விளையாடுவார்கள். நீங்கள் எப்படியோ...?

### நிகழ்வு 5

அது ஒரு புத்தக வெளியீடு. விழா மேடையில் விழாத் தலைவர்,உரையாற்ற வந்த பெரியோர்கள் இருக்க ஆசனம் போடப்படவில்லை.

பேச்சு மேசை ஒன்று மட்டும் போடப்பட்டிருந்தது. ஒவ்வொருவரும் மேடைக்கு ஏறிச் சென்று உரையாற்றி விட்டு இறங்கி வந்து தமது ஆசனங்களில் அமர்ந்து கொண்டார்கள்.

நூலாசிரியர் மேற்கு ஐரோப்பிய நாடொன்றில் வசிப்பவர். அவரை இந்த ஒழுங்கு பற்றிக் கேட்டேன்.

விழா நிகழ்வு மேடையில் நடக்கும் போது மேடையில் இருக்கும் அதிதிகள் சிலர் தமக்குள் கதைத்துக் கொள்ளுவார்கள். ஓரிருவர் ஸ்மார்ட் போனை எடுத்து இணையத்தைப் பார்வையிட்டுக் கொண்டிருப்பார்கள். சிலர் கதிரையில் நித்திரை கொண்டு கொண்டிருப்பார்கள்.

சிலர் தமக்கு அவசர வேலை இருக்கிறது எனக் கூறி விட்டு முற்கூட்டியே உரையாற்றச் சந்தர்ப்பம் கேட்டு விட்டு இடையில் வெளியேறி விடுவார்கள்.

இவை விழா நாயகனான ,நாயகியான நூலாசிரியரை, பார்வையாளரை அவமதிப்பது போலானது.

அது தான். இந்த முறையை அறிமுகம் செய்துள்ளோம். என்றார்.

உண்மை. மிகவும் நல்ல . முறை நாம் எல்லோரும் இதற்கு மாறினால் நல்லதல்லவா? நல்லவைகள் எங்கிருந்தாலும் கற்போம். அடுத்தவரை அசௌகரியப்படுத்துவற்றை நீக்குவோம். ■

# காசு பணம் துட்டு மணி Money

கிரேக்கர்களுடனும் உரோமர்களுடனும் கடல் கடந்த வணிகத்தைப் பேணிய தமிழர்களிடையே அவர்களது நாணயப் பரிமாற்ற முறையும் அறிமுகமானது. கிரேக்கர்களும் உரோமர்களும் காசாகப் பயன்படுத்திய பெறுமதியான உலோக மணிகளையும் பளிங்குமணிகளையும் வியாபாரத்தின் ஊடாக விலையாகப் பெற்ற தமிழர்கள், அவற்றை என்ன செய்வது, எப்படிப் பயன்படுத்துவது என்று தெரியாமல், அவற்றை மாலைகளாகக் கோர்த்து தமது காதல் பெண்டுகளின் கழுத்தில் அணிவித்து அழகு பார்த்தார்கள்.

● தேவீஸ்வர்

எனது ஆச்சி தனது கழுத்தில் கீச்சி என்றொரு ஆபரணத்தை அணிந்திருந்தார். கழுத்தை இறுக்கமாகச் சுற்றிவளைத்த மிகவும் தடிப்பமான தங்க மாலை அது. அந்த மாலையில் ஒரு சீரான இடைவெளியில் சிவப்பு, பச்சை நிறங்களில் அமைந்த பளிங்கு மணிகள் காணப்பட்டன. அந்த நகையைப் பத்திரப்படுத்துவதற்காக அவர் வைத்திருந்த நகைப்பெட்டியுடன் சேர்ந்தே காணப்பட்ட சிறுசிறு சம்புடங்களில் செப்பு, வெள்ளிக் காசுகள் சில இருந்தன. அவற்றுடன் சேர்ந்தே, அந்த நாட்களின் ஒரு சதக் குற்றிகளும் பல இருந்தன. தென்னை மரத்தின் படைப்புருவம் அழகாகப் பொறிக்கப்பட்ட கொஞ்சம் பெரிய காசு. அந்த நாட்களில் அந்தக் காசுக்கு இரண்டு தோடம்பழ இனிப்புக்கள் வாங்கலாம்.

இன்றைய நகைப்பிரியைப் பெண்கள் தமது கழுத்தில் ஆசையாசையாக அணியும் காசு மாலையைப் பார்த்திருப்பீர்கள். வட்ட வடிவமான தங்க நாணயக் குற்றிகளை அடுக்கடுக்காகக் கோர்த்து அது ஆக்கப்பட்டிருக்கும். வேப்பம்பழ வடிவிலான தங்க மணிகளை அல்லது பளிங்கு மணிகளைக் கோர்த்து ஆக்கப்பட்ட



காசு மாலைகளை நீங்களோ அல்லது நானோ பார்த்திருக்க வாய்ப்பே இல்லை. ஏனென்றால் அது பல நூற்றாண்டுகளுக்கு முந்திய நகையலங்கார வடிவம்.

கீச்சி, இந்த இரண்டு வகையான காசுமாலைகளுக்கு மிடையே பாலமாக அமைகின்ற, ஓர் இடைக்கால வடிவமாக இருக்கலாம் என நான் கருதுகிறேன். மிகவும் ஆரம்ப காலத்தில், வேப்பம்பழ வடிவிலான, அல்லது சிறிய நெல்லிக்கனி வடிவிலான் தங்கமணிகளை அல்லது பளிங்கு மணிகளைக் கோர்த்து காசுமாலை ஆக்கப்பட்டது என்கிறார்கள் வரலாற்றாய்வாளர்கள்.

கிரேக்கர்களுடனும் உரோமர்களுடனும் கடல் கடந்த வணிகத்தைப் பேணிய தமிழர்களிடையே அவர்களது நாணயப் பரிமாற்ற முறையும் அறிமுகமானது. கிரேக்கர்களும் உரோமர்களும் காசாகப் பயன்படுத்திய பெறுமதியான உலோக மணிகளையும் பளிங்குமணிகளையும் வியாபாரத்தின் ஊடாக விலையாகப் பெற்ற தமிழர்கள், அவற்றை என்ன செய்வது, எப்படிப் பயன்படுத்துவது என்று தெரியாமல், அவற்றை மாலைகளாகக் கோர்த்து தமது காதல் பெண்டுகளின் கழுத்தில் அணிவித்து அழகு பார்த்தார்கள். அப்படித்தான் காசு மாலை தோன்றியது. காசும் தமிழர்களிடையே புழக்கத்துக்கு வந்தது.

ஆரம்பத்தில் காசு என்பது பெறுமதிமிக்க மணிகளைத்தான் குறித்தது, நாணயத்தை அல்ல! 'பொன்னும் மணியும்' என்ற சொற்றொடர் தோன்றியதற்கான மூலம் இதுதான். இந்தச் சொற்றொடரின் வாரிசாக 'காசு கழஞ்சு' என்ற செற்றொடர் தமிழ்மொழியில் பின்னர் தோன்றியது. கழஞ்சு என்பது தங்கத்தை அளவிடுவதற்கான ஓர் அளவிடை.

Cash என்ற மேலைத்தேயப் பதம், காசு என்ற தமிழ்ச் சொல்லிலிருந்து தோன்றியதைப்போல. Money என்பதற்கும் மூலமாக 'மணி' அமைந்ததோ என்ற சந்தேகம் எனக்கு உண்டு. மொழியியல் ஆய்வாளர்களுக்குச் சுவையான ஆய்வுப் பகுதி இது.

மனிதகுல வரலாற்றின் முக்கிய பாய்ச்சல்களாக நெருப்பை மனிதன் உபயோகிக்க அறிந்து கொண்டமை, சக்கரத்தை உருவாக்கியமை என்பவற்றுடன் நாணயங்களை உருவாக்கியமையும் சேர்ந்து கொள்கிறது. பண்டமாற்ற முறைமையிலிருந்து பணப்பரிமாற்ற முறைமைக்கு மனிதன் மாறியமை காரணமாக அரசியல், பொருளாதாரம் ஆகியவற்றின் செல்நெறித்தடங்கள் தலைகீழாகப் புரட்டிப்போடப்பட்டன. நாணயவியல் எனப்படும் நாணயங்களைப்பற்றிய ஆய்வு - தொல்லியல், வரலாறு என்பவற்றுடன் பின்னிப் பிணைந்தது. நாணயங்கள் பல வரலாற்று உண்மைக் கதைகளைச் சொல்கின்றன.

அறுபத்திமூன்று நாயன்மார்களில் ஒருவராக வரிசைப் படுத்தப்படுகின்ற கோச்செங்கட் சோழ நாயனார் பற்றிய சுவாரசியமான கதையை ஓர் உதாரணமாக உங்களுக்குச் சொல்கிறேன்.



கோச்செங்கணான் மிகவும் பெருமைக்கு உரிய சோழ ராஜா. குறிப்பிட்ட ஒரு விஷேச வேளையில் ராஜகுமாரன் பிறந்தால் உயரிய ராஜயோகங்களை அடைவான் என்று ஜோதிடர்கள் கூறியமையால், கோச்செங்கணானைக் கருவினில் சுமந்த ராஜாத்தி, அந்தச் சுப வேளை வரும்வரையில் தான் பிரசவித்து விடக்கூடாது என்பதற்காக, தலைகீழாகப் பல மணி நேரம் நின்றாளாம்! அவளது ஆசைப்படியே ராஜயோகம் தரும் சுப முகூர்த்தத்தில் குழந்தை பிறந்தாலும், பிறக்க வேண்டிய வேளை தாண்டிய பின்னரும் பல மணி நேரமாக தாயின் வயிற்றினுள் சிரசாசனம் செய்த குழந்தை, இரத்தம் தலைக்கேறியதால் சிவந்த கண்களுடன் பிறந்ததாம்! அந்தக் குழந்தை அரியணை ஏறிய பின்னர், சிவந்த கண்களையுடைய அரசன் என்ற அர்த்தத்தில் கோச்செங்கணான் எனப் பிரசித்தமானான். அவன் வெளியிட்ட காசுகளையும் தொல்லியலாளர்கள் தேடிக் கண்டடைந்திருக்கிறார்கள்.

கோச்செங்கணான் மட்டுமல்ல, அவனது காலத்துக்கு மிகவும் மூத்த சங்க காலத்தின் அரசர்களும், வேளிர்கள் எனப்படும் குறுநில மன்னர்களும் வெளியிட்ட காசுகளும் வரலாற்றாய்வாளர்களால் சேகரிக்கப்பட்டு, காலவரிசைப்படி அடையாளப்படுத்தப்பட்டிருக்கின்றன.

அந்த வரிசை கமல்ஹாசனின் கனவுக் கதாநாயகனான "மருதநாயகம்" வரை நீள்கிறது. ஆர்க்காடு நவாபுகளின் பரம்பரையைச் சேர்ந்த மருதநாயகத்தின் இயற்பெயர் கான் சாஹிப். அவர் ஐரோப்பியரை மிகவும் மூர்க்கமாக எதிர்த்தவர். முழு இந்தியாவுமே ஆங்கிலேயர்களிடம் வீழ்ந்த பின்னரும் இறுதிவரை எதிர்த்துப் போரிட்டவர்கள் இராமநாதபுரத்தின் வீரப்பரம்பரையினரான சேது மன்னர்கள். சேது மன்னர்களின் போர்த்திறத்தையிட்டு ஆங்கிலேயர் மிகவும் அஞ்சினார்கள். அதிலும் குறிப்பாக, அவர்கள் இலாவகமாக வீசிய 'வளரி' என்ற ஆயுதம் அவர்களை மரணபயம் அடைய வைத்தது. ஆஸ்திரேலியாவின் பூமராங்கை ஒத்த வளரித்தடிகள் ஒரு முனையில் கனமான உலோகக் குண்டுகளைக் கொண்டிருந்தன. ஊகிக்கமுடியாத திசைகளில் இருந்து கணிக்க முடியாத வேகத்தில் பறந்து வரும் வளரித்தடிகள் தாக்கினால், மரணம் நிச்சயம் என ஆங்கிலேயர்கள் எழுதி வைத்தார்கள்.

(மிகுதி அடுத்த வாரம்)

ஈழத்திலிருந்து சோழர்கள் கப்பமாகப் பெற்ற காசு 'ஈழக்காசு' என அழைக்கப்பட்டது. ஆறு ஈழ மன்னர்கள் இந்த இரண்டு கொள்ளையர்களுக்கும் கப்பமாக பொற்காசுகளை ஏராளமாக தாரை வார்த்தார்கள். ஏனைய காசுகளை விட ஈழக்காசுகள் தரமானவையாகவும், வடிவச் செம்மையுடனும் இருந்தன என புழகாங்கிதம் கொள்கிறார்கள் தமிழக வரலாற்றாசிரியர்கள்.

எதிரொ

# ஒப்பிரேசன் சுமந்திரன்: பிசுபிசுத்தது ஏன்?



தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய சுமந்திரன் மீதான படுகொலை முயற்சி தொடர்பான செய்தி இரண்டொரு தடவைகள் ஊடகங்களில் வெளியாகியிருந்தன. பிறகு, கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றத்துக்கு கொண்டுவந்த தகவல்களை மூலைச்செய்திகளாக சில பத்திரிகைகள் வெளியிட்டிருந்தன.

இந்தச் செய்திக்குத் தமிழ் ஊடகங்களிலும் சமூகவலைத்தளப்பரப்பிலும் வழங்கப்பட்ட முக்கியத்துவம் இதற்குமேல் நகரவில்லை.

ஆனால், இதற்கும் அப்பால் இந்தச் சம்பவத்தின் பின்னணியில் நடைபெற்றுவருகின்ற விசாரணைகளும் அதற்கான பின்னணிகளும் அதிர்ச்சியூட்டுபவை. பல உண்மைகள் நிறைந்தவை. இன்னமும் தொடர்ச்சியாக நடைபெற்றுக்கொண்டிருப்பவை.

இதுதொடர்பாக "எதிரொலி" - சம்பந்தப்பட்ட தரப்புகள் சிலவற்றிடம் தொடர்பு கொண்டு பேசியபோது பல அதிர்ச்சியூட்டத்தக்க தகவல்கள் வெளியாகியிருந்தன.

நீதிமன்றத்தில் இடம்பெறும் வழக்கு, சர்வதேச பிடியாணை, தொடர் விசாரணைகள் என்று பல சிக்கல்கள் இதில் நிறைந்திருப்பதால் எல்லா விடயங்களையும் இங்கு எழுத முடியாவிட்டாலும் கூட இவற்றுடன் தொடர்புடைய முக்கிய விவகாரங்களை வாசகர்களுக்கு கொண்டு செல்வதுதான் இந்தப் பத்தியின் நோக்கம்.

இந்தச் செய்திகள் குறித்த முழுமையான புரிதலை எட்டுவதற்கு, நடந்து முடிந்த சம்பவங்கள் தொடர்பான முழுமையான தகவல்களை இங்கு கொண்டுவருவது முக்கியமாகிறது. ஆக, அந்தச் செய்திகளின் ஆதி மூலத்துக்குச் சற்று சென்று திரும்புவோம்.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய சுமந்திரனுக்கு எதிரான கொலைச்சதி எனப்படுவது இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஒரு மாத இடைவெளியில் இரண்டு தடவைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

முதலாவது முயற்சி, 2016 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 12 ஆம் திகதியன்றும் இரண்டாவது முயற்சி 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 13 ஆம் திகதியன்றும் இடம் பெற்றிருந்தன.

**சம்பவம் - 1**

வடமராட்சி மருதங்கேணி பகுதியில் நடைபெற்ற கலாசார விழா ஒன்றில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வதற்காக அவர் செல்லும்போது, போகும் வழியில் சோரன் பற்று - தாளையடி வீதியில் வைத்து சுமந்திரனது வாகனத்துக்கு கிளைமோர் தாக்குதல் ஒன்றினை மேற்கொள்வதன் மூலம் அவரைக் கொலை செய்வதற்கு முதலாவது திட்டம் வடிவமைக்கப்பட்டிருந்தது.

ஆனால், அந்த முயற்சி முற்றுமுழுதாக பிசுபிசுத்துப்போனது.

யாழ்ப்பாணத்திலிருந்து 43 கிலோமீற்றர் தொலைவிலுள்ள மருதங்கேணி என்ற வடமராட்சியின் கிழக்கு கிராமத்தினை இரண்டு பெரு வீதிகளினால் சென்றடையமுடியும். ஒன்று, பருத்தித்துறை - மருதங்கேணி வீதி. மற்றையது, சோரன்பற்று - தாளையடி வீதி.

அன்றைய தினம் - 2016 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 12 ஆம் திகதி - குறிப்பிட்ட மருதங்கேணி பிரதேச கலாசார விழாவில் கலந்துகொள்ளவிருந்த சுமந்திரன் அங்கு புறப்படவிருந்த சமயம், தானும் அங்கு வருவதாகக்கூறி சுமந்திரனுடன் சில விடயங்கள் பேசவேண்டும் என்றும் போகும் வழியில் வாகனத்துக்குள்ளேயே அது பற்றி பேசலாம் என்று வட மாகாணசபை உறுப்பினர் சயந்தன் யாழ்ப்பாணத்திலிருந்து சுமந்திரனோடு இணைந்துகொண்டார். அதனால் சுமந்திரன் தனது வாகனத்தில் செல்லாமல், சயந்தனுடைய வாகனத்திலேயே மருதங்கேணிக்குப் பயணமாகியுள்ளார். சயந்தனுடைய வாகனம் ஏ9 வீதி வழியாக புதுக்காட்டு சந்திவரை சென்று தாளையடி வீதி ஊடாக மருதங்கேணியை அடைந்திருக்கிறது. சுமந்திரனுடைய வாகனமும் அவரது பாதுகாப்புப் பிரிவினரும் சயந்தனுடைய வாகனத்துக்குப் பின்னால் குறிப்பிட்ட கலாசார நிகழ்வு நடைபெற்ற இடத்துக்குச் சென்றிருக்கிறார்கள்.

கலாசார விழாவில் சயந்தன் கலந்து கொண்டாலும் அவர் விழா முடிவடைவதற்கு முன்னரே அங்கிருந்து கிளம்பிவிட்டார். தனக்கு வாகனம் இருப்பதாகவும் யாழ்ப்பாணம் திரும்புவதில் தனக்குப் பிரச்சினையில்லை என்றும் சுமந்திரன் கூறியதையடுத்து சயந்தன் அங்கிருந்து கிளம்பி இன்னொரு நிகழ்வுக்குச் சென்றுவிட்டார். மருதங்கேணி நிகழ்வு முடிந்த பின்னர் சுமந்திரன் தனது வாகனத்தில் சோரன்பற்று - தாளையடி வீதியினால் யாழ்ப்பாணம் திரும்பியிருக்கிறார்.

அன்றைய தினம் சுமந்திரன் மேற்கொண்ட பயணமும் பாதையும் இதுதான். ஆனால், இந்தப்பயணத்தை இலக்கு வைத்து காத்திருந்த தாக்குதலாளிகளால் அவர் மீது தாக்குதல் நடத்துவதற்கு முடியாமல் போனது ஏன்?

இங்குதான் பல திகில் நிறைந்த சம்பவங்கள் உண்டென்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள். அதாவது, சுமந்திரனின் வாகனத்தை இலக்கு வைத்து சரியான விவரங்களுடன் சோரன்பற்று - தாளையடி வீதியில் காத்திருந்த கொலையாளிகள் அவரது வழக்கமான வாகனத்தைக் காணாமல் குழம்பிப்போயுள்ளார்கள்.

அதற்கு காரணம், சுமந்திரன் அன்றைய தினம் புதிய வாகனம் ஒன்றை உபயோகப்படுத்தியதே ஆகும். வழக்கமாக, சுமந்திரன் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் போகும்போது யாழ்ப்பாணத்தில் வாடகைக்கு ஒரு வாகனத்தை எடுத்துப் பயன்படுத்துவார். ஆனால், அன்றையதினம் வாடகைக்கு எடுக்கும் தனது வழக்கமான வாகனத்தை உபயோகப்படுத்தாமல் பிறிதொரு வாகனத்தைப் பயன்படுத்தியிருந்தார். அந்த வாகனமும் பாதுகாப்புப் பிரிவின் வாகனமும்தான் சயந்தனுடைய வாகனத்தைப் பின்தொடர்ந்து மருதங்கேணிக்குச் சென்றிருக்கின்றன.

இதனால் முற்றிலும் குழம்பிப்போயுள்ளார்கள் தாக்குதலாளிகள்.

தாக்குதலாளிகளுக்கு அன்றைய தினம் முழுமையான நெறிப்படுத்தல்களை வழங்கிக் கொண்டிருந்த "X என்ற திருநாட்டிலுள்ள Y என்ற நபர்" -

"சுமந்திரன் நிச்சயமாக விழாவில் கலந்து கொள்வார். தாக்குதல் சறுக்கக்கூடாது" -என்று திரும்பத் திரும்ப அடித்துக்கூறியிருக்கிறார்.

சுமந்திரனின் வழக்கமான வாகனத்தை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டு நின்ற தாக்குதலாளிகள், அவரது வாகனத்தைக் காணவில்லை என்றவுடன் குறிப்பிட்ட X என்ற திருநாட்டிலுள்ள Y என்ற நபருக்கு தகவல் அனுப்ப, அவரோ -

"நான் செக் பண்ணிச் சொல்கிறேன். குழம்பவேண்டாம். தொடர்ந்தும் காத்திருங்கள்" - என கட்டளையிட்டிருக்கிறார்.

ஆனால், இவர்கள் கிளைமோரை அமத்துவதற்கு காத்துக்கொண்டிருந்த சமயம், மருதங்கேணியில் விழாவில் சுமந்திரன் மங்கள விளக்கேற்றிக்கொண்டிருந்தார்.

இதைக்கேள்விப்பட்ட "X என்ற திருநாட்டிலிருந்து தாக்குதலை நெறிப்படுத்திக்கொண்டிருந்த Y என்ற நபர்" திடுக்கிட்டார். சயந்தனோடு சுமந்திரன் நிகழ்வுக்கு சென்ற விவரம் எதுவும் புரியாமல் குழப்பிவிட்டார்.

தனது தகவல் மூலங்களுடன் பேசிய வெளிநாட்டு Y நபர் -

"பரவாயில்லை. வரும்போது தவறவிட வேண்டாம். ஆள், உந்த வழியால்தான் வரும்" - என்று மீண்டும் பேஸ்புக் மெசெஞ்சரில் தகவல் அனுப்பியிருக்கிறார்.

மாலை சரிந்து மருதங்கேணி இரவுக்குள் ஒளிந்து விடப்போகிறதே என்ற அச்சத்துடனும் காரியத்தை முடிக்கவேண்டும் என்ற நோக்கத்துடனும் காத்திருந்த தாக்குதலாளிக

ளுக்கு மீண்டு
னம் மருதங்கே
விட்டது. பிற
மும் வேறொல
திரும்பவும்
என்று சொன்
கூட எந்த வ
முற்றிலும் தெ
தம், வழக்கமா
தாக்குதல்கார
மொத்தத்
பப்படமாகிப்

**சம்பவம் -**

2016ஆம்
நன்னீராக்கும்
கடற்கரையோ
பில் வடமரா
மத்தியில் பல
தன. அந்தக் கு
விட்டு எரித்
சில சக்திகள்
கொண்டிருந்
பாக துறைசா
மக்களுக்கு வி
2017 ஆம் ஆ
திகதி மருதங்
பட்டிருந்தது.
இந்தச் சந்
இடம்பெறுவ
ருந்தது. இந்த
ருந்து மருதங்
யோடு செல்
சுமந்திரன்.
இந்த மு
கூடாது என்ற
ஒழுங்கமைக்க
சோரன்பற்று
மோருடன் த
ஆனால்,
மேற்பார்வை
தால் கடைசி
பயணத்தை
தார்.
ஆக, இரன
விட்டது.
இந்த இர
ரன் அதிர்ஷ்
போதும் இ
எந்தத்தகவலு
முதல்முன
தான் இந்தத்
அதாவது,
தற்கு முன்னா
படையினரா
தற்கு கிளிநெ
பேச்சுவார்த்
பொலிஸுக்கு
நடவடிக்கை
கொண்ட மு
இந்தக் கொ
போது, அவ
லைக் கொடு
என்கின்றன
மறிந்த வட்ட
இந்தத் தக
தங்கள் விசார
ஸார் முன்பு
நபர்களின் வீ
சுமந்திரன் ெ
றார்கள் என்
படுத்திய
தொடர்ந்து
அவர்களின்
நபர்கள், தொ
எல்லாவற்றை
பின்னர்,
போய் அப்பி
இவ்வாறு
வர்கள் சுமார்
பின்னர் விடு
கைதுகள்
ஆண்டு ஜன
யின. வவுனி
னரால் அடு
யில் கைது
நடைபெற்ற
மலையிலிருந்
பகுதியிலிருந்
இவர்கள
மையான விச
டம் எப்போ
டது? யார் ய
கொடுப்பன
தொடக்கம்

ளுக்கு மீண்டும் ஏமாற்றம். சயந்தனின் வாகனம் மருதங்கேணியிலிருந்து முதலே கிளம்பி விட்டது. பிறகு வந்த, சுமந்திரனின் வாகனமும் வேறொன்று.

திரும்பவும் அதேவழியால்தான் வருவார் என்று சொன்ன வெளிநாட்டு ஆசாமிக்குக் கூட எந்த வாகனத்தில் வருவார் என்பது முற்றிலும் தெரிந்திருக்கவில்லை. ஆகமொத்தம், வழக்கமான வாகனத்துக்கு காத்திருந்த தாக்குதல்காரர்களுக்கு மீண்டும் ஏமாற்றம்.

மொத்தத்தில் ஒட்டுமொத்தத் திட்டமும் பப்படமாகிப்போனது.

**சம்பவம் - 2**

2016ஆம் ஆண்டு இறுதியில், கடல் நீரை நன்னீராக்கும் நிலையம் ஒன்றை தாளையடி கடற்கரையோரமாக அமைப்பது தொடர்பில் வடமாராட்சி மக்களில் ஒரு பகுதியினர் மத்தியில் பலத்த குழப்பங்கள் கிளம்பியிருந்தன. அந்தக் குழப்பத்தை மேலும் கொழுந்துவிட்டு எரித்துவிடவேண்டும் என்பதிலும் சில சக்திகள் திட்டமிட்டுச் செயற்பட்டுக் கொண்டிருந்தன. இந்த விடயம் தொடர்பாக துறைசார் வல்லுனர்களுடன் சேர்ந்து மக்களுக்கு விளக்கமளிக்கும் சந்திப்பொன்று 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 13 ஆம் திகதி மருதங்கேணியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தச் சந்திப்பு சுமந்திரன் தலைமையில் இடம்பெறுவதாகவும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இந்தச் சந்திப்புக்காக கொழும்பிலிருந்து மருதங்கேணிக்குத் தனது மனைவியோடு செல்வதற்குத் திட்டமிட்டிருந்தார் சுமந்திரன்.

இந்த முறையாவது, திட்டம் பிசகக்கூடாது என்ற வைராக்கியத்துடன் மீண்டும் ஒழுங்கமைக்கப்பட்ட கொலையாளிகள் அதே சோரன்பற்று - தாளையடி வீதியில் கிளைமோருடன் தயாராகவிருந்தனர்.

ஆனால், சட்ட விவகாரங்கள் சிலவற்றை மேற்பார்வையிடவேண்டிய தேவையிருந்ததால் கடைசி நேரத்தில் தனது யாழ்ப்பாணப் பயணத்தையே சுமந்திரன் ரத்து செய்திருந்தார்.

ஆக, இரண்டாவது திட்டமும் பஸ்பமாகி விட்டது.

இந்த இரண்டு சம்பவங்களிலும் சுமந்திரன் அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பியிருந்த போதும் இது குறித்து பொலிஸாருக்கு எந்தத்தகவலும் தெரிந்திருக்கவில்லை.

முதல்முறையாக கிளிநொச்சி வழியாகத்தான் இந்தத் தகவல் அம்பலமானது.

அதாவது, சுமந்திரனைக் கொலை செய்வதற்கு முன்னாள் போராளிகள் சிலரைக் கூலிப்படையினராகப் பணத்துக்குப் பயன்படுத்துவதற்கு கிளிநொச்சிப் பகுதியில் தொடங்கிய பேச்சுவார்த்தை ஒன்று ஏதோ ஒருவகையில் பொலிஸூக்கு கசிந்துவிட்டது. சுமந்திரனின் நடவடிக்கைகள் குறித்து நன்நம்பிக்கை கொண்ட முன்னாள் போராளி ஒருவரிடம் இந்தக் கொலை முயற்சிக்கு ஆதரவு கோரிய போது, அவர்தான் பொலிஸாருக்குத் தகவலைக் கொடுத்து அம்பலப்படுத்தியிருந்தார் என்கின்றன சம்பவம் தொடர்பான விடயமறிந்த வட்டாரங்கள்.

இந்தத் தகவல்களையடுத்து, இரகசியமாக தங்கள் விசாரணைகளைத் தொடங்கிய பொலிஸார் முன்புபோல தடாலடியாக சந்தேக நபர்களின் வீடுகளில்போய் இறங்கவில்லை. சுமந்திரன் கொலைத்திட்டத்துடன் அலைகிறார்கள் என்று தாங்கள் நிச்சயமாக உறுதிப்படுத்திய நபர்களின் நடமாட்டத்தை தொடர்ந்து அவதானித்து வந்தார்கள். அவர்களின் போக்குவரத்துக்கள், சந்திக்கும் நபர்கள், தொலைபேசி உரையாடல்கள் என்று எல்லாவற்றையும் கண்காணித்தார்கள்.

பின்னர், ஒவ்வொரு ஆட்களாக வீட்டில் போய் அப்பினார்கள்.

இவ்வாறு முதலில் கைது செய்யப்பட்டவர்கள் சுமார் ஐந்து பேர். ஆனால், ஒருவர் பின்னர் விடுவிக்கப்பட்டார்.

கைதுகள் கிளிநொச்சியிலிருந்து 2017 ஆம் ஆண்டு ஜனவரி 14 ஆம் திகதி ஆரம்பமாயின. வவுனியா பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் அடுத்தடுத்து இருவர் கிளிநொச்சியில் கைது செய்யப்பட்டு விசாரணைகள் நடைபெற்றன. அதன் பின்னர், திருகோணமலையிலிருந்து ஒருவரும் தாளையடிப் பகுதியிலிருந்து ஒருவரும் கைதாகினர்.

இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட முழுமையான விசாரணைகளின்போது இந்தத் திட்டம் எப்போது - யாரால் ஆரம்பிக்கப்பட்டது? யார் யாருக்கு இதில் எவ்வளவு பணக் கொடுப்பனவுகள் பேசப்பட்டன என்பவை தொடக்கம் சகல விடயங்களும் வெளிவந்திருந்தன.

உள்ளூரில் கைது செய்யப்பட்டவர்கள் நால்வரும் இந்தத் திட்டத்தில் ஒருவரோடு ஒருவர் இணைந்து செயற்பட்டார்கள் என்பதை தாம் உறுதிப்படுத்தியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், விசாரணைகளில் வெளிவந்துள்ள மேலதிக தகவல்கள்தான் இடியாக இறங்கியிருந்தன.

அதாவது, இவ்வாறு முன்னாள் போராளிகளை சுமந்திரனுக்கு எதிரான கூலிப்படையாக ஏவிவிடுவதற்கு மேற்கொள்ளப்பட்ட முழுமையான திட்டம் வெளிநாட்டிலுள்ள சிலருடையதே என்ற தகவல் வெளியானது.

இந்த திட்டத்தை முன்னின்று நடத்தியவர்கள் ஆஸ்திரேலியாவிலிருந்து ஒருவர், மலேசியாவிலிருந்து ஒருவர். பிரான்ஸிலிருந்து ஒருவர் என்று விசாரணைகளில் தெரியவந்தது. கைதானவர்கள் தங்களுடன் தொடர்பிலிருந்து குறிப்பிட்ட மூவரினதும் பெயர்களைக் கூறினார்கள். அவர்கள் போட்ட திட்டங்களையும் விலாவாரியாகச் சொன்னார்கள். அப்போதுதான் மருதங்கேணியில் பிசுபிசுத்துப்போக எல்லா விவரங்களும் வெளியாகின.

தாக்குதலை நெறிப்படுத்தியவர்கள் என்று கூறப்பட்ட வெளிநாட்டு ஆசாமிகள் மூவரில் இருவர் தொடர்பான விவரங்கள் எதுவும் கைது செய்யப்பட்ட நான்கு முன்னாள் போராளிகளிடமும் இல்லாததால் அவர்கள் தப்பிவிட்டார்கள்.

ஒருவரது தகவல் மாத்திரம் பொலிஸிடம் முறையாக மாட்டியிருக்கிறது.

"X என்ற திருநாட்டிலுள்ள Y என்ற நபர்" அந்த நாட்டுக்குத் தஞ்சம் கோரிச்சென்றவர். அவருக்கு அந்த நாட்டில் இன்னமும் குடியுரிமை கிடைக்காத நிலையில் தஞ்சக் கோரிக்கை விண்ணப்பம் கிடப்பில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இவர்தான், தாளையடி - சோரன்பற்று வீதியில் கிளைமோருடன் நின்றுகொண்டிருந்த கொலையாளிகளுக்கு கடைசிநேரத்திலும்கூட தனது நேரடி நெறிப்படுத்தல்களை கொடுத்துக் கொண்டிருந்தவர் என்றும் - சுமந்திரனின் போக்குவரத்துக்கள் மற்றும் வாகன விவரங்களை தாக்குதல்காரர்களுக்கு வழங்கிக் கொண்டிருந்தவர் என்றும் தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட தாக்குதல்காரர்களின் பேஸ்புக் மெசெஞ்சரில் இவரது தொடர்புகள் முழுவதும் காணப்பட்டதுடன் இவரது தொடர்பிலக்கமும் கண்டுபிடிக்கப்பட்டது. உடனே, குறிப்பிட்ட நபரது வெளிநாட்டுத் தொடர்பிலக்கத்தைக் கண்டுபிடித்த பொலிஸார், அந்த இலக்கத்திலிருந்து இலங்கையின் வேறு பகுதிகளில் உள்ள யாருக்காவது தொடர்பினை ஏற்படுத்தியிருக்கிறாரா என்று விசாரிக்க முடிவுசெய்தார்கள். உடனடியாக இந்தத் தகவல்களை கொழும்பிலுள்ள தலைமையகத்துக்கு அனுப்பி விசாரித்ததில் "X என்ற திருநாட்டிலுள்ள Y என்ற நபர்", கொழும்பு கொட்டாஞ்சேனையிலுள்ள தனது பெண் நண்பியுடன் அடிக்கடி அழைப்பெடுத்து பேசிவந்தமை தெரியவந்தது.

இதற்குமேல் வேறு விவரங்கள் பொலிஸாருக்குத் தேவைப்படவில்லை. உடனடியாக கொட்டாஞ்சேனையில் குறிப்பிட்ட பெண் தங்கியிருந்த இடத்துக்குச் சென்ற பொலிஸார் அந்தப் பெண்ணை விசாரித்ததில், "X என்ற திருநாட்டிலுள்ள Y என்ற நபர்" நெல்லியடியை சொந்த இடமாகக்கொண்டவர் என்றும் அங்கு அவரது தாயார் உள்ளார் என்ற தகவலும் வெளிவந்திருக்கிறது.

"X என்ற திருநாட்டிலுள்ள Y என்ற நபர்' வாழ்ந்ததாகக்கூறப்படும் நெல்லியடி வீட்டுக்குச் சென்ற பொலிஸார், குறிப்பிட்ட நபர் தொடர்பான சகல விவரங்களையும் கேட்டறிந்தனர். இலங்கையிலிருந்தபோது அவர் என்ன செய்தார், எப்போது வெளிநாடு சென்றார் என்பது முதற்கொண்டு அவரது படங்களிலும் டிசைன் டிசைனாக எல்லாவற்றையும் பெற்றுக்கொண்டார்கள்.



குறிப்பிட்ட நபரின் தாய், தனக்கும் தனது மகனுக்குமான தொடர்பு பல காலமாகவே இல்லாமல் போய்விட்டதாகப்பொலிஸாரிடம்கூறியுள்ளார்.

அவரது வீட்டிருந்து எடுத்துவந்த படங்களை வைத்து விசாரணைகளை மேற்கொண்ட போது பொலிஸாருக்கு மேலும் பல தகவல்கள் கிடைக்கப்பெற்றன. அவற்றை சுமந்திரனோடு நேரடியாக பேசித் தெளிவுபடுத்த வேண்டிய தேவையும் இருந்தது. சுமந்திரனை தொடர்புகொண்டு ஒரு சில வீடியோக்களையும் காண்பித்து அந்த வீடியோவிலிருந்த நபரையும் தாங்கள் நெல்லியடி வீட்டில் பெற்றுக்கொண்ட படத்தையும் காண்பித்தார்கள்.

வீடியோவிலும் படத்திலுமிருந்த நபர் ஒருவரே என்று உறுதியாகியது.

இவை அனைத்தையும் ஒருங்கிணைத்த பொலிஸார் இந்த விவகாரத்தை நீதிமன்றத்துக்கு கொண்டுசெல்வது என்று தீர்மானித்தனர்.

**விளைவு -**

சுமந்திரனுக்கு எதிரான கொலைச்சதி வழக்கு தற்போது கொழும்பு உயர்நீதிமன்றில் நடைபெறுகிறது.

இந்த வழக்கில் "X என்ற திருநாட்டிலுள்ள Y என்ற நபர்" விசாரணைக்கு வரவேண்டும் என்ற ஆணையை கிராம சேவகர் ஊடாகவும் தாயாரின் ஊடாகவும் கொண்டுபோய் பொலிஸார் கொடுத்திருந்தனர். சிறிலங்காவின் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படும் இந்த வழக்கைக் குறிப்பிட்ட நபர் இல்லாமலேயே முன்னெடுப்பதா இல்லையா என்பது தொடர்பாக இன்னமும் முடிவு அறிவிக்கப்படவில்லை.

கடந்த மாதம் 17 ஆம் திகதி நடைபெற்ற வழக்கின் அமர்வின்போது குறிப்பிட்ட நபரின் தாயார் நீதிமன்றில் ஆஜராகியிருந்தார். தனக்கும் தனது மகனுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று முன்பு பொலிஸாருக்குக் கூறியதையே மீண்டும் நீதிமன்றத்திலும் கூறியிருக்கிறார்.

பொறிக்குள் விழுந்திருக்கும் "X என்ற திருநாட்டிலுள்ள Y என்ற நபர்" தற்போதிருக்கும் நாட்டின் பாதுகாப்புத்துறையினரைத் தொடர்புகொண்ட இலங்கை பொலிஸார் தங்களது விசாரணையின் முழுவிவரத்தையும் தெரிவித்திருக்கிறார்கள். இதேவளை, குறிப்பிட்ட நபரை நாடு கடத்துவதற்கு இன்டர்போலின் உதவியையும் இலங்கை பொலிஸார் நாடியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து விரைவில் எதிர்பார்க்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

ஆனால், சுமந்திரனுக்கு எதிரான கொலைச்சதி மற்றும் கூலிப்படைகளுக்கு எதிரான கைது என்பவற்றுக்கு மேலும் ஒரு மர்மமான கதை உண்டு என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள். வழக்கு விசாரணைகள் முடிவடையும்

போது அவை குறித்தும் "எதிரொலி"யில் பார்ப்போம்.

**( நன்றி: மெல்பேர்ண் எதிரொலி)**

## சில சந்தேகங்கள்

இந்தக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் தொடர்பில் 'எதிரொலிக்குப்' பல சந்தேகங்கள் உண்டு. இங்கு குறிப்பிட்ட தகவல்கள் யாவும் சுமந்திரனுடன் நெருக்கமான வட்டாரங்களில் இருந்து பெறப்பட்டவை என்பதால், ஒரு பக்க கருத்துக்கள் மட்டுமே உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆயினும் அதிலும் எழும் சில சந்தேகங்கள் முக்கியமானவை என்பதால் இங்கு அவற்றையும் எழுப்புகிறோம்.

1. தாக்குதலாளிகளுக்கு கிளைமோர் எப்படிக் கிடைத்தது?

2. சாதாரண தொலைபேசி உரையாடல்களுக்கே உரிய சமிக்ஞை கிடைக்காத மருதங்கேணி- தாளையடி வீதியில் ஒரு தாக்குதலை பேஸ்புக் மெசெஞ்சர் மூலம் நெறிப்படுத்துமளவுக்கு தாக்குதல் சூத்திரதாரிகள் அறிவற்றவர்களா?

3. இப்படியான தாக்குதலை முன்னெடுத்த நபர்கள் சுமந்திரன் எந்த வாகனத்தில் எப்போது புறப்படுகிறார் என்ற அடிப்படைத் தகவலைக் கூட அறியாதவர்களாகவா இருந்தார்கள்? (வாகனம் மாறினாலும் அது குறித்த தகவலைப் பெற சுமந்திரனின் புறப்பிடத்தில் ஒரு தகவலாளியை தாக்குதலாளிகள் நிறுத்தியிருப்பார்கள். அப்படி செய்யாதளவுக்கு மந்த புத்தியுள்ளவர்களா அந்த முன்னாள் போராளிகள்?)

4. வழக்கமாக வாடகைக்கு எடுக்கும் வாகனத்தை குறித்த தினத்தில் மட்டும் சுமந்திரன் ஏன் பெற்றுக்கொள்ளவில்லை? அப்படியானால் அவருக்கு இது குறித்து முன்னரே தெரியுமா?

5. முதலில் தாக்குதல் பிசகியதால், இரண்டாவது தாக்குதலை சரிவர செய்யத் தாக்குதலாளிகள் முனைப்புக் காட்டியிருப்பர். அது முடியாமல் போனது ஏன்?

6. குறித்த 2 தடவைகள் மட்டும் தான் சுமந்திரன் வடமராட்சி கிழக்குக்கு பயணித்தாரா? இல்லையெனில் ஏன் மற்றைய பயணங்களின் போது அவர்களால் தாக்குதல் நடத்த முடியவில்லை?

7. கிளிநொச்சியில் திட்டமிடப்பட்ட போது, தாக்குதலாளிகள் உதவி கோரிய முன்னாள் போராளி ஒருவரே இந்தத் திட்டத்தை அம்பலப்படுத்தியதாகக் கூறப்படுகின்றது. தாக்குதல் 2017 ஜனவரி 13ஆம் திகதி நடக்க இருந்ததாகக் கூறப்படுகின்றது. அப்படியானால் திட்டம் முன்னரே போடப்பட்டிருக்கும். அப்படியானால் குறித்த முன்னாள் போராளியும் அதற்கு முன்னரே பொலிஸாருக்குத் தகவலைத் தெரிவித்திருக்க வேண்டும். அப்படித் தெரிவித்திருந்தால் பொலிஸார் முன்கூட்டியே சந்தேக நபர்களைக் கைது செய்யாமல் தாக்குதல் நடத்த திட்டமிட்டிருந்த தினத்துக்கு அடுத்த நாள் வரை பொறுமை காத்தது ஏன்?

இப்படி நிறையக் கேள்விகள் இந்தக் கொலை முயற்சியை ஆட்டம் காணவைக்கின்றன. எதற்கும் பொறுத்திருப்போம். உண்மைகள் அதிக காலம் உறங்கமுடியாது.

# சுடலை ஞானம்



பாடையிலை ஏத்திப் பறை அடிச்சுக் கொண்டு போகேக்கை புத்தி வந்து என்ன பிரியோசனம்? வடக்கு சபையின்ரை காலம் முடிஞ்ச பிறகு ஆளுநர் குரே அரசியல் செய்யப் போறார் எண்டு வடக்கு மாகாண சபை உறுப்பினர் கொதிச்சவையாம். இருக்கும் வரை இருந்து உள்ள முல்லைமாரி, முடிச்சவிக்கிற வேலை எல்லாம் செய்திட்டு வீட்டை போகேக்கைதான் பிள்ளையளுக்கு ஞானம் பிறக்குது என்ன? ......யளே! இருக்கேக்கை ஒழுங்கா இருந்தியளா? சனத்தைப் பற்றிச் சிந்திச்சியளா? எட பாவம் வோட்டைப் போட்டு அனுப்பியிருக்கினமே இருக்கிற காலத்துக்கை ஏதாவது செய்திட்டுப் போவம் எண்டு சிந்தனை இருந்திருந்தால் இப்ப நீங்கள் கொதிக்கிறதிலை ஞாயம். அப்ப உந்தக் கொதிப்பாலை தண்ணி சூடாகி றெயிலையும் ஓடவைக்கலாம். இப்ப வந்திருக்கிற கொதிப்பாலை வருத்தக்காரர் சுடுதண்ணி கூட வைச்சுக் குளிக்கேலாது தெரியுமோ?

வட மாகாண சபை எண்டு ஒண்டைக் கொண்டு வந்து உங்களைச் சனம் தெரிஞ்சு அனுப்பின பிறகு அங்கை போய் ஆளை ஆள் அறுக்கிற விளையாட்டையும், அவனை இவனைக் காட்டிக் குடுக்கிறதையும் செய்து வெருளிக் கூத்தாடி அரசாங்கக் காசிலை குளிர் காய்ஞ்சு முடிஞ்சு வட மாகாண சனத்துக்கு படுதுரோகம் செய்து போட்டு ....யளே ! இப்ப நீலிக் கண்ணீரை ஊத்திக் காட்டிறியள். என்ன? எங்களை என்ன பேயர் எண்டு நினைச்சுக் கொண்டுயளே? இல்லாட்டி ஆச்சி ஒக்கலையிலை வைச்சு அம்புலியைக் காட்டி சாப்பாடு தீத்திற சின்ன பவா எண்டு நினைச்சியளே? ஆருக்குக் காது குத்திறியள்? இப்ப முன்பள்ளிக்குப்போற குழந்தையைக் கேட்டாலும் சொல்லும், வட மாகாணசபையைக் கலைச்சால் என்ன நடக்கும் எண்டு. ஒட்டமெற்றிக்காகக் கவனர் வருவர். அவர் என்ன உங்கடை ஆச்சி, அப்புவின்ரை சகோதரமே வட மாகாண மக்கள் பாவம் எண்டு சொல்ல? நீங்கள் செய்யாமல் விட்டதையும் செய்வர். விடாமல் விட்டதையும் செய்வர். இருந்து பாருங்கோவன்!

எட கைதடியிலை உங்களுக்குக் கட்டிடம் கட்டி ஏசி போட்டு ஒவ்வொருதருக்கும் டமரோ மேசை கதிரை கோடிக்கணக்கான காலைச் செலவழிச்சு வாங்கி வாகனத்துக்கும் காசும் தந்து சாப்பாடும் தந்து நோகவிடாமல் வைச்சுக் கொண்டு உங்களைச் சனம் என்ன கேட்டவை? எங்களுக்கு எல்லாரும் சேந்து நன்மை செய்யுங்கோவன் எண்டு தானே? இது அதை விட்டிட்டு..... மகா சனங்களே உங்களுக்கு ஒரு வேண்டுகோள். காசு செலவெண்டும் பாராமல் ஒருக்கா கைதடியிலை இருக்கிற வடமாகாண சபை கூடுற இடத்தைப் போய் பாத்திட்டு வாங்கோ. அங்கை செய்து குடுத்திருக்கிற வசதியளைப் போய் பாருங்கோ. வக்கில்லாததெல்லாம் அங்கை போய் இருந்து கொண்டு செய்யிற சேட்டையைப் பாருங்கோவன். அப்பு சொன்ன மாதிரி காவோலை எரியிற மாதிரி வயிறு எரியும். இப்ப கொதிக்கிறவையள், வீட்டை போய் உங்கடை வீட்டுக் கண்ணாடிக்கு முன்னாலை உரிஞ்சு விட்டிட்டு நிண்டு உங்களையே கேளுங்கோ. இதுவரை வட மாகாண சபையிலை இருந்து கொண்டு நீங்கள் செய்த வேலை சரியோ எண்டு. அப்ப தெரியும் உங்களுக்கு......நீங்கள் ஒரு வெக்கமில்லாத ஜென்மங்கள் எண்டு.

பாருங்கோ குரே எழும்பி ஆடப்போறதை.. பாத்துப் பாத்து நீங்கள் சாக வேணும். உங்களுக்குத் தந்த திணைக்களத்தாலை பஸ்ஸூக்கை தலை குனிஞ்சு போற சனத்தைத் தன்னும் நிமிந்து கொண்டு பிரயாணஞ் செய்யப் பண்ணி இருக்கலாம். ஆனால் நீங்கள் அதைச் செய்யேல்லை. அற்ப சொற்ப வேலையளைச் செய்திட்டு அதை ஆர் திறக்கிறதெண்டதிலை காலம் போச்சுதே ஒழிய வேறை ஒண்டும் நடக்கேல்லை. அப்பிடித் துறந்து வைச்சதிலை அரைவாசி தொழிற்படாமலும், பூட்டியும் கிடக்கு. எல்லாம் எங்கடை காசு. எங்களிட்டை வருத்தி வேண்டின காசு. நாங்கள் செத்துச் செத்து உழைச்ச காசு. நாணம் கெட்ட பிறப்புகள். குழந்தைப் பிள்ளையள் மாதிரி அடிபட்டு... எங்கடை மானம் மரியாதை எல்லாத்தையும் வித்துப் போட்டு வீட்டை போகப்போறியள்..... என்னைப் பொறுத்தவரை வரலாற்றிலை நீங்கள் துரோகியள்?

இந்த வட மாகாண சபையிலை இருக்கிறவையை சேர் ... சேர் எண்டு வால் பிடிக்க கொஞ்சச் சனமரையுங் கட்டிக் கொண்டு தங்கடை அலுவல். தங்கடை சொந்த பந்தங்களை எல்லாம் வேலைக்குப் போட்டு தங்கடை ஆக்களிட்டை "குட் போய்" எண்ட பேரும் வேண்டியாச்சு. இனி அந்த சோம்பேறி ஜந்துக்கள் எல்லாம் என்ன செய்யும் எண்டு நினைக்கிறியள்? போய் கவனருக்குக் குடையும் பிடிச்சு அவருக்கு அடி கழுவிற வேலையளைச் செய்ய ஆயுத் தப்படுத்திவினம். அங்கையும் போய் உதே வேலை நடக்கும். வெக்கமில்லாத நாணங் கெட்ட......யள்?

• வில்லங்கம் விநாசி

# முதலமைச்சரின் கசாயம் கசப்பது ஏன்?

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

முதலமைச்சர் சி.வி.விக்கான மக்கள் அபிமானம் - வாக்குகளாக மாற்றப்படுவதற்கான வலுவுள்ளதா என்பது கேள்விக்குரியதேயாயினும், 'தமிழ் மக்கள் பேரவை' போன்றதொரு மக்கள் இயக்கத்தின் உருவாக்கம், கூட்டமைப்பின் தற்போதைய நிலைப்பாட்டில் தமிழ் தேசியத்துக்கு சார்பான மாற்றத்தைக் கொண்டுவர உதவுமென்றே மக்கள் நம்பியிருக்கின்றார்கள்.

ஆனாலும் தமிழ் மக்களின் கருத்தேற்றத்தை புரிந்து கொள்வதன் மூலம், துரித மறுசீரமைப்பில் கூட்டமைப்பின் தலைமைத்துவம் ஆர்வம் காட்டுவதன் மூலம் நிலைமையை சீரமைக்க முடியுமென்ற நம்பிக்கைக்கான வாய்ப்புக்கள் தேய்வடைந்தே வருகின்றன.

தேசியப்பட்டியல் மூலமான கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், சர்ச்சைக்குரியதும் இன்றளவும் சந்தேகம் வெளியிடப்படுவதுமான வாக்கெண்ணெல் முறைகேட்டுடன் கூடிய கடந்த நாடாளுமன்றத் தேர்தலுக்கான யாழ்.மாவட்ட உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கூட்டமைப்பின் பேச்சாளர் என்ற நிலையையும் தாண்டி, த.தே.கூட்டமைப்பின் தற்கால கொள்கை வகுப்பாளராக தன்னை தற்குறிப்பேற்றம் செய்துகொண்ட சுமந்திரனின் அரசியல் நேர்மையீனமும் - சாதுரிய சட்ட வன்மையும், சி.வி.விக்கு எதிரான த.தே.கூட்டமைப்பின் நிலைப்பாடுகளை மேலும் வலுப்படுத்தின.

சட்டத்துறையில் முதலமைச்சரின் மாணவரான சுமந்திரன், 'சி.வி.வி - மாகாண நிர்வாகம் தெரியாத அரசியல் நிலைப்பாடற்ற வெற்றுக்கோது' என்ற விஷமப்பிரசாரத்தினை தனது ஆளுகைக்கு உட்பட்ட தனக்கு கடமைப்பட்டுள்ள நாடாளுமன்ற/மாகாணசபை உறுப்பினர்கள் மூலமாக முன்னெடுக்கவே தலைப்பட்டார்.

அரசசெல்வாக்கும் - ஆளும் கூட்டரசின் வகிபங்கும் - சட்டத்துறை அனுபவமும் - அரச நிர்வாகத்தின் ஓட்டைகளிலுள்ள பேரினவாத நட்பும் - புலிகளுக்கு எதிரான மனப்பாங்கும் - கூட்டமைப்பு தலைமைத்துவத்தின் திடமின்மையும் - ஏனைய கூட்டமைப்பு உறுப்பினர்களின் பலவீனங்களும், சுமந்திரனை - த.தே.கூட்டமைப்பின் அறிவிக்கப்படாத நிழலுலகத்தலைவராகப் பிரகடனப்படுத்தின.

முதலமைச்சர் தனக்கான பதவி வழியாக, தமிழ்த் தேசிய அரசியலுக்காக கையிலெடுத்த நேர்மையான தமிழர் உரிமைகளுக்கான கோரிக்கைகளையும் - மாகாணசபையின் தீர்மானங்களையும் பலவீனப்படுத்தி நிராகரிக்க மத்திய அரசுக்கு, சுமந்திரனின் த.தே.கூட்டமைப்பின் நிழல் தலைமைத்துவம் பெரிதும் பயன்பட்டு தவியது.

பேரினவாத அரசுக்குக் குடைச்சல் தரும் விதமாக வடக்குமாகாண சபை செயற்பட்டுக்கொண்டிருப்பதை ஏற்கனவே கடும்போக்குள்ள சிங்கள கட்சிகள் தூக்கிப்பிடித்து, ஆட்சிமாற்றத்துக்கான பிரசாரத்துக்கு பயன்படுத்திக்கொண்டிருக்கும் நிலையில்,

வடக்கு மாகாணசபையில் நிறைவேற்றப்பட்ட

- தமிழினஅழிப்பு தீர்மானம்,
- போர்க்குற்ற விசாரணை கோரும் தீர்மானம்,
- சர்வதேச விசாரணையை வலியுறுத்தும் தீர்மானம்,
- வட கிழக்கிலிருந்து இராணுவக் கட்டமைப்பை வெளியேற்றும் தீர்மானம்,
- மக்களின் மீளக்குடியமர்வு,
- காணி பொலிஸ் அதிகார கோரிக்கைகள்,
- முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினம்,
- மாவீரர் நாள் நினைவேந்தல்கள்,
- வடக்கு மாகாண முதலமைச்சர் நிதியம்,

ஆகிய அரச எதிர்ப்பு நிலைப்பாடுகளோடு ஆகப்பிந்தியதாக - வடக்கு கிழக்கு விசேட அபிவிருத்தி செயலணியில் முதலமைச்சரின் புறக்கணிப்பும் எரியும் பௌத்த - சிங்கள பேரினவாத நெருப்பில் எண்ணை யூற்றின.

இறுதியாகவும், மாகாணசபையின் பதவிக்காலம் முடிவடையும் நிலையிலும் கூட அரசிடம் சரணாகதி நிலைப்பாட்டை காண்பிக்காமல், திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களை எதிர்த்து - மகாவலி அதிகார சபையினால் வழங்கப்பட்ட காணி அனுமதிப்பத்திரங்களை கையில் வைத்துக்கொண்டு, ஜனாதிபதியின் பொய்யை அம்பலப்படுத்திய வடக்கு முதலமைச்சரை - பழிவாங்குவதற்காக சுமந்திரன் மூலமாக கிடைக்கும் சந்தர்ப்பங்களை தவறவிட மத்திய கூட்டரசு தயாரில்லை.

சொந்த இனத்துக்குள்ளிருந்து - சொந்தக் கட்சியின் கூட்டமைப்பிலிருந்து, முதலமைச்சர் சி.வி.வியை எதிர்ப்பதற்கு பொருத்தமான அரச வாலாட்டி கிடைத்துள்ளமையை தலைமை அமைச்சரும் - ஆளும்கட்சியும் வாழ்த்திப்பாடாத குறையாக வரவேற்று போற்றுகின்றார்கள்.

மறுவளமாக, கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளராக இன்னொருமுறை சி.வி.வி. தொடரமுடியாத விதமாக காய் நகர்த்தல்களை மேற்கொள்ளும் சுமந்திரன், கூட்டமைப்பின் சொல்வழித்தலைவர் இரா.சம்பந்தனின் இக்கட்டினைப் பயன்படுத்திக்கொண்டு விக்னேஸ்வரனை வடக்கு அரசியலில் இருந்து முற்றிலும் அரங்கஒதுக்கம் செய்வதற்கான ஏற்பாடுகளை எப்போதோ தொடங்கியாயிற்று.

உள்ளூர் அதிகார சபைகளுக்கான தேர்தல்களில், த.தே.கூட்டமைபுக்கு மாற்றுஅணிகளாக பேசப்பட்ட தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி - தமிழர் விடுதலை கூட்டமைப்பு ஆகிய தரப்புக்களுடன் முதலமைச்சர் இணைந்து எதிர்வரும் மாகாணசபை தேர்தலை எதிர்கொள்வதற்கான வாய்ப்புக்களை சுமந்திரனும் - அவர் சார்ந்த த.தே.கூட்டமைப்பின் அரசவருடிகளும் ஆவலுடன் எதிர்நோக்கியுள்ளனர்.

- 'சி.வி.வி கூட்டமைப்பை பலவீனப்படுத்துகின்றார்'
- 'ஏற்கனவே கூட்டமைப்பில் பிளவை ஏற்படுத்தியவர்களையோடு சி.வி.வி தொடர்பிலிருக்கிறார்'
- 'நல்லாட்சிக்கு எதிரான மகிந்த, கோத்தபாய தரப்புக்களின் ஆசீர்வாதம், சி.வி.விக்கு கிடைத்துள்ளது'

போன்ற தங்களது கற்பிதங்களை உண்மையாக்குவதற்காகவேனும், விக்னேஸ்வரன் மேற்சொன்ன மாற்று தமிழ்க் கட்சிகளோடு இணையவேண்டுமென சுமந்திரனும் சகாக்களும் உள்ஊறும் பேரவாவோடு காத்திருக்கின்றனர்.

த.தே.கூட்டமைப்புக்கு வலுவான போட்டியை கொடுக்கும் மாற்றுத்தலைமையுடைய தரப்புக்களோடு இணைந்து தேர்தலை சந்தித்து, தமிழ் தேசிய கூட்டமைப்பின் அறுதியான பிளவுக்கு காரணமாகும் நிலை ஒருபுறமும், தமிழர் விரோத நிலைப்பாட்டிலிருந்து சற்றும் திருத்தத்தை விரும்பாத கூட்டமைப்பில் இனியும் இடம்கிடைக்காத நிலை இன்னொருபுறமும், மக்கள் இயக்கமாக மட்டும் அறிவிக்கப்பட்ட பேரவையின் முன்னெடுப்புக்கள் மூலம் மக்களுக்கான அரசியல் மாற்றத்தை சாத்தியப்படுத்த முடியாத இக்கட்டு வேறுபுறமாயும் - வருத்திக்கெடுக்க, 'மக்கள்' - 'கட்சி' - 'நீதியும் அறமும்' ஆகிய முத்தரப்புக்குள் கட்டுண்டு நிற்கும், முதலமைச்சர் சி.வி.வி எடுக்கப்போகும் அடுத்த தடங்களுக்கான நிகழ்தகவுகள் தான் என்ன??

(அடுத்த வாரமும் கசாயம் கசக்கும் )


எதிரொலி
Ethiroli






# மிதிக்கு இவ்வளவு மதிப்பா?

"அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு" என்பது பழமொழி, ஆனால் அளவுக்கு மிஞ்சிய வேகத்தில் தனது சைக்கிளை ஓட்டி உலக சாதனை படைத்துள்ளார் அமெரிக்கப் பெண்மணி டெனிஸ் மியுல்லர் கொனெக் (Denis Mueller Korenek). தனது 45 ஆவது வயதில் ஒரு ரேஸ் காரின் வேகத்தில் மணிக்கு சுமார் 183,932 மைல்கள் தூரத்துக்கு மிதி மிதியென மிதித்து அளவுக்கு மிஞ்சிய மதிப்பைப் பெற்றுள்ளார் இவர். சாதனை என்று வந்துவிட்டால் வயது ஒரு தடையல்ல என்பதற்கு சிறந்த உதாரணம் இவர்தான்.




# சண்டக்காரி

நாம் கஷ்டத்தின் மத்தியில் சேர்த்த பெயரையும் புகழையும் உடமைகளையும் எம்மை மீறிய சக்தி பறித்துச்செல்லும் போது தட்டிக்கேட்க முடியாமல் வேடிக்கை பார்ப்பவர்களாக மட்டுமே இருக்கின்றோம். இது தான் நம்மிடம் இல்லாத தைரியம். ஆனால் பிலிபைன்ஸ் நாட்டில் 8 வயதான சிறுமி Brielle Minia தன் வீட்டில் கொள்ளையடித்த கொள்ளையர்களுடன் போராடித் தன் உடமைகளை மீட்டெடுத்த காணொளி இணையங்களில் வைரலாகி உள்ளது. இவ்வாறான தைரியத்தை சிறுவர்களிடம் தான் நாம் கற்க வேண்டும்.








# குட்டி கோடீஸ்வரன்

என்னடா இது ஆறா? கோடியா? குழப்பமாக தான் உள்ளது, இது எப்படி சாத்தியம் என்று. ரியான் எனும் ஆறு வயது அமெரிக்கப் பிரஜை, யூடியுப் மூலம் விமர்சனம் செய்து கோடீஸ்வரனாக மாறியுள்ளார். "டாய்ஸ் ரிவிவ்" போன்ற சனல்கள் மூலம் விமர்சனங்களை மேற்கொண்ட இவர், கடந்த ஆண்டிலும் அதிகளவு வருமானம் ஈட்டியுள்ளதுடன் "R" எனும் பெயரில் தனது உற்பத்திகளை இணையம் மூலமும் நேரடியாகவும் விநியோகித்து வருகிறார்.





# ஒக்ரோபர் 1

முதுமை என்பது இரண்டாவது குழந்தைப் பருவம் என்பதாலோ என்னவோ சிறுவர் தினமும் முதியோர் தினமும் ஒரே நாளில் கொண்டாடப்படுகிறது. இன்றைய சமுதாயத்தில் இந்த இரண்டு தரப்பினருமே உறவுகளின் பராமரிப்புக்காகவே ஏக்கத்துடன் காத்திருக்கின்றனர். சிறுவர்கள் "Day Care" நிலையங்களிலும் முதியோர்கள், முதியோர் இல்லங்களிலும் தள்ளப்படும் நிலையை பற்றி சற்று சிந்திக்க அழைக்கிறது இந்த மாதம். வாழும் வாழ்க்கையை திரும்பிக்கூட பார்க்க நேரமின்றி temple run போல் ஓடிக்கொண்டிருக்கும் நாம் சேர்த்து வைத்திருப்பது என்ன? பணமா? நிம்மதியா? அல்லது இரண்டும் இல்லையா?

# சிங்கத்தின் தாய்மை

தான் பெற்ற பிள்ளையைத் தானே கொல்லும் மனிதர்களின் தாய்ப் பாசத்தை விட, விலங்குகளின் தாய்மை இன்று அன்பின் உச்சகட்டத்தில் உள்ளதெனச் சொன்னால் அது மிகையாகாது. அந்த வகையில் ஆபிரிக்க விஞ்ஞானிகளின் பரிசோதனையின் விளைவாக அந்த நாட்டின் பெண் சிங்கம் ஒன்று செயற்கைக் கருத்தரிப்பின் மூலம் 2 சிங்கக் குட்டிகளை ஈன்றுள்ளது. இயற்கையோ செயற்கையோ தாய்மை என்றும் தாய்மை தான்.



# ~~சிறப்பு~~ சித்திரவதை முகாம்

17

தோழர் பாலன்

இந்த 70 ரூபாவில்தான் உணவு உட்பட அனைத்துச் செலவுகளும் செய்ய வேண்டும். இது போதாது என்பதால் தமக்கு வழங்கும் பணத்தை அதிகரித்துத் தரும்படி சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டிருக்கும் அகதிகள் கடந்த இரண்டு வருடங்களாக கோரி வருகின்றனர். சிறப்பு முகாமை நிர்வகிக்கும் அதிகாரிகள்கூட வழங்கப்படும் இந்தப் பணம் போதாது என்பதை ஒத்துக்கொள்கிறார்கள். ஆனால் தமிழ்நாடு அரசு இது குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்து வருகிறது.

இதனால் வேறு வழியின்றி சிறப்புமுகாம் அகதிகள் தமக்கு வழங்கும் பணத்தை அதிகரிக்குமாறு கோரி கடந்த 2015ஆம் ஆண்டில் முதல் காலவரையற்ற உண்ணாவிரதம் மேற்கொண்டார்கள். அவர்களை அதிகாரிகள் கண்டு கொள்ளவில்லை. தமிழக அரசியல்வாதிகள் யாரும் கண்டு கொள்ளவில்லை. பத்திரிகைகள்கூட கண்டு கொள்ளவில்லை. மாடு வெட்டக் கூடாது என்று மாட்டின் மீது காட்டும் அக்கறை கூட இந்திய அரசு இந்த ஈழ அகதிகள் மீது காட்டவில்லை. இன்னும் சொல்லப்போனால் ஒரு மாட்டைவிடக் கேவலமாகவே ஈழ அகதிகள் தமிழ்நாட்டில் வைக்கப்பட்டுள்ளனர் என்பதே உண்மையாகும்.

**சிறப்பு முகாம் கொடுமைக்கு என்னதான் முடிவு?**

உலகத்தின் கவனத்துக்கு குறிப்பாக தமிழக மக்களின் கவனத்துக்கு சிறப்பு முகாம் கொடுமைகள் கொண்டு செல்லப்பட வேண்டும். தமிழக மக்களால் மாத்திரமே இந்த கொடுமைகளுக்கு முடிவு கட்ட முடியும். அந்த மக்களால் மட்டுமே சிறப்பு முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் அகதிகளை விடுதலை செய்ய முடியும். எனவே அவர்கள் கவனத்திற்கு இந்த சிறப்பு முகாம்களில் நடக்கும் கொடுமைகளைக் கொண்டு செல்வதே விடுதலையை விரும்புபவர்களின் தலையாய பணியாக இருக்க வேண்டும்.

**போராளி சிவா வாக்குமூலம்**

துறையூர் சிறப்பு முகாமில் அடைத்து வைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலி இயக்க உறுப்பினர் சிவா அவர்கள் 17-10-94 ஆம் ஆண்டு கரூர் நீதிமன்றத்தில் வழங்கிய வாக்குமூலம்.

மதிப்புக்குரிய நீதிபதி அவர்களே!

என்னை 23-8-1991 அன்று பொலிசார் கைது செய்தனர் 23-8-1991 முதல் 29-8-1991 வரை விசாரணை என்னும் பெயரில் சித்திரவதை செய்து விட்டு 30-8-91 அன்று திருச்சி மத்திய சிறையில் அடைத்தனர். நான் ஏன் கைது செய்யப்பட்டேன்? என் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு என்ன? என்பது எதுவும் தெரியாமல், தெரிவிக்கப்படாமல் சிறையில் அடைக்கப்பட்டேன்.

நீதிபதி அவர்களே, நான் சாதாரண மக்களில் ஒருவன். எனக்கு மனைவி, மக்கள் உண்டு. எல்லோரும் போல் நானும் எனது குடும்பத்துடன் அமைதியாக. மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என கனவு காண்பவன். ஆனால்எனது விருப்பத்துக்கு மாறாக நான் தமிழன் என்ற ஒரே காரணத்துக்காக எனது வாழ்வு பறிக்கப்படுமாயின் வேறு வழியின்றி என்னைத் தற்காத்துக் கொள்ள வேண்டிய நிலைக்கு நான் தள்ளப்படுகின்றேன். 1983 இல் இடம் பெற்ற இனக்கலவரம் எனக்கு இந்நிலையை உருவாக்கியது.

என் கண்முன்னே தாய் தந்தையர் சுட்டுக் கொல்லப்பட்டனர். சகோதரிகள் கற்பழிக்கப்பட்டனர்.

[சித்திரவதை தொடரும்]

## இந்த வாரம் உங்களுக்கு...

### மேடம்

வார ஆரம்பத்தில் சந்திரன் நல்ல உச்ச நிலையில் இருப்பதால் பொருளாதார நிலை திருப்திகரமாக இருக்கும். தாயார் விடயத்தில் நன்மைகள் உண்டு. பிடிக்காத ஒருவரிடம் சந்தர்ப்ப வசத்தால் பேசியாக வேண்டி இருக்கும். எதிர்ப்புகள் வலுப்பெறும் என்பதால் கவனம் தேவை.உங்களின் பிடிவாதக் குணம் அதிகரிக்கும். எதிலும் அனுசரித்து விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. ஏதேனும் ஒரு நல்ல காரியத்துக்குக் கடன்வாங்க வேண்டியிருக்கும். மூத்த அண்ணன், சகோதரிகளிடம் இருந்து வந்த மனக்கசப்புகள் விலகும்.

### இடபம்

கெடுதல்கள் எதுவும் நடக்காத வாரம். புதன் வலுவான நிலையில் இருப்பதால் எதிர்ப்புகளைச் சமாளித்து வெற்றியாக்குவீர்கள். ஐந்தாமிடம் வலுப்பெறுவதால் நீண்ட நாட்களாக முடியாமல் இழுத்துக் கொண்டிருந்த வேலைகளை முடித்துக் காட்டி இலாபம் பெறுவீர்கள். எட்டில் சனி இருப்பதால் இப்போது எதிர்காலத்துக்கான மாற்றங்கள் நடைபெறும். முப்பது வயதுகளில் இருப்பவர்கள் வேலை, தொழில் விடயங்களில் சில முக்கியமான மாற்றங்களைச் சந்திப்பீர்கள்.

### மிதுனம்

நன்மைகள் நடக்கும் வாரம் இது. உற்சாகமாகவும், புத்துணர்ச்சியுடனும் இருப்பீர்கள். முகத்தில் இருக்கும் சந்தோஷம் வெளிப்படையாகத் தெரியும்படி நடந்து கொள்வீர்கள். வீட்டிலும், வெளியிலும் நல்ல பெயர் கிடைக்கும். இளைய சகோதர, சகோதரிகளுக்கு ஏதேனும் நல்லவைகளைச் செய்து கொடுப்பீர்கள். மதிப்பு, மரியாதை நல்லபடியாக இருக்கும். சிலருக்கு வெளிநாட்டுப் பயணம் அமையும்.

### கடகம்

நீங்கள் ஆசைப்பட்டது எல்லாம் கிடைக்கப் போகிறது. இதுவரை சொந்தவீடு அமையாதவர்கள் இப்போது செய்யும் முயற்சிகள் பலன் அளிக்கும். குழந்தைகள் வழியில் செலவு உண்டு. கல்லூரி, பள்ளி செல்லும் பிள்ளைகளை வைத்திருப்பவர்களுக்கு தேவையற்ற விரயங்கள் இருக்கும். அரசு, தனியார் துறையினர் வளம் பெறுவார்கள்.

நீண்டநாட்கள் சந்திக்காமல் இருந்த நண்பரையோ, உறவினரையோ சந்திப்பீர்கள். சிலருக்கு வெளிநாட்டுப் பயணம் உண்டு.

### சிம்மம்

நல்லவைகள் நடக்கும் வாரம் இது. நடுத்தர வயதினர் பிள்ளைகள் மூலம் நல்ல செய்திகளை எதிர்பார்க்கலாம். அவர்களின் கல்வியில் முன்னேற்றங்கள் இருக்கும். திருமணமாகாத இளைய பருவத்தினருக்கு நல்லவை கூடி வரும். இளம் பருவத்தினர் தங்களுடைய எதிர்கால வாழ்க்கைத் துணைவரைத் தேர்ந்தெடுக்கக் கூடிய சம்பவங்கள் ஏற்படும். சிலருக்கு தொழில்மாற்றம், ஊர் மாற்றம், வீடுமாற்றம் போன்ற அமைப்புகள் ஏற்படும்.

### கன்னி

மனம் போல் அனைத்தும் நடக்கும் வாரம் இது. முடிக்க முடியாமல் இருந்த விஷயங்களை வெற்றிகரமாக முடித்துக்காட்டுவீர்கள். சிலருக்கு எதிர்கால முன்னேற்றங்களுக்கான ஆரம்பங்களும், அறிமுகங்களும் இருக்கும். கருத்து வேறுபாடு, குடும்பப் பிரச்சினைகள் அல்லது வேலை விடயமாக பிரிந்து இருந்த தம்பதியினர் ஒன்று சேர்வார்கள். தொழில்ரீதியான பயணங்கள் இருக்கும்.நன்கு சம்பாதித்து உங்களை கிண்டல் செய்தவர்களை வாயடைக்கச் செய்வீர்கள்.

### துலாம்

அனைத்திலும் முன்னேற்றம் வரக் காண்பீர்கள். தொழில் நிறுவனங்களை நடத்துபவர்களுக்கு மேன்மைகள் இருக்கும். யோகக் கிரகங்கள் வலுப்பெற்று இருப்பதால் துலாம் ராசிக்காரர்கள் உற்சாகமாக இருப்பீர்கள். நண்பர்களின் உதவி கிடைக்கும். தாயார் வழியில் நன்மைகளும், அம்மாவின் ஆசிர்வாதங்களும் கிடைக்கும். சிலருக்கு தாய்வழிச் சீதனம் போன்று ஏதேனும் சொத்துக்கள் கிடைக்கும். சிலர் புதிய வாகனம் வாங்குவீர்கள். தந்தைவழி உறவினர்களால் சங்கடங்கள் ஏற்படும்.

### விருச்சிகம்

சோம்பல், விரக்தியுடனும் இருப்பீர்கள். நீங்கள் சுறுசுறுப்பை வளர்த்து கொள்ள வேண்டிய வாரம் இது. எதிலும் முடிவு எடுக்க முடியாமல் தடுமாறுவீர்கள், இதைச் செய்யலாமா? அதைச் செய்யலாமா? என்று நீங்கள் அலைபாயும் வாரம் இது. உங்களுக்கு உதவி செய்ய மறுத்தவர் கள் இனி தேடி வந்து உதவி செய்வார்கள். உச்ச செவ்வாய் சோதனைகளை சமாளிக்கும் ஆற்றலைக் கொடுத்து கொண்டிருப்பதால் விருச்சிக ராசிக்காரர்கள் இனிமேல் கலங்கத் தேவையில்லை.

### தனுசு

சோதனைகள் வந்தாலும் அதை உங்களுடைய சாதுரியமான பேச்சாலும், அடுத்தவரை நோகடிக்காத பண்பாலும் விரட்டி விடுவீர்கள் என்பதால் தனுசுக்கு இது நல்ல வாரம்தான். விரையாதிபதி செவ்வாய் உச்ச வலுப் பெறுவதால் வீண்செலவுகள் தற்போது இருக்கும். ஒரு குறிப்பிட்ட பலனாக ஏழரைச்சனி நடப்பதால் எவரையும் நம்பி யாருக்கும் வாக்குக் கொடுக்க கூடாது. எதிலும் சிக்கனமாக இருங்கள்.

### மகரம்

தடைகள் விலகும் வாரம் இது. குறிப்பிட்ட பலனாக பணிபுரியும் இடங்களில் உங்களுக்கு கெட்ட பெயர் ஏற்படுத்த சிலர் முயற்சிப்பார்கள். எதிரிகள் கை ஓங்கும். ஆயினும் எல்லாம் பரம்பொருளின் கருணையால் நன்மையாகவே முடியும். பண வரவு சுமாராகத்தான் இருக்கும். செலவுகளை யோசித்து கலக்கம் அடைவீர்கள். செலவுக்கு ஈடான வருமானம் அடுத்த வாரம் முதல் வரத் தொடங்கும் என்பதால் இந்த மனக்கலக்கம் தற்காலிகமானதுதான்.

### கும்பம்

உங்களில் அதிகாரம் செய்யக்கூடிய பதவியில் இருப்போருக்கு இந்த வாரம் இரண்டுங்கெட்டான் நிலை இருக்கும். சிலர் இரண்டு அதிகார மையத்துடன் போராடுவீர்கள். உங்களைப் புரிந்து கொள்ளாமல் சிலர் உங்களை விட்டு விலகுவார்கள். வெளிநாட்டில் இருப்பவர்களுக்கு எதிர்கால வாழ்க்கைக்கான திருப்புமுனை சம்பவங்கள் நடக்கும். சிலர் தங்களுடைய எதிர்கால வாழ்க்கைத் துணைவரைச் சந்திப்பீர்கள். முப்பது வயதுக்குட்பட்டவர்களுக்கு தொழில் விடயத்தில் நல்ல தகவல்கள் உண்டு.

### மீனம்

பெண்களுக்கு மிகவும் நன்மை தரும் வாரம் இது. எதிர்காலத்தில் நீங்கள் வளமான வாழ்க்கை வாழக்கூடிய அமைப்புக்கு அத்திவாரம் இப்போது அமையும். புதிய அறிமுகங்கள் உண்டு. அதனால் நன்மைகளும் இருக்கும். இனிமேல் வராது என்று கைவிட்ட ஒரு தொகையோ அல்லது இனி நடக்காது என்று மறந்துவிட்ட ஒரு விஷயமோ இந்த வாரம் சாதகமாக நடந்து, உங்களை இன்ப அதிர்ச்சிக்கு உள்ளாக்கும்.

# ஆதிக்கத்தை எதிர்த்த அக்கினிப் பெண்




"நீங்கள் செய்வது மிகவும் அநியாயம். மக்கள் மீது திணிக்கப்படும் வரி மிக மிகக் கொடுமையானது. அவர்கள் திணறுவது உங்களுக்குத் தெரியவில்லையா? வாழ்வதிலும் பார்க்க சாவதே மேல் என்று புலம்புகின்றார்கள். எதற்கும் ஓர் அளவு வேண்டாமா? வரியையும் கட்ட முடியாமல், மன்னரை எதிர்க்கவும் முடியாமல் அவர்கள் படும் துன்பத்தைக் காணும்போது மிகவும் பரிதாபமாக இருக்கிறது. உங்களுக்குப் பயந்து வரியைக் கட்டிவிட்டு பசியோடும் பஞ்சத்தோடும் போராடுகின்றார்கள். நிஜத்தைப் புரிந்து கொள்ளுங்கள் அவர்கள் படும் பாட்டைப் பார்க்கும் போது நெஞ்சே வெடித்துவிடும் போல்தோன்றுகின்றது. தயவுசெய்து வரியை நீக்கி விடுங்கள். இல்லை வரியைக் குறைத்தாவது அவர்களை வாழ விடுங்கள். அவர்களின் சாபத்தை வாங்காதீர்கள். அவர்கள் ஒன்றும் ஜந்துக்கள் கிடையாது. எம்மைப் போன்ற மனிதர்கள் தான். நான் சொல்வதைக் கொஞ்சம் காதில் வாங்கி ஏதாவது நல்லது செய்யுங்கள்" என்றாள், லியோ ப்ரிக் பிரபுவிடம் அவனது மனைவியான கொடிவா.

ஆணாதிக்கத்தின் ஒட்டுமொத்த உருவமான அவன், " நிறுத்து உன் பேச்சை. எனக்கே அரசியல் சொலித்தருகிறாயா? எனது கட்டளையை நிறைவேற்ற வேண்டியது மக்களின் கடமை. வரியை விதிக்கும் நானே அதற்குப் பரிகாரம் சொல்வதா? நாட்டை ஆளும் மன்னனுக்கு மக்கள் வரி செலுத்தத் தான் வேண்டும். மக்களைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. இது உனக்குத் தேவையில்லாத விடயம் நீஒரு பொட்டச்சி. உன் வேலை எதுவோ அதை மட்டும் பார். " என்றான் அந்தக் கல் நெஞ்சுக் கணவன். ஆனாலும் கொடிவா விடுவதாயில்லை. மக்களுக்காக மன்றாடினாள். கெஞ்சினாள். அழுதாள். ஆனாலும் லியோ ப்ரிக் பிரபுவின் இரும்பு மனது கொஞ்சம் கூட இளகவில்லை. கொடிவாவின் நச்சரிப்பு நாளுக்கு நாள் அதிகரிக்கவே அந்தக் கொடியவன் தன் மனைவியான கொடிவாவிடம், "நீ சொல்வது போல வரியை நான் நீக்குவது என்றால் ஒரு நிபந்தனை, அதற்கு நீ உடன்படுவாயா? " என்றான்." சொல்லுங்கள் என்ன நிபந்தனை" என்று கேட்ட கொடிவா அவன் சொன்னதைக் கேட்டதும் அதிர்ந்து உறைந்து போனாள். இப்படியும் ஒரு மனிதனா? இவனும் ஒரு கணவனா? ஆண் வர்க்கத்துக்கே இவன் ஓர் அசிங்கம் என மனதில் எண்ணியபடி உடைந்து போனாள். அப்படி அவளது கணவன் சொன்ன நிபந்தனை தான் என்ன? பட்டப் பகலில் மக்கள் நடமாட்டம் மிகுந்த நேரத்தில் உடம்பில் ஒட்டுத் துணி கூட இல்லாமல் முழு நிர்வாணமாக குதிரையின் மீது அமர்ந்து கடை வீதியில் ஒரு முனையில் இருந்து மற்றொரு முனைக்கு நீ சென்று வந்தால் நான் வரியைக் குறைக்கின்றேன்" என்றான் அந்தக் கேவலமான ஆணாதிக்க ஈனப்பிறவி. பதில் பேச முடியாமல் மௌனமாக நின்றாள் கொடிவா. கொடுப்புக்குள் சிரித்துக் கொண்டான் மனித உருவில் இருந்த விலங்கான லியோ ப்ரிக்.

(வருவாள்)

**கவிஞர் பிரேம்ராஜ், கொழும்பு**

# விழித்தெழு பெண்ணே!

## ரௌத்திரம் பழகு

இதுவரை என் மனதில் அழுத்திக்கொண்டிருந்த கனம் ஒன்றை முதன்முறையாக இங்கு இறக்கி வைக்கப் போகின்றேன். எனக்கு நேர்ந்த பாலியல் தொல்லை, வீட்டில் பார்த்த மாப்பிள்ளையால் ஏற்பட்டது.

இருவரும் மொபைல் எண்களைப் பரிமாறிக்கொண்ட பின், பேச ஆரம்பித்தோம். ஆனால், பேச்சில் காதலைவிட காமமே இருக்கும். தன் அநாகரிக எண்ணங்களையே எப்போதும் வெளிப்படுத்துவான். எல்லாப் பெண்களையும் கொச்சையாக வர்ணிப்பான்.

பெண் பார்த்துவிட்டுப்போன சில நாள்களிலேயே என்னைத் தொட முயன்றான். கை, தோள் என அவன் கைகள் நீண்டபோது, முதலில் பாசம், காதல் என்று நினைத்தேன். ஆனால் அடுத்த சில வாரங்களில், அவன் எல்லை மீற முயன்று நான் தடுத்தபோது, கீழ்த்தரமான தகாத வார்த்தைகளால் திட்டினான். அவனிடம் வெளிப்பட்ட கட்டுக்கடங்காத ஆக்ரோஷத்தில் நான் விழித்துக்கொண்டேன். அவன் செய்கைகளை தராசில் வைத்துப் பார்க்க ஆரம்பித்தேன்.

குடும்ப வன்முறை, பாலியல் அத்துமீறல் பற்றிய பல செய்திகளைத் தொடர்ந்து படித்துவந்ததால், அவனின் செய்கைகள் தவறு என்பது எனக்குப் புரிந்தது. என் பெற்றோரிடம் அனைத்தையும் கூறினேன். அவர்கள், உடனடியாக நடக்கவிருந்த நிச்சயதார்த்தத்தை நிறுத்தினார்கள். இத்தனை சம்பவங்கள் நடந்தபோதும் நான் ஒருமுறை கூட அழவில்லை.

ஆரம்பத்திலேயே ஏதோ தவறு என்று உணரத் தொடங்கியதால், என் வாழ்க்கை தப்பித்தது. இன்று நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன்.

**கேமிதுனா, கண்டி**

## பாலியல் தொல்லைகளை பகிரங்கம் செய்வோம்

உங்கள் இரகசியம் காக்கப்படும். நீங்கள் சந்தித்த பாலியல்சார் பிரச்சினைகளையும், அதைக் கையாண்ட விதத்தையும் எழுதுங்கள். உங்கள் அனுபவம் பல பெண்களைப் பாதிப்புறாமல் காக்கட்டும்.

**'ரௌத்திரம் பழகு'**
அம்பலம் பதிப்பகம்,
இல. 241,
கைதடி – மானிப்பாய் வீதி,
உடுவில், யாழ்ப்பாணம்.
**அல்லது**
ethirolimedia@gmail.com



# தலைவலிக்கு அர்த்த சின்




பெண்களைப் பொறுத்தவரை தலைவலி ஏற்பட ஆயிரக்கணக்கான காரணங்கள் உள்ளன. ஆனால், எதைப் பற்றியும் கவலையின்றி வலி நிவாரணிகளை மட்டுமே பயன்படுத்துகிறோம். தலைவலி எதனால் ஏற்படுகிறது என்று கண்டறிந்து அதற்கான சிகிச்சையைப் பெற வேண்டும். அதனுடன், இந்தத் தலைவலிக்கு அர்த்த சின் முத்திரை நல்ல பலனைத் தரும்.

செய்முறை: ஆட்காட்டி விரல் கட்டை விரலின் முதல் ரேகையில் தொட்டிருக்க வேண்டும். மற்ற விரல்கள் நேராக நீட்டி இருக்க வேண்டும்.

இந்த முத்திரையைத் தரையில் அமர்ந்தும், கதிரையில் அமர்ந்தும் செய்யலாம்.

இதனை தினமும் 15 நிமிடங்களும், அதற்கு மேலும் செய்யலாம்.


# பெர்பியூம் பிரியையா?

வாசனைத் திரவியங்கள் ஒரு வித வசீகரமான சூழ்நிலையை ஏற்படுத்தும். உங்களுடைய உடலின் தன்மைக்கேற்பவும், காலநிலையைப் பொறுத்து வாசனை திரவியங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். வெயில் காலத்தில் லேசான வாசனைத் திரவியங்களையும், குளிர்காலங்களில் அதிக வாசனை தரக்கூடிய திரவியங்களையும் பயன்படுத்த வேண்டும்.

சில வாசனைத் திரவியங்கள் அதிக வாசனை கொண்டவையாக இருக்கும். அதன் வாசத்தின் தூரம் மிகவும் நீண்டதாக இருக்கும். பலருக்கு அதீத வாசனை பிடிக்காமல் தலை சுற்றல், தலைவலி போன்றவை வரும். அப்படியான வாசனைத் திரவியங்களைத் தவிர்த்து எல்லோரும் விரும்பத்தக்க வாசனைத் திரவியங்களை உபயோகித்தால் அனைவருக்கும் நல்லது.



- ▲ கடைக்கு வெளியே வாசனையைப் பரிசோதிக்க மறக்கவேண்டாம். இது உண்மையான மணத்தைச் சொல்லிவிடும்.
- ▲ கோடையில் கலப்படமற்ற வாசனைத் திரவியத்தை தேர்வு செய்வது அவசியம். அது நீண்ட நேரம் வியர்வையையும் தாண்டி நிற்கும்.
- ▲ இலகுவான வாசனையை விரும்பினால், பூக்களின் நறுமணத்தை எடுத்துக்கொள்ளலாம்.
- ▲ வெப்பத்தினால் தடிப்புகள் மற்றும் எரிச்சலுக்கு நம்மை மிகவும் எளிதில் ஆளாக்கிவிடும் எனவே வாசனைத் திரவியத்தின் உள்ளடக்கங்களை சருமத்துக்கு தீங்கு இல்லாதவையா என்று சரி பார்ப்பது முக்கியம்.



# உங்கள் குரலால் எஜமான் ஆகலாம்

அமேசான் தன் 'அலெக்சா' செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தை வைத்துப் பல கருவிகளை விற்பனை செய்து வருகிறது.'ஸ்மார்ட் ஸ்பீக்கர்' வகைக் கருவிகளான 'எக்கோ, டாட், ஷோ' போன்ற கருவிகளுக்குப் புதிய வசதிகளை அறிமுகப்படுத்தியுள்ள அமேசான், மேலும் சில சிறிய கருவிகளையும் வெளியிட்டுள்ளது.

வீட்டில் இருப்போரின் குரல் உத்தரவுகளை நிறைவேற்றும் அலெக்சா மென்பொருள் தான் இந்த கருவிகளின் அடிப்படை. வீட்டாரின் குரலுக்குக் கட்டுப்படும், 'ஸ்மார்ட் பிளக்'குடன் இணைந்துள்ள எந்தக் கருவியையும் முடுக்கவோ, அணைக்கவோ முடியும். அதே தொழில்நுட்பத்தின் அடிப்படையில், 'எக்கோ ஆட்டோ' என்ற கருவி, காரில் உள்ள பல கருவிகளை குரல் மூலம் கட்டுப்படுத்த உதவுகிறது.

சமயலறையில் இருக்கும் நுண்ணலை அடுப்பையும், குரல் மூலம் கட்டுப்படுத்தும் கருவியையும், அமேசான் அறிமுகப்படுத்தி இருக்கிறது. செயற்கை நுண்ணறிவை, வீட்டு உபயோகக் கருவியாக மாற்றுவதில் கூகுளை விட அமேசான் அசத்தி வருகிறது.

# பச்சோந்தி லிப்ஸ்ரிக்!



உதட்டுச் சாயத்தையும், அறிவியல் விட்டுவைக்கவில்லை. 'பிளஷ் அண்ட் விம்சி' என்ற லிப்ஸ்ரிக் நிறுவனம் உடலின் வெப்பநிலை, வேதியல் தன்மைக்கு ஏற்றபடி, நிறத்தையும், அடர்த்தியையும் மாற்றிக் கொள்ளும் விந்தை உதட்டுச் சாயத்தை அறிமுகப்படுத்தி இருக்கிறது.

பொதுவாகத் தனக்கு ஏற்ற லிப்ஸ்ரிக் நிறத்தை, தேடித்தேடி வாங்குவதுதான் பெண்களின் வழக்கம். ஆனால், எந்தவித உயிர்களையும் வதைக்காமல் உருவாக்கப்பட்டதாக சொல்லப்படும் இந்த உதட்டுச் சாயம், உடலின் தன்மைக்கேற்ப மாறும் தன்மையுடன்இருப்பது, நவநாகரிக உலகில்ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதன் ரகசியத் தொழில்நுட்பத்தை தெரிவிக்காவிட்டாலும், கோகோ வெண்ணெய், ஒலிவ் மற்றும் திராட்சை விதை எண்ணெய் போன்றவற்றைப் பயன்படுத்தி தயாரித்திருப்பதாகவும் பிளஷ் அண்ட் விம்சி அறிவித்துள்ளது.

இதைத் தயாரிப்பதற்கு போரில் அங்கமிழந்த இராணுவத்தினர், முதியோர் போன்றோரை வேலைக்கு அமர்த்தியிருப்பதாகவும் பிளஷ் அண்ட் விம்சி அறிவித்துள்ளது.



# குப்பை கூட்டும் கோள்!

பிரிட்டனைச் சேர்ந்த சர்ரே பல்கலைக்கழகம், அண்மையில், 'ரிமூவ் டெப்ரிஸ்' என்ற செயற்கைக்கோளை வெற்றிகரமாக ஏவியிருக்கிறது. இது, பூமியைச் சுற்றி தாழ்வாகச் சுழன்று வரும் விண்வெளிக் குப்பையை வலை வீசிப் பிடிக்கும் துப்புரவுப் பணியை வெற்றிகரமாக செய்திருக்கிறது.

பல நாடுகள் விண்வெளியில் செயற்கைக் கோள்களை 60 ஆண்டுகளாக ஏவி வருகின்றன. இக்கோள்களுக்கு சில ஆண்டுகளே ஆயுள். பின், அவை பூமிக்கு மேலே உலோகக் குப்பைக் கழிவுகளாகச் சுற்றி வரும்.

இக்குப்பை புதிய செயற்கைக்கோள்களுடன் மோதி செயலிழக்கச் செய்யும் ஆபத்து நேரக்கூடும் என்பதால், விண்வெளிக் குப்பையை அகற்றப் பல வழிகளை விஞ்ஞானிகள் முன்வைத்துள்ளனர்.

அதில் ஒன்றைத் தான் சர்ரே பல்கலைக்கழகம் தற்போது வெற்றிகரமாக சோதித்துள்ளது. ஒரு கையளவு சிறிய செயற்கைக்கோளை ரிமூவ் டெப்ரிஸ் கோள் வலைவீசிப் பிடித்துள்ளது.

அடுத்தகட்டமாக அதைப் பூமியை நோக்கி தள்ளிவிட, அது புவியீர்ப்பு விசைக்கு ஆட்பட்டு அதிவேகமாக காற்று மண்டலத்தில் நுழைந்து எரிந்து துகள்களாகிவிடும். இந்த முறையில், கணிசமான விண்வெளிக் குப்பையை அகற்றலாம் என சர்ரே விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

# 'செந்தமிழ்க்கவி'யும் சிவப்பு நிற துப்பலும்



● நவீன சவாரித்தம்பர்

போன கிழமை இதாலை வந்த இடத்திலை உந்த றோட்டுவழிய நடக்கிற வீதி விபத்துக்களைப்பற்றி கொஞ்சம் கதைச்சுப்போட்டுப் போனனானல்லோ! வீதியள்ள விபத்துகள் நடக்கிறதுக்கு பலகாரணங்கள் இருக்கெண்டும் சொன்னனான். சொல்லிப்போட்டுப் போனபிற்பாடு, நானும் ஒரு வீதிவிபத்துக்கை அம்பிடப்பார்த்து உயிர்தப்பினதே பெரிய அதிசயம் பாருங்கோ!

என்ன பிரச்சினையெண்டால், றோட்டிலை ஓடுற எந்த வாகனமெண்டாலும், அதுக்குள்ள இருந்து பயணம் செய்யுற பொதுச்சனமும்சரி, அதை ஓட்டுற றைவர்மாரும் சரி தாங்கள் செய்யிற செயலுகளாலை பின்னுக்கு ஏற்படுகிற விளைவுகளையும் கொஞ்சம் யோசிக்கவேணும் கண்டியளே!

வாகனத்தை ஓட்டுற றைவர்மார் தங்களுக்கு நித்திரை வரக்கூடாதெண்டும், வாற நித்திரையைப் போக்காட்டுறதுக்கெண்டும் வாய்க்கை வெத்திலை பாக்கைப் போட்டுக்கொண்டு ஓடுறவை பாருங்கோ! இவையள் இப்பிடிக் குதப்பிக்கொண்டு, வாய்க்குள்ளை எச்சில் எக்கச்சக்கமாக ஊறின பிற்பாடு, என்ன செய்வினமெண்டால், பஸ்சின்ர யன்னல் கதவுக்குள்ளாலை குபுக்கெண்டு துப்பிவிடுவினம். இப்பிடித் துப்பேக்கை அதாலை பிறகுவாற விளைவுகளை சமாளிக்கிறதுக்கு. சண்டித்தனக் கதைகளும் சமாளிப்பு நடிப்புகளும்தான் எத்தனை... எத்தனை!

அறுவார் இப்பிடித் துப்புறதாலை பின் விளைவெண்டது ஒண்டு ரண்டில்லைக் கண்டியளே!

பள்ளிக்கூடப்பிள்ளையள் வெள்ளை யூனிபோமைப் போட்டுக்கொண்டு போகேக்கை படக்கூடும்... அரசாங்க உத்தியோத்தர்மாருடைய உடுப்புகளிலையும் எச்சில் தெறிக்கக்கூடும்... அன்றாடம் றோட்டாலை போறவாற சனங்களுக்கும் இது அரியண்டமாக இருக்கக்கூடும். இதுகளை இவையள் கொஞ்சம்கூட யோசிக்கிறைல்லை. தங்கட வாகனம் ஓடுற றோட்டு முழுக்க மனிசிக்காரி கொண்டு வந்த சீதனப்பண்டம், எண்ட நினைப்பில, தன்னிச்சையாக தான்தோன்றித்தனமாக நடக்கிறதை தட்டிக்கேக்க சுட்டிக்காட்ட ஆராவதுவரமாட்டினமே?

அட! இவையள்தான் அப்படியெண்டால், பஸ்சுக்குள்ளை ஏறுகிற சில கிழடுகட்டையள் செய்யிற சில சீத்துவக்கேடுகள் இருக்குதே, அடக்கடவுளே! இதை ஆருக்குப் போய் சொல்லி அழுகிறது?

பஸ்சுக்குள்ளை அதுவும் 'கோணர்சீற்'றிலை இருக்கிற ரண்டொண்டு என்ன செய்யுங்களெண்டால், கோணர்சீற்றையும்தங்கடவீட்டுக்கோடிப்புறம்மாதிரி நினைச்சுக்கொண்டு, வாய் நிறைய வெத்திலை, பாக்கை நிறையப்போட்டுக் குதப்பிப்போட்டு, தூ...வென யன்னலுக்கு வெளியாலை துப்பேக்கை, கோணர் சீற்றுக்குப் பின்னாலை இருக்கிறவை, தங்கட பக்கத்து யன்னல் கதவைச் சாத்தாமல் விட்டால், அதோகதி தான்! அரோகராத்தான்!

உப்பிடித்தான் பாருங்கோ, ஒருக்கா சி. ரி. பி. பஸ்சிலை போய்க்கொண்டிருக்கேக்கை, எனக்கு முன்னாலை இருந்த ஒரு குடும்பகாரன் யன்னலுக்கு வெளியாலை வெத்திலைச்சாறை துப்பிப்போட்டான். இதைக் கொண்டக்டர் பொடியன் கண்டிட்டான். உடன அவருக்குக் கிட்ட வந்து, தன்மை மென்மையாகக் கதைச்சான். இப்படித் துப்புறதால தங்களுக்கு பொதுச்சனத்தால ஏற்படுகிற பிரச்சினையள் குறிச்சு விளகப்படுத்திப்போட்டு முன்னுக்குப் போயிட்டான். ஆனால் அந்தாள் கேட்டமாதிரித் தெரியேல்லை. பேந்தும் யன்னலுக்கு வெளியாலை துப்பிக்கொண்டே வந்தான் பாவி. இப்பிடித்துப்புற தூத்தேறி மனிசரை என்ன செய்யலாம்? தும்புக்கட்டை, விளக்குமாத்தாலை நல்லாச் சாத்து சாத்தினாலும் கடைசிவரைக்கும் திருந்தவே மாட்டுதுகள். கனக்க வேண்டாம்...நான் சொல்லுறது பொய்யெண்டால், யாழ்ப்பாண ரவுணுக்கை ஒருக்காப் பின்னேரக் கையாப் போய்ப் பாருங்கோ.

சி.ரி.பி., மினிபஸ்கள், பெரிய பஸ்கள் நிக்கிற இடத்தில கசவருத்தக்காரன் நோய் முத்தி ரத்தம் ரத்தமா வாந்தியெடுத்த மாதிரி...வெத்திலைத் துப்பலுகள் சிதறிக்கிடக்கும்.

உப்பிடி எச்சில் துப்புறதாலை நானும் விபத்திலை இருந்து தப்பினனான்... எண்டு முன்னுக்குச் சொன்னனானல்லோ. அது என்னெண்டால் பாருங்கோ... எனக்கு முன்னாலை ஒரு பஸ் தரிப்பில பஸ் ஒண்டு சனங்கள்ளை ஏத்திக்கொண்டு நிண்டது. நான் பின்னாலை சைக்கிள்ளை மெதுவாக வந்தனான். றைவருடைய பக்கம் வெளிறோட்டிலை வெத்திலைத் துப்பல் நிறையக் கிடக்க, அந்த றைவர் எனக்குமேலை துப்பி விடுகிறானோ தெரியாது... எண்ட பயத்தில நான் என்ரை சைக்கிளை நடு றோட்டுக்குக் கொஞ்சம் எடுத்தன். எனக்குப் பின்னாலை வலுவேகமாக வந்த ஆட்டோக்காரன் இதைக் எதிர் பார்க்கேல்லை. திடீரென அவன் தன்ரை வேகத்தைக் குறைச்சான். குறைச்சவன் ஆத்திரத்தில தன்ரை வாயாலை சில 'செந்தமிழ்க்கவி'பாடி சினந்துகொண்டு போனான் பாருங்கோ!

இதெல்லாம் எனக்குத் தேவையா? இனிமேல் வெத்திலை, பாக்குப் பொயிலை எண்டு வாய்க்கை போட்டுக் குதப்பிக் கொண்டு போறவை இதையொருக்கா மனசிலை பதிச்சு வையுங்கோவன். ■



அந்த 5 வெற்றியாளர்களுக்கும் எப்போது, எங்கே பரிசு?

ஆவலை அடுத்தவாரம் வரை அடக்கிக் கொள்ளுங்கள்!!

## வெற்றியாளர் விபரம்

**பானுஜா அருள்ராசன்**
யாழ்ப்பாணக் கல்லூரி,
இரத்தின இல்லம், சித்தங்கேணி.

**எம். பிரித்தியா**
புத்தளம் / ஒற்றைப்பனை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்,
ஆண்டிமுனை, உடப்பு.

**தர்மினி அருள்ராசன்**
ஸ்ரீ கணேச வித்தியாலயம்
இரத்தின இல்லம், சித்தங்கேணி.

**சிவகுகன் பிருத்வி**
யாழ் / கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.

**ஏ.தர்சினி**
ஸ்ரீகணேச வித்தியாலயம்.

5 வெற்றியாளர்களையும் வாழ்த்துகிறது 'எதிரொலி'

## தேசமும் பிரஜைகளும்

வாயிலிருந்து
வெளிவர எத்தனிக்கும்
கருத்துக்களை
வாயிலின் வாசலிலேயே
வரவிடாமல் தடுக்கின்றது
அராஜகம் நிறைந்த நிகழ்களம்


இங்கே சில
புன்னகை முகங்களுக்கு
பின்னால்
உண்மைகளுக்கு எதிரான
புதைகுழிகள்
வெட்டப்பட்டிருப்பதால்
கருச்சிதைவாகின்றன
கலப்படமற்ற கருத்துக்கள்.

பணபலம்
புஜபலத்துடன் கூடிய
பக்கம் சார்ந்த பார்வைகள்
பெற்றவர்கள்
பாக்கியவான்கள்!
அவர்கள்தம்
மனசாட்சியை மறுதலித்தே
மக்களோடு மக்களாக
மாறுவேடம் தரித்து நிற்பதால்
புள்ளடிகளுக்கு
உரித்தாகின்றார்கள்
புன்னகை தழும்பாதவர்களாக!

மனிதம் செத்துவிட்டது
மண்டியிடுகிறது
அடிமைத்தனம் என்றே
யதார்த்தத்தை
பிரதிபலிப்போரெல்லாம்
புதைகுழிக்குள்
சங்கமிக்கின்றார்கள்
புலராத பொழுதுகளுக்குள்.


எழுத்துச் சுதந்திரம்
பேச்சுச்சுதந்திரம்
வாழ்வதற்கான
சுதந்திரம்
நள்ளிரவில்
நடமாடுவதற்கான
சுதந்திரம்
எதுவுமற்ற நிலையில்
நாடு பெற்றிருக்கிறது
சுதந்திரம்
நாடு மட்டுமே
வாழ்வதற்காக!

**- அலெக்ஸ் பரந்தாமன், புதுக்குடியிருப்பு.**




## சொல்லுங்கோ டொக்டர்

# ஆஸ்மாவால் அவதியா?





கேள்வி– எனக்கு வயது 30. ஆஸ்மா நோய் உள்ளது. மழை, பனி காலங்களைவிட , வெயில் காலங்களிலேயே ஆஸ்மா பிரச்சினை அதிகமாக உள்ளது. இது எதனால் ?

**ஆர். குமார், கொழும்பு**

*பதில்:* - ஆஸ்மா என்பது சுவாசத் தொகுதியோடு சம்பந்தமான நோய். வழமையாக நாங்கள் தொடர்ச்சியாக மூச்சை உள்ளெடுப்பதும் வெளிவிடுவதுமான செயற்பாட்டை எந்நேரமும் செய்து கொண்டே இருக்கிறோம். ஆனால் நாம் அதை உணர்வதில்லை. தன்னிச்சையாக நடந்து கொண்டே இருக்கிறது. ஆனால் ஆஸ்மா நோயின் போது நாம் மூச்சை உள்ளெடுப்பதில் பிரச்சினை இருப்பதில்லை. ஆனால் வெளிவிடுவது மிகவும் கடினமாக பிரயாசையுடன் கூடியதாக இருக்கும்.

ஆஸ்மா பொதுவாக பரம்பரையாக வருவதுண்டு. அப்பா, அம்மா, சகோதரர்களுக்கு இருந்தால் வருவதற்கான சாத்தியம் அதிகமாகும். அத்துடன் ஒவ்வாமை, எக்ஸிமா போன்ற நோயுள்ளவர்களுக்கும் வருவதற்கான வாய்ப்பு அதிகமாகும். கரப்பான் பூச்சியும் அதன் எச்சங்களும், சிகரட் புகை, விறகெரிக்கும் புகை, நுளம்புத்திரிப் புகை போன்ற எல்லாப் புகைகளும் ஆஸ்மாவைத் தூண்டக் கூடும். தூசு, கடுமையான மணங்கள், சுவாத்திய மாற்றங்கள், சுவாசத் தொற்று நோய்கள் போன்றவற்றாலும் தூண்டப்படுவதுண்டு.

உங்களுக்கு வெயில் காலத்திலேயே அதிகம் வருவதுண்டு எனக் குறிப்பிட்டிருந்தீர்கள். உங்களைப் போலவே குளிர் அதிகமாயுள்ள மேலைநாட்டவர்கள் பலருக்கு வசந்த காலத்திலேயே ஆஸ்மா அதிகம் வருவதுண்டு. அதற்குக் காரணம் அங்கு வசந்த காலத்தில் ஏராளமான பூக்கள் மலரும். அவற்றின் மகரந்தம் உதிர்ந்து காற்றோடு கலந்து சுவாசத்தோடு உட்செல்வதால் சுவாசக் குழாய்கள் தூண்டப்படட்டு ஆஸ்மா வருகிறது.

எமது நாட்டில் அவ்வாறில்லை. சகல காலங்களிலும் பூக்கள் மலர்கின்றன. மகரந்தம் காற்றோடு கலந்து நோயை ஏற்படுத்துவதானால் அது எப்பொழுதுமே நிகழும். வெயில் காலத்தில் மட்டுமல்ல.

இங்கு குளிர் காலத்திலேயே ஆஸ்மா அதிகம் காணப்படுகிறது. அதற்குக் காரணம் குளிர் காற்றானது உடலில் ஹிஸ்டமின் என்ற இரசாயனத்தை எமது உடலில் அதிகம் சுரக்கச் செய்கிறது. இதுவே எல்லாவித ஒவ்வாமைகளின் போதும் அதிகம் சுரக்கிறது. அது ஆஸ்மாவை தூண்டுகிறது.

ஆனால் உங்களுக்கு ஆஸ்மா வெயில் காலங்களிலேயே அதிகம் வருகிறது. உங்களுக்கு மட்டுமல்ல வேறு பலருக்கும் இங்கு அவ்வாறு வருவதை அவதானிக்க முடிகிறது. அதற்குக் காரணம் வெக்கையான காலத்தில் தூசி, புழுதி, பூஞ்சணம், மகரந்தம் மணங்கள் யாவும் வெக்கையில் காய்ந்து உலர்ந்து காற்றோடு கலந்து விரைவில் எங்கும் பரவுகின்றன. உங்களுக்கு ஒவ்வாத ஏதோ ஒரு பொருள் வெயில் காலத்தில் உங்களைத் தாக்குவதாலேயே அக்காலத்தில் ஆஸ்மா வருகிறது என நம்புகிறேன்.

இது நீண்ட காலத்துக்கு தொடரக் கூடிய தொல்லையாகும் என்பதை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள். தொடர்ச்சியாக இல்லாவிடினும் விட்டு விட்டு வரக் கூடிய நோய் இது. அடியோடு குணமாகியது போலிருக்கும். எங்கிருந்து வந்தது என அதிசயிக்கும் வண்ணம் திடீரென மீண்டும் பிரசன்னமாகும்.

ஒரு சிலருக்கு முற்றாக மறைந்துவிடுவதுண்டு. ஆனால் அது சூழல்கள் மாறுவது, புகைத்தலை நிறுத்துவது போன்ற நோயைத் தூண்டும் காரணிகள் அற்றுப் போவதால்தான் இருக்கும்.

ஆனால் இப்பொழுது நல்ல மருத்துவம் இருக்கிறது. இன்ஹேலர்களை உபயோகிப்பீர்கள் என நம்புகிறேன். அவற்றைச் சரியாகப் பயன்படுத்தி, நோயை நன்கு கட்டுப்படுத்தி, ஏனையவர்கள் போல மகிழ்ச்சியோடு சுகமாக வாழலாம்.

**மருத்துவ ரீதியாக உங்களுக்கு எழும் சந்தேகங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள். அவை தொடர்பில் உரிய மருத்துவர்களின் பதில்கள் எதிரொலியில் பிரசுரமாகும். உங்கள் சுய விபரம் இரகசியமாகப் பேணப்பட வேண்டுமாயின் அதனை மறக்காமல் குறிப்பிடுங்கள். நோயற்ற வாழ்வுக்கு கேளுங்கள். பதிலோடு பயனும் பெறுங்கள்.**



# இசைக்கு இணையம்!

ஆபிரகாம் பண்டிதர் தமிழ் இசையின் வரலாற்றை முன்வைத்து கருணாமிர்தசாகரம் என்கிற நூலை 1917 இல் எழுதினார். அந்த கருணாமிர்தசாகரம் என்கிற பெயரில் தமிழ் இசை ஆராய்ச்சி குறித்த இணையத்தளம் ஒன்றைத் தொடங்கியுள்ளார் இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மான். 'ஏ.ஆர். ரஹ்மான் பவுண்டேஷன்' இதனை நிர்வகிக்கிறது. கவிஞர் குட்டி ரேவதி இந்த இணையத் தளத்தின் உருவாக்கத்தில் பணியாற்றியுள்ளார். 3000 ஆண்டு வரலாறு கொண்ட தமிழ் இசை குறித்த ஆராய்ச்சியை மேற்கொள்கின்றது இந்த இணையத்தளம்.



# பரியேறும் பெருமாள்: இது வேற மாதிரி சினிமா!

● வேணுஜி

மின்விசிறிக் காற்றுக்கும், பதனம் செய்யப்பட்ட குளிருக்கும் பழக்கப் பட்டுவிட்ட நம் உடல் கூட ஜன்னலோரம் எப்போதோ வீசும் இயற்கைக் காற்று பட்டதும் சிலிர்க்கிறது அல்லவா..? வெள்ளித்திரையிலும் அதுபோன்ற ஓர் அனுபவம் எப்போதாவதுதான் நேரும். அப்படியான ஒரு சிலிர்ப்புதான் பரியேறும் பெருமாள். ஆதிக்க மனிதர்களின் சுயநல வக்கிரத்தால் பின்தங்கி விட்ட சமூகத்தில் பிறந்த ஒரு மனிதன், வாழ்வாதாரம் மட்டுமல்லாமல் கல்வி, காதல், தேடல், வழிகாட்டல் என்று வாழ்வின் சகல தேவைகளுக்கும் எப்படிப் போராட நேர்கிறது என்கிற ஒற்றைக் கோடுதான் கதையின் ஒற்றை வரியும். அந்த வேதனையையும் வலியையும் இயல்பாக நம்மிடம் கடத்துவதில் வெற்றி கண்டிருக்கிறார் இயக்குநர் மாரிசெல்வராஜ். கலை வடிவமான சினிமாவைக் காசுக்காகப் பயன்படுத்தாமல் சமூகம் சார்ந்து பயன்படுத்துவதில் "நான் வேற மாதிரி" என்று புரியவைத்த 'மாரி'க்கு வந்தனங்கள்.

ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த நாயகன் வேடத்தில் கதிர். படித்து முன்னேற வேண்டிய அவசியம் புரிந்து சட்டக் கல்லூரியில் சேர்ந்து சூழ்ந்து வரும் இன்னல்களின் வீரியம் புரியாமல், எதையும் எதிர்கொள்ளும் அப்பாவித் தனத்தில் கவர்கிறார். தன் பெயரைச் சொல்லும்போது 'பி.ஏ.பி.எல்'லையும் சொல்லி 'மேல ஒரு கோடு' என்பது அந்த அப்பாவித் தனத்தின் வெளிப்பாடுதான். ஆங்கிலம் வராத கதிரின் கதாபாத்திரம் வெறும் கற்பனையானது அல்ல. விளிம்புநிலை மனிதர்களுக்கான கல்வியில் இந்த ஆங்கிலம், கணக்குப் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் சரியாக அமையாமல் போனதால் உயர்கல்வியைத் தொடர முடியாத அவலம் காலம் காலமாக நம்மைச் சார்ந்திருக்கும் கல்விக் குறைகளுள் ஒன்று. அதில் தொடங்கித் தன் அவலங்களைத் தனக்குள்ளேயே அடக்கிவைத்து காலம் கனியக் காத்திருக்கும் ஒடுக்கப்பட்ட சமூகத்து ஒவ்வொரு இளைஞனின் குறியீடு அவர்.

வெற்றுக் கால்களுடன் வெயில், காடு பாராமல் ஓடுவதில் தொடங்கி தன் நாயைக் காப்பாற்றக் கூடத் துப்பில்லாத அவர் கடைசியில் தன் காதலின் அடையாளத்தையும் உணரமுடியாமல் "அது காதலா என்னன்னு தெரியறதுக்குள்ளயேதான் நாயடிக்கிற மாதிரி கிழிச்சுத் தொங்க விட்டுட்டீங்களே சார்..?" என்று அமைதியாக தோழியின் அப்பாவிடம் கேட்பது மனதை உருக வைக்கும் இடம்.

குலதெய்வத்துக்குச் செய்யும் சேவையாக கூலி வாங்காமல் கொலைகளை அடுத்தவர் அறியாமல் செய்து முடிக்கும் அந்த ஆதிக்க சாதிப் பெரியவரும் மிரள வைக்கிறார். அந்தக் கொலைகளெல்லாம் மறுநாள் தினசரிகளில் வழக்கமான மரணச் செய்திகளாக வந்து ஊர் உலகத்தை நம்ப வைப்பது நம் சமுதாயத்தில் உறைந்து போயிருக்கும் குரூர உண்மை.அந்தப் பெரியவர் கடைசியில் தனக்கே கொடுத்துக் கொள்ளும் தண்டனை கூட சாதீயம் எந்த அளவுக்கு ஆதிக்க மனம் படைத்தவர்களிடம் ஆலவேராய் ஊன்றிப்போய் இருக்கிறது என்பதற்கு சாட்சி.


தன் குடும்பம், சாதியின் அழுத்தங்கள் தெரியாமல் 'சுதந்திர அப்பிராணி'யாக வரும் (கயல்) ஆனந்தியும் முயல் குட்டியாகக் கவர்கிறார். கதிரின் மேல் பரிவு காட்டி அது காதலாக மலர மலர நமக்கு பதைபதைக்கிறது. ஒரு கட்டத்தில் தன் காதல் நியாயமில்லையோ என்றுணர்ந்து நட்பாகவாவது கதிரின் உறவைத் தொடர அவர் சத்தியம் வாங்கிக் கொள்வது நெகிழ்ச்சி.

மாரிமுத்துவின் 'இனம்' என்னவென்று சொல்லாவிட்டாலும் அவரது மூத்த மகளின் திருமண அலங்காரத்தில் ஒரு நடிகரின் படத்தை வைத்து புரிந்துகொள்ளச் செய்துவிடுவது இயக்குநரின் புத்திசாலித்தனம். 'இளையராஜாக்கள் கபடிக்குழு'வும் கூட அப்படி ஒரு குறியீடே.

மிக அழுத்தமான இந்தக் கதையின் கனம் தெரியாமல் நம் தலை மீது இறக்கிவைக்க இயக்குநர் நம்பிய முக்கிய பாத்திரம் யோகி பாபு. "நான்சென்ஸ்" என்று திட்டும் ஆசிரியரிடம் "ஸேம் டூ யூ" சொல்லிக் கல்லூரிக் காட்சிகளில் கலகலக்க வைக்கிறார்.கதையின் ஒட்டுமொத்த செய்தியை கல்லூரியின் அடுத்த முதல்வராகப் பணியேற்ற 'பூ' ராமுவின் மூலம் சொல்கிறார் 'மாரி'.

இந்தக் கதையை இன்னும் பெருவலியுடன் முடித்திருக்க முடியும். ஆனால், என்ன நடைபெற வேண்டும் என்று நாம் விரும்புகிறோமோ அது நடைபெற வேண்டும் என்கிற நம்பிக்கையில் முடிகிற கிளைமாக்ஸ் கலை வெளிப்பாட்டின் காரண காரியத்தைக் கச்சிதமாக உணர்த்தி விடுகிறது.

படத்தில் குறை சொல்லியே ஆக வேண்டுமென்றால் அதன் நீளத்தைச் சொல்லலாம். கல்லூரிக் காட்சிகளில் கொஞ்சம் கைவைத்து, பட வெளியீட்டுக்கு முன்பே பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்திய 'கறுப்பி' நாயின் வேட்டைக் காட்சிகளை அதிகப்படுத்தியிருந்தால் களத்தின் இன்னொரு சுவாரஸ்யத்தை நாம் ரசித்திருக்க முடியும். 'கறுப்பி'க்கான அஞ்சலிப் பாடலின் வலியையும் நாம் முழுமையாக உணர்ந்திருக்க முடியும்.



'எல்லாப் புகழும் இயக்குநர் மாரிக்கே' என்றாலும் இப்படியான நல்ல கருத்துகள் கொண்ட எத்தனையோ படங்களுக்குத் தேவையான படைப்புச் செலவு கிடைக்காமல் நேர்த்திக் குறைவுடன் குறைப்பிரசவங்களாக வெளியாகி நாம் கவனிக்காமல் கடந்து போன படைப்புகள் இங்கே ஏராளமாக இருக்க- அப்படி ஆகிவிடாமல் ஒளிப்பதிவுக்கு ஸ்ரீதர், இசைக்கு சந்தோஷ் நாராயணன் என்று தந்து படைப்பை நேர்த்தியாக்கியதுடன், சிறந்த வெளியீட்டுக்கான சாத்தியத்தையும் தந்து மக்களிடம் சரியாகக் கொண்டு சேர்த்த 'நீலம் புரடக்ஷன்ஸ்' தயாரிப்பாளர் பா.இரஞ்சித்துக்கும் புகழில் பாதி சேரும்.

## சினிமா விழாக்கள்: போலித்தனத்தின் உச்சக்கட்டம் !




● சுரேஷ் கண்ணன்

'க்' இல்லாத சர்கார் இசை வெளியீட்டு விழாவை சிறிது நேரம் பார்த்தேன். சினிமா விழாக்கள் நெடுங்காலமாக அச்சு அசலாக எப்படி ஒரே மாதிரி நடக்கிறது என்று தெரியவில்லை. போலித்தனத்தின் உச்சக்கட்டம். பேசுபவர்கள் அப்படிப் புகழ்கிறார்கள். நாராசமாக இருக்கிறது.

அவர்களின் மைண்ட்வொய்ஸும் கூடவே ஒலிபரப்பாவது போன்ற மென்பொருளைக் கண்டுபிடித்தால் நன்றாக இருக்கும். இவர்கள் எல்லாம் வேறு பிரத்தியேக உலகில் வசிப்பது போன்ற பிரமை. ராதா ரவியெல்லாம் தந்தையின் புகழுக்கே களங்கம். சினிமாக்காரர்களை அப்படிக் கிண்டல் செய்தவர் ராதா.

ரசிகர்களின் அப்பாவித்தனத்தை இப்படி சுயநலத்துக்காகப் பயன்படுத்திக் கொள்ளும் வேறு பிரம்மாண்ட துறை ஒன்று உண்டென்றால் அது அரசியல். ரஹ்மான் போன்றவர்கள் எல்லாம் இதில் சிக்கிக் கொள்வதைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கிறது. நாம் என்னமோ ஒரு மாற்று முயற்சி வந்தால் இந்தத் துறை மெல்ல திருந்தி விடும் போல என்று கனவு காண்கிறோம். ம்ஹூம். அங்கு அமர்ந்திருக்கும் ரசிகர்களின் கூக்குரல்களைப் பார்த்தால் நம்பிக்கையே வரவில்லை. "மே' என்று கத்தும் ரோபோக்களைப் போலவே இருக்கிறது.

ஒரு நல்ல முயற்சி உருவானால், கடற்கரை காலடித்தடம் போல ஒரு பெரிய அலை வந்து அதை அழித்துச் செல்கிறது.

அரசியல், சினிமா என்று பல்வேறு போதைகளில் இருந்து இந்தச் சமூகம் எப்போது விழித்துக் கொள்ளும் என்று தெரியவில்லை. கவலையாக இருக்கிறது.

(1505 முதல் 1948 வரையான யாழ்ப் பாணத்தின் வரலாற்றைக் கட்டுரையாளர் இங்கு தொடராகப் பதிவு செய்யவுள்ளார். இங்கு கூறப்பட்டுள்ள தகவல்கள் பெரும் பாலும் ஆங்கில மூலங்களில் இருந்து பெறப்பட்டவை. தகவல்களில் வேறுபாடு காணப்படும் சந்தர்ப்பங்களில் இரண்டு தகவல்களையும் இங்கு தரவுள்ளதாகவும், அவை தொடர்பில் தான் தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை எனவும் கட்டுரை யாளர் தெரிவித்துள்ளார்.)




# போர்த்துக்கேயர் நிர்வாக முறைமை

போர்த்துகேயர் யாழ்ப்பாணத்தை 32 கோயிற் பற்றுக்களாகவும் வன்னியை 6 கோயிற் பற்றுக்களாகவும் மன்னாரை 7 கோயிற் பற்றுக் களாகவும் பிரித்து ஆட்சி செய்தனர். ஒவ்வொரு கோயிற் பற்றிலும் ஒவ் வொரு தேவாலயங்களும் யேசு சபையின் பாடசாலையும் அமைக்கப்பட்டன.

இவ்வாறு பிரிக்கப்பட்ட கோயில் பற்றுக்கள் வருமாறு:

**வலிகாமம்-14**

நல்லூர்,சுண்டுக்குளி,வண்ணார்பண்ணை,மானிப்பாய்,சங்கானை, பண்டத்தரிப்பு,மயிலிட்டி, வட்டுக்கோட்டை, மல்லாகம்,தெல்லிப்பழை,அச்சுவேலி,புத்தூர், கோப்பாய்

**வடமராட்சி-03**

உடுப்பிட்டி,பருத்தித்துறை,கட்டைவேலி

**தென்மராட்சி-05**

சாவகச்சேரி,நாவற்குழி,வறணி,எழுதுமட்டுவாள்,கச்சாய்

**பச்சிலைபள்ளி-04**

முகமாலை,புலோப்பளை,தம்பகாமம்,முள்ளிப்பற்று.

**தீவகம்-06**

காரைதீவு, வேலணை, ஊர்காவற்றுறை, அல்லைப்பிட்டி, புங்குடுதீவு, நயினாதீவு.

**வன்னி-06**

பூநகரி,பல்லவராயன்கட்டு, பெருங்களி, மாந்தை, நானட்டான், அரிப்பு.

**மன்னார்-07**

சீதாரி,தோட்டவெளி,கரிசல்,எருக்கலம்பிட்டி,சம்பேதுரு,பேசாலை, தலைமன்னார்.

யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கேயர் அமைத்த பாடசாலைகளுக்கு பொறுப்பாக போர்த்துக்கேய அரசனால் நியமிக்கப்பட்ட காப்பாளர்களின் விபரம் வருமாறு

*1.பளை* - Crucifix
*2.அச்சுவேலி* - Holy ghost
*3.மயிலிட்டி* - Our Lady of Angeis
*4.மல்லாகம்* - St.Ignatius
*5.தெல்லிப்பளை* - St Paul and st Peter
*6.பண்டைத்தரிப்பு* - Our Lady Remedies
*7.வட்டுக்கோட்டை* - Assumption of our lady
*8.சங்கானை* - Holy Trinity
*9.காரைதீவு* - Our Lady Remedies
*10. தம்பகாமம* - Nativity of Our Lady
*11.*Cutandaculamr *(சுண்டிக்குளமோ தெரியவில்லை)*

1623ஆம் ஆண்டு ஒலிவேறாவின் கட்டளைப்படி தோம்பு எழுதப்பட்டது. இது 1645ஆம் ஆண்டு திருத்தி எழுதப்பட்டது.


1627ஆம் ஆண்டு பெப்ரவரி 20ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் கடும் புயல் வீசியதுடன் கடலும் பெருக்கெடுத்தது. இராட்சத அலைகள் கோட்டை மதிலுக்கு மேலால் நீரை அள்ளி கோட்டைக்குள் வீசின. கோட் டைக்குள் இருந்தவர்கள் கோட்டைக்குள் இருந்த புதுமை மாதா ஆலயத்தினுள் தஞ்சம் புகுந்தனர். ஊர்காவற்றுறையிலும் ஊர்காவற் றுறை கோட்டைக்குள் இருந்தவர்களும் இவ்வாறே தஞ்சம் புகுந்தனர். கடற்கரையில் நின்ற படகுகள் ஒரு மைல் தூரத்துக்கு அடித்து செல்லப் பட்டன. (பண்ணைக்கடல் மிகவும் ஆழம்குறைந்த கடல். கோட்டை மதிலுக்கு மேலால் இராட்சத அலைகள் கோட்டைக்குள் நீரை அள்ளி வீசியது என்றால் பாக்கு நீரிணையில் அதன் தாக்கம் 2004இல் ஏற்பட்ட சுனாமியை விட கூடுதலாக இருக்குமென நம்பலாம். ஆனால் இந்தச் சூறாவளியின் தாக்கம் பற்றி போர்த்துக்கேயரோ எம்மவர்களோ ஆவணப்படுத்தவில்லை.)

1628ஆம் ஆண்டு திருகோணமலையும் மட்டக்களப்பும் யாழ்ப்பாண நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன. யாழ்ப்பாண நகரத்தில் டொமி னிக்கன் திருச்சபையும் புனித பிரான்சிஸ் திருச்சபையும் கன்னியர் மடமும் இருந்தன. இங்கு நாற்பது தொடக்கம் 50வரையான குருமார் இருந்தனர்.

**சமர் தொடரும்**

**தமிழில் :- புனிதா ராஜேந்திரன்**
(ஆலோசகர்– மொழிபெயர்ப்பாளர்
மூலோபாய தொழில்முயற்சி
முகாமைத்துவ நிறுவனம் (SEMA)
ஜனாதிபதி செயலகம்)





# நஞ்சற்ற நாளைக்காக

9

அதற்கேற்ப, இவ்வொட்டுமொத்த செயற் பாடு, ஒரு தாவரத்தின் வேர்த்தொகுதிக்கு அண்மையில் இடம்பெறுமாயின் காபன், நைதரசன் விகிதம் அல்லது, நைதரசன், பொஸ்பரஸ் அல்லது பொட்டாசியத்தின் விகிதம் பரீட்சிக்கப்படும் தேவையும் உருவாக மாட்டாது.

பண்டைய விவசாயிகள், மரங்களைக் கொண்டு அதிசயங்களை நிகழ்த்தியதாகப் பழைய ஏட்டுச் சுவ டிகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. பல்வேற தாவரங்க ளுடன், செயற்பட்ட பல்வேறு தன்மைகள் இந்நூ லில் குறிப்பிடப்பட்டுள்ளது. 3000 வருடங்களுக்கு முன்னர் எழுதப்பட்டு எமக்குப் பிரமாண்டமான அறி வைப் பெற்றுத் தந்து, இவ்வாறான புத்தகங்களிலுள்ள இப்பரம்பரை ரீதியான, அறிவு, நவீன யுகத்திலும் அழியாது காணப்படுகின்றது. வெண்டி, கத்தரி, நெற்பயிர் எதுவாகவிருப்பினும் அந்தந்தத் தாவரங்க ளுக்குப் பொருத்தமான இயற்கை தொழில்நுட்ப விதிமுறைகளைப் போன்றே, மாங்காயின் நிறத்தை மாற்றுதல், புளிப்புச் சுவையை இனிப்பாக மாற்றுதல் போன்ற இயற்கையான விவசாயத் தொழில்நுட்ப முறைகளும் இப்பண்டைய ஏட்டுச் சுவடிகளில் காணப்படுகின்றன. அவற்றில் தாவரங்களிலேற்படும் நோய்களுக்கு தாவரங்கள் மூலமாகவே சிகிச்சையளித் தல் மேலும் ஆச்சரியமான விவசாய தொழில்நுட் பமாக காணப்படுகின்றது.

அவ்வாறான தொழில்நுட்பமொன்று உலகில் எந்தவொரு இடத்திலும் இதுவரை கண்டுபிடிக்கப் படவில்லை. இதற்கு நேரெதிராக மேற்கத்திய விவ சாயத் தொழில்நுட்பத்தில் நோயேற்படும் தாவரங்க ளுக்கு, கிருமிநாசினி பாவிக்கப்பட்டாலும், அது தோல்விகரமான விதிமுறையாகும் விதம் பற்றி உதா ரணத்துடன் இவ்வாறு விளக்கலாம். எமது உடலைப் போன்றே, தாவரங்களிலும் நோய்கள் தோன்றுகின் றன. நீண்டகாலமாக ஒரு உடல் கட்டிலில் கிடத்தி வைக்கப்படும் போது உடலில் படுக்கைப் புண்கள் தோன்றும். அச்சந்தர்ப்பத்தில் படுக்கைப் புண்களுக்கும் சிகிச்சையளிக்க வேண்டியதாக இருந்தாலும், அது அடிப்படை நோய் ஒன்றுடன் தொடர்புடையதாகத் தோன்றும் இரட்டைத் தன்மையுடைய நோயாகும்.

பிரதான விடயம் அடிப்படை நோய்க்குச் சிகிச்சையளிப்ப தாகும். அங்கு எமது உடல் பரிசோதிக்கப்படுவதைப் போன்றே, தாவரத்தையும் பரீட்சித்தல் வேண்டும். தாவரமொன்றுக்கு நோய் ஏற்படுவதற்கு முன்னர் அதன் இழைய படலத்தில் சிறு மாற்றங்கள் தோன் றும். அது போசாக்குப் பதார்த்தங்கள் குறைவதால் மாத்திரமே இடம்பெறுவதில்லை. எந்தவொரு தாவ ரமும் காணப்படுகின்ற சூழற் தொகுதியில் அதில் தாக்கத்தை ஏற்படுத்தும் காலநிலை மாற்றங்கள் மற்றும் வெப்பநிலை போன்ற பல்வேறு விதமான வேறு மாற்றங்களும் காணப்படுகின்றன. இம்மாற்றங் களைப் பொருத்தமானவாறு சமப்படுத்திக்கொள்ள முடியாத போதுதான் தாவரங்களில் நோய்கள் ஏற்படு கின்றன. அதற்கு கிருமித் தொல்லை மாத்திரமே கார ணமாக இல்லாதிருக்கலாம். அவற்றுக்குச் சிகிச்சைய ளிக்கும் விதம் எமது மூதாதையர் சரியாகத் தெரிந்து வைத்திருந்ததுடன், தாவரமொன்றில் நோய் ஏற்படும் விதம் பற்றியும் லவங்கத் தாவரத்தைப் பாவித்த விதம், மற்றும் வேர்த்தொகுதியின் குறைபாடுகள் காரணமாக மரம் உரியவாறு, உணவை உறிஞ்சிக் கொள்ள முடியாமல் போவதால் ஏற்படும் இரட் டைப் பெறுபேறாக மைட்டா நோய் ஏற்படுகிறது என்பதையும் அவர்கள் தெரிந்து வைத்திருந்தனர். உதா ரணமாக தெங்குப் பயிர்ச் செய்கைக்கு அத்தியாவசி யமான பொட்டாசியம் தேங்காய்த் தண்ணீரில் காணப்படுகின்றது.

அவ்வாறாயினும், இத்தேங்காய் இளனீர் தெங்குக் கைத்தொழிற்சாலைகளில் வீணே வயல்களில் விடுவிக் கப்பட்டு, பயிர்ச் சேதமடைகின்றன. அத் தேங்காய் இளனீரை தெங்குப் பயிருக்கு பாவித்தால் தென்னந் தோட்டங்களின் பொட்டா சியத் தேவையைப் பூர்த்தி செய்யப் போதுமானதாக அமையும். இது நிலத்தைச் சுகப்படுத்தி பயிரைச் சுகப்படுத்தல் என அழைக் கப்படும். அதன் விளைவாக விவசாயி சுகப்பட்டு நாடும் சுகப்படும். இது எமக்குரிய தொழில் நுட்பமானது என்பதால் அதற்காக வெளிநாட்டி லிருந்து எதனையும் இறக்குமதி செய்யவும் தேவை யில்லை. வெப்ப மண்டல நாடாகிய இலங்கை இவ் உயிரியல் செயற்பாடு மிகச் சிறப்பாக இடம்பெறும் ஓரிடமாகும். உதாரணமாக ஜப்பானை எடுத்துக் கொண்டால் அங்கு காணப்படும் அதிக குளிர் கார ணமாக நிலத்திலிருந்து எட்டு செ.மீ. வரை எந்த வொரு நுண்ணுயிரையும் காண முடியாது. அவ் வாறே ரைசொஸ்பியர் செயற்பாட் டைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்கவும் முடியாது. எனவே, அவர் களுக்கு தாவரங்களிலுள்ள வேர் மயிர்களில் முக்கியத் துவம் இல்லை.

**(தொடரும்)**

# எல்லாம் அவள் செயல்



போர்த்துக்கல் அணியின் தலைவராக இருந்த கிறிஸ்டியானோ றொனால்டோ, போர்த்துக்கல்லில் உள்ள மடீரா வில், 1985 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 5ஆம் திகதி பிறந்தார். அடிப் படையில் வறிய குடும்பத்தைச் சேர்ந்த இவரது தந்தையார், உதைபந்தாட்டக் கழகம் ஒன் றில் உபகரணங்களைக் கையாள்பவராகப் பணியாற்றி னார். அவர் 2005 ஆம் ஆண்டு உயிரிழந்தார்.

பின்னர் படிப்படியாக உயர்ந்த றொனால்டோ, போர்த்துக்கல் அணியில் இடம்பிடித்தார். அதன் பின்னர், அந்த அணியையே அவர் தாங்குமளவுக்கு உயர்ந்தார்.

இவர் தலைமையில் போர்த்துக்கல் அணி, ஐரோப்பிய சம்பியன்ஷிப்பை வென்றது. மேலும், அவர் அணியில் இடம்பெற்ற பின்னர் போர்த்துக்கல் அணி பல தடவைகள் உலகக் கிண்ணத் தொடருக்குத் தகுதி பெற்று சாதனை படைத்தது.

இதற்கிடையில், 2003ஆம் ஆண்டு இங்கிலாந்தின் மான்செஸ் டர் கழகத்தில் இணைந்தார். அதன் பின்னர் இவரது புகழ் உலகம் முழுவதும் பரவியது. 2009 ஆம் ஆண்டு றொனால்டோ பாலன் டி ஆர் விருதையும், பீபாவின் சிறந்த வீர ருக்கான விருதையும் வசப்படுத்தி அசத்தினார்.

மான்செஸ்டர் அணியில் 2009 வரை நீடித்த இவர், பின்னர் ஸ்பெய்னின் ரியல் மார்டிட் கழகத் துக்குத் தாவினார். அவரை அந்த அணி சுமார் 90 மில்லியன் யூரோக்களுக்கு வாங்கியது. அதுவரையில் எந்தவொரு வீரரும் அந்தளவுக்கு விலை போகாதமை யால், உலகின் விலையுயர்ந்த உதைபந்தாட்ட வீரராக றொனால்டோ பார்க்கப்பட்டார்.

2009 இலிருந்து ரியல் மாட்ரிட் அணியில் நீடித்த அவர், அண்மையில் இத்தாலிக் கழகமான ஜுவான்டஸ் அணிக்கு மாறினார்.

இந்நிலையில், அவருக்குப் பெரும் தலையிடி ஆரம்பித்துள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த மொடல் அழகியான மயோர்கா கத்தரின், "றொனால்டோ தனக்குப் பாலி யல் தொந்தரவு கொடுத்தார். இதுகுறித்து வெளியில் சொல்லக்கூடாது என்பதற்காக பணம் ஒப்பந்தம் முறையில் கொடுக்கப்பட்டது" என ஜேர்மன் பத்தி ரிகை ஒன்றுக்கு பேட்டி அளித்து சர்ச்சையை ஆரம் பித்து வைத்தார். இதனால் றொனால்டோ நீதிமன்றம் வரை இழுக்கப்பட்டுள்ளார்.

மொடல் அழகி அழித்துள்ள புகாரின்படி, அப்போது 24 வயதான றொனா ல்டோ, லொஸ் வேகாஸில் அவரது உற வினர் மற் றும் சகோதரி யின் கணவர் என மூவருடன் சுற்றுலாவுக் குச் சென்றிருந்தார்.

அப்போது 25 வயதேயான மயோர்க்கா, மொடலிங் துறையில் அறிமுகமான காலம். அவர் இரவு விடு தியிலும் பணியாற்றி வந்துள்ளார். அங்கு அவரைத் தனியாகச் சந்தித்த றொனால்டோ, தனது தனிப்பட்ட அறைக்கு இரவு வரும்படி அழைப்பு விடுத்துள்ளார்.

ஆனால், மாற்று உடை ஏதும் இல்லை என்ப தால் தனக்கு வர முடியாது எனக் கூறிய மயோர்க் காவை, "உடைக்கு ஏற்பாடு செய்கிறேன்" எனக் கூறி, தன்னால் வரும்படி றொனால்டோ கட்டாயப் படுத்தியுள்ளார்.

இதையடுத்து, அன்று இரவு றொனால்டோவின் அறைக்குத் தனியாகச் சென்ற மயோர்க்காவிடம் பாலியல் உறவுக்கு றொனால்டோ கட்டாயப்படுத்தியு ள்ளார். ஆனால் மயோர்க்கா அதற்கு மறுப்புத் தெரி விக்கவே, முத்தம் மட்டும் தந்தால் போதும் விட்டு விடுகிறேன் எனத் தெரிவித்துள்ளார் றொனால்டோ. இருப்பினும் மயோர்க்காவை நிர்பந்தித்து அவருடன் றொனால்டோ பாலியல் உறவு வைத்துக் கொண் டுள்ளார். தொடர்ந்து நடந்த சம்பவத்துக்கு மன்னிப்பும் கோரியுள்ளார் றொனால்டோ.



பரபரப்புச் சம்பவம் இப்படியிருக்க, 2009 ஆம் ஆண்டு அமெரிக்காவிலுள்ள 'நைட் கிளப்'பில் கிறிஸ்ரி யானோ றொனால்டோ, அமெரிக்க மொடல் அழகி யான மயோர்கா கத்தரினுடன் மது அருந்திக்கொண்டு அவருடன் நடனம் ஆடும் காட்சிகள் தற்போது இணையங்களில் பரவி வருகிறது.

இந்நிலையில், மொடல் அழகியின் முறைப் பாட்டை உன்னிப்பாகக் கவனித்து வருவதாக கூறும் பிரபல நிறுவனங்கள், றொனால்டோவுடன் தாம் செய்து கொண்டுள்ள ஒப்பந்தங்களைக் கைவிடும் நிலைக் கும் தள்ளப்பட்டுள்ளன.

இந்த விவகாரம் தொடர்பில் முதன் முறையாகக் கருத்துத் தெரிவித்துள்ள நைக் (Nike) நிறுவனம், தொடர்ந்து இந்த விவகாரத்தைக் கண்காணித்து வருகிறோம் எனத் தெரிவித்துள்ளது. உலகில் அதிக வருவாய் ஈட்டும் நட்சத்திர வீரரான றொனால்டொ கடந்த ஆண்டு மாத்திரம் 70 மில்லியன் பவுண்ட்ஸ் களை ஊதியமாகப் பெற்றுள்ளார்.

Nike நிறுவனம் மாத்திரம் 2016 ஆம் ஆண்டு 760 மில்லியன் பவுண்ட்ஸ் தொகைக்கு றொனால் டோவை ஒப்பந்தம் செய்து கொண்டது. இதேவேளை, இவர் தற்போது விளையாட ஜுவான்டஸ் கழகத்து டன் செய்துள்ள ஒப்பந்தந்தின் படி, றொனால்டோவின் ஆண்டு ஊதியம் 28 மில்லியன் பவுண்ட்ஸ் ஆகும்.

மொடல் அழகி ஏற்படுத்திய சர்ச்சையால், றொனால்டோ சகல விதமான ஒப்பந்தங்களிலும் இருந்து தூக்கி எறியப்பட்டு தனி ஆளாக நிறுத் தப்படும் பரிதாபம் ஏற்பட்டுள்ளது.

இதன் முதல் கட்டமாக போர்த்துக்கல் அணி, விளை யாடவுள்ள போட்டி ஒன்றுக்கான தனது குழாமிலி ருந்து றொனால்டோவை நீக்கியுள்ளது. இது அவ ருக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

இதே நிலை நீடித்தால் றொனால்டோ விளம்பரத் தூதுவராக இருக்கும் நிறுவனங்களும் அவரைக் கைவிட வாய்ப்பு உள்ளது. இதனால் அவரது எதிர் காலம் கேள்விக்குறியாகிவிடும்.

மொடல் அழகியின் முறைப்பாடு, பெரும் பர பரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில், றொனால்டோ அதைக் கடுமையாக மறுத்து வருகின்றார். எனினும், தொடர்ந்து வெளியாகிக்கொண்டிருக்கும் ஆதாரங்கள் அவருக்கு எதிராகவே அமைகின்றன.

றொனால்டோவுக்கு இரண்டு மகன்களும், இரண்டு மகள்களும் உள்ளனர். இதில், முதல் மகனின் தாய் குறித்த விவரத்தை றொனால்டோ வெளியே தெரி விக்கவில்லை. அடுத்ததாக, வாடகைத் தாய் மூலம் இரட்டைக் குழந்தைகளுக்குத் தந்தையானார். அதன் பின்னர் தனது காதலி ஜோர்ஜியானா ராட்ரீகஸ் மூலம் மற்றொரு பெண் குழந்தைக்குத் தந்தையாகியு முள்ளார்.

தற்போதைய இந்தச் சர்ச்சை குடும்ப விவகாரத்திலும் தாக்கம் ஏற்படுத்தக் கூடும்.

இப்பத்திரிகை மானிப்பாய் வீதி, உடுவில் என்ற முகவரியிலுள்ள அம்பலம் பதிப்பகத்தால், 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 10.10.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.